
தமிழர் கண்ட மனம்



கரு. நாகராசன்

தமிழர் கண்ட மனம்

கரு. நாகராசன்
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
அடையாறு—சென்னை-600 020.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	Tamiḻar Kaṇṭa Maṉam
Author	—	Karu. NAGARAJAN Research Scholar, International Institute of Tamil Studies, Madras-600 020.
Publication Number	—	24
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	December, 1980.
Paper used	—	18 Kg Hindustan ptg
Size of the book	—	21×14 Cms
Printing type used	—	10, 12, 14, 18 points
No. of Copies Printed	—	1200
Number of Pages	—	xii+202
Price	—	**Rs 9/= (Rupees Nine)**
Printers	—	Novel Art Printers, Madras—600 014. Phone : 82731
Binding	—	Paper back
Artist	—	Amudhone
Subject	—	Concept of mind of the Tamils.
Summary	—	This is the first book deals with the concept of mind of the Tamils.

இந்நூல் மதுரையில் 1981 சனவரி மாதம் நடைபெற விருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியிடப் படுகிறது.

செ. அரங்கநாயகம்
கல்வித்துறை அமைச்சர்
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009

அணிந்துரை

அண்மையில் நடைபெற விருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தமிழாராய்ச்சி நிறுவனம் முன்னரே "தமிழர் நாட்டு விளையாட்டுகள்" "தமிழர் ஆடைகள்" என்ற தலைப்புக்களின் கீழ் இரு ஆராய்ச்சி நூற்களை வெளி யிட்டுள்ளதை நாம் அறிவோம். அந்நடைச் சுவட்டினிலேயே தொடர்ந்து இப்போது அந்நிறுவனம் "தமிழர் கண்ட மனம்" எனும் இவ்வாராய்ச்சி நூலினையும் வெளியிடுகிறதென்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்குமொரு நற்செய்தியாகும்.

மக்கள் வாழ்வினை நன்கு மலரச் செய்து மகிழ்விப்பதற்கு அவர்களணியும் நானாவித ஆடைகள், தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் சில பல விளையாட்டுகள் போன்ற அவர் தம் ஐம் பொறிகட்குப்புலனாகும் புறப்பொருட்களைக்குறித்த ஆராய்ச்சி யினை முன்னர் கூறிய இரு நூல்களும் சுட்டுகின்றன. அதனால் அத்தகு மகிழ்ச்சி நல்கும் வினைகளை நேர் நின்று அனுபவிக்கும் அகப்பொருள் தானே மக்கள் தம் 'மனது'?. அம்மனதினைக் குறித்த ஆராய்ச்சி எண்ணற்கு அத்யாவசியமானது மட்டுமன்று; மிகவும் நுண்ணியதுமாகும். மனத்துணிவும், மனத் திட்பமு முடைய ஒருவரால்தான் இவ்வாராய்ச்சியிலீடுபட்டு ஓரளவாவது வெற்றி காணவியலும். அத்தகு நல் முயற்சியில் திரு கரு. நாகராசன் போன்ற இளைஞர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, ஆழமான தன் ஆய்விலே பெரியதொரு வெற்றியுங் கண்டுள்ளாரெனும்போது அன்னாரை நாமனைவரும் மனமார, உளமார வாழ்த்தத்தான் வேண்டும். மேலும் அன்னாரின் இத்தகைய சீரான பணிகள் நேராகத் தொடர்ந்து வற்றாத ஆறாக ஓடிக் கொண்டேயிருக்க வேண்டுமெனவும் நம் உளத்தின் நிறைவான ஆசையினையும் வெளியிட இதுவொரு வாய்ப்பாக அமைகிறது. தன் நன்றியுரையில் திரு கரு. நாகராசனார், "இந் நூல் ஆய்வின் முதல் நிலையே; இதுவே முழு நிலையடையும்

போது பல புதிய உண்மைகளைத் தமிழ்கூறும் நல்லுலகம்பெறும் என்பது உறுதி'' என்று கூறியிருப்பது மேற் சொல்லப்பட்ட நம் நியாயமான அவாவிற்கு ஓர் அரணாகவமைகிறது.

நற்றிணை, புறநானூறு முதலிய பண்டைய நூல்கள் தொடங்கி, அப்பர் தேவாரம், மணிவாசகர் திருவாசகம், திருமூலர் திருமந்திரம், ஆழ்வாராதிகள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம், தாயுமானார் பாடல்கள் முதலிய திவ்ய நூல்களினூடே சமீப கால ஜோதி இராமலிங்கனார் திருவருட்பா, பாரதியார் கவிதைகள் வரையுள்ள பத்து நூற்களைத் தளமாகக்கொண்டு இவ்வாராய்ச்சியெனுங் கட்டிடத்தை சமைத்துள்ளார் இந்நூலாசிரியர்.

மனமென்பது ஒரு முழுநிலை. அதன் பல பகுதிகள்தாம் நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் முதலியன. மனம் நைந்த நிலையினை நெஞ்சம் காட்டுகிறது. மனதினுள்ளிருப்பதால் 'உள' மாயிற்றென்பது திருமூலர் கூறும் ''உள்ளத்தினுள்ளேதான் கரந்தெங்கும் நின்றவன்'' என்ற அடியால் தெரிகிறது. 'உள்ளம்' உணர்ச்சிகள் ஒடுங்கிக் கிடக்குமொரு இடம். உளம் நெகிழ்வதைக் காட்டும் பதம் 'அகம்'. மேலும் பற்றுக்கள் ஊற்றெடுப்பது அகத்தில், இவ்வாறு பாரதியார் புகன்றுப் போந்தார். சிந்தித்தலை அடிப்படையாகக் கொண்டது 'சித்தம்' மனம் தெளிந்த நிலையினை யுணர்த்துவது ''சிந்தை'' யெனுஞ் சொல். சிந்தித்தால் தானே தெளிவு ஏற்படும்? சிந்தையிலிருந்து தோன்றும் உண்மைகள், முடிபுகள் ''சிந்தனை''யாகின்றன. ''மெய்யடியார் சிந்தை யிறப்போ நின் தியானம்''? தியானத்திற்கு இது ஒரு செம்மாந்த விளக்கம். 'சித்து' எனும் 'அறிவைக்' குறிக்கும் சொல்லின் அடிப்படையில் பிறந்த சொல் 'சித்தம்', 'இதம்' என்ற பதத்திலிருந்து 'இதயம்' என்பது தோன்றியிருக்க வேண்டும். இதயம் 'மருள், அறியாமை' என்ற இருநிலைகளைக் கொண்டதாகத் திருமூலர் தம் ''இருளும் வெளியும் போல் இரண்டாம்; இதய மருள் அறியாமை'' என்கிறார். 'மனம்' மனிதப் பிறவிக்கு மட்டுமே தரப்பட்ட தனிச்சொத்து. அவனை இயக்கிக் கொண்டிருப்பதே 'மனம்'. ''ஒளியை யுன்னி உருகு மனத்தராய்'' என்கிறார் திருமூலர். மனம், அறிவு இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனை வள்ளலார் ''மனமான ஒரு சிறுவன் மதியான குருவையும், மதித்தால்'' என்று சொல்லி விளக்குகிறார். (ஆனால் பெரும்பாலும் நடைபெறுவது மனம் மதியை ''மதிப்பதில்லை''—மிதிக்கிறது.)காற்றினுங் கடிது

செல்லும் மனத்தினும் உயர்ந்தது "அறிவு" என்று இதனால், பெறப்படுகிறது. இதனால்தான் அவர் இயங்கா மனனும், கயங்கா நிலையும் இக பரத்தே—மலங்கா அறிவும் தியங்கா நெறியும் மகிழ்ந்தருள்வாய்'' என்று இறைவனை மன்றாடி வேண்டுகிறார். இது போன்ற செம்மையான கருத்துக்கள் இந் நூலினூடே பரவலாய்க் கிடக்கின்றன.

''நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்ற பாரதியார் கூற்றிற்கேற்ப நாம் நம் மனக்கோட்டத்தினால் மனக்கோட்டைகள் பலகட்டி, மனக் கவலையுற்று, மனச் சான்றிற்குப் புறம்பாக நடந்து, மனப் போராட்டத்தில்பட்டு, மனமுடைந்து, ''குறிக் கோளிலாது கெட்டேன்'' என்று அப்பரடிகள் சொல்வதுபோல நம் வாழ்க்கையை அவலமாக முடித்து, மாயாமல் 'மனம் போலத்தான் வாழ்வெ'ன்பதை யுணர்ந்து, பவணந்தி முனிவர் கூறுவதுபோல ''மனக் கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பினை'' நன்கு தேர்ந்து, ஆழ்ந்து வூர்ந்து, ''கற்றபின் அதற்குத்தக" நின்று, ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என அகத்தே கொண்டு ''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்து" மனக் கவலை மாற்றி வாழவகை செய்து, வழி காட்டுகிறது இச் சிரிய நூலாராய்ச்சியென்றால் மிகையாகாது.

''கடல் போன்ற ஆழமும், மலைபோன்ற உறுதிமிக்க உயர்வும், வான் போன்று விரிந்து பரந்த தன்மையுங் கொண்ட ''தமிழர் கண்ட மனம்'' எனப் பெருமிதம் கொண்டு ஆர்ப்பரிக்கின்றார் ஆசிரியர். இவருடைய இம்மாட்சி மிக்க அகக்காட்சி தமிழகத்தில் என்றென்றும், எங்கெங்கும் நிலைத்து நின்று ஆட்சி பெறவேண்டுமென்ற எம் வேட்கையினைத் தெரி வித்து ஆசிரியரை ''வாழ்க, வளர்க''வென வாழ்த்தி, தமிழர் பண்பாட்டினை உணர்த்தும் பல்வேறு தகைசான்ற நூற்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து வெளியிடவேண்டு மென்ற என் உள வேட்கையினைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

செ. அரங்கநாயகம்

முகவுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை-600020

தமிழர் பண்பாட்டை உணர்த்துவதற்குப் பல நூல்களை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. அதில் 'தமிழர் கண்ட மனம்' என்ற நூலும் சிறப்பாக அமைகின்றது. தமிழருக்கு எனத் தனித்தன்மைகள் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. தத்துவ அடிப்படையில் தமிழர்கள் 'அகக் கரணங்கள்' பற்றி ஆழமாகப் பார்த்திருக்கின்றார்கள். வரலாற்று அடிப்படையில் 'சங்க காலம் தொடங்கி பாரதியார் வரை தமிழர்கள் மனம் பற்றி என்ன நினைத்தார்கள்; மனம் பற்றிய அவர்களுடைய கருத்துக்கள், கொள்கைகள் என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்வதற்கு முயன்றுகொண்டு இருக்கின்றார் ஆய்வாளர் திரு கரு. நாகராசன் அவர்கள்.

இந்த அருமையான நூலில் நெஞ்சம், மனம், உள்ளம், சிந்தை போன்ற சொற்கள், தொடர்கள் அனைத்தையும், சங்ககாலம் முதல் பாரதியார் வரை பல இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றில் இருந்து செம்மையாகத் தொகுத்து ஆழமாக நுணுகிக் கண்டு பல கருத்துக்களைக் கூறியுள்ளார். அவருடைய முயற்சியும் உழைப்பும் பாராட்டத்தக்கன, வளரும்

இளைஞர்; தமிழுக்குப் பல தொண்டு ஆற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்நூலை நிறுவனம் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

இந்நிறுவனத்தின் தலைவர், கல்விஅமைச்சர், மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக அமைந்து எங்களை வளர்த்து வருகின்றார். அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றி உடையோம்.

இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் உரிமையாளர், கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

அன்பன்

15—12—80
சென்னை—20.

ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

"ஒவ்வொரு நூலுமே ஒவ்வொரு குழந்தைக்குச் சமம்; உண்மையில் இந்நூற் குழந்தைகள்தான் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்குப் பின்னும் நம் பெயரை நிலை நாட்டும் தன்மை பெற்றன" என்பார்கள் இந்நிறுவன இயக்குநர் டாக்டர். ச. வே. சுப்பிரமணியன் அவர்கள். அவ்வகையில், எனது இந்நூற் குழந்தை வெளிவரத் துணை செய்த அன்பு நெஞ்சங்களை நன்றி உணர் வோடு நினைந்து போற்றுகின்றேன்.

தமிழர் கண்ட மனத்தைப் பற்றி நினைக்கும் நிலையை என் மனத்திற்கு அளித்து உதவிய அறிஞர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் அமைத்துக் கொடுத்த அரங்கை மையமாகக் கொண்டே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஆய்வின் முதல் நிலையே; இதுவே முழுநிலையடையும்போது பல புதிய உண்மைகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெறும் என்பது உறுதி. ஆய்வு செய்யும் வாய்ப்பை அளித்து உதவியதோடு, இந்நூலையும் வெளிக் கொணர்ந்து உதவிய இயக்குநர் அவர்களை நன்றி உணர்வோடு போற்றி வணங்குகின்றேன்.

இந்நூற்படியினைப் படித்துப் பிழைதிருத்தமும் செய்து உதவிய அருட்கவி அரங்க. சீனிவாசன் அவர் களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுத் தொடர்பான செய்திகளை அவ்வப்போது வழங்கி உதவும் டாக்டர். அன்னிதாமசு அவர்களுக்கும், இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் உதவிய இனிய நண்பர்கள் அனைவர்க்கும் இதயம் நிறைந்த நன்றி களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தனது ஓவியத்தின் மூலம் மனத்தைப் படம் பிடித் துக் காட்டிய ஓவியர் அமுதோன் அவர்களுக்கும் நாவல் ஆர்ட் பிரிண்டஸ் உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சி யப்பன் அவர்களுக்கும் என் நன்றிகளை உரிமையாக்கு கின்றேன்.

15—12—80
சென்னை—20.

கரு. நாகராசன்

உள்ளே

Introduction

Certainly, this work does not claim to be a philosophical and psychological treatise; nor is it attempting at an interpretation of the Tamil classics in the light of the psychoanalytical theories of the Western Scholars. On the other hand, this writer has consciously seen to it that the concepts and formulations of the 'specialists' in the field does not intrude into this work.

The reasons are many. Foremost among them is the fact that the Tamils had been a unique race with a highly individualistic culture and traditions of its own, which this writes has been emphasizing throughout. This being so, the present writer wants to tell the world about the pioneering excellence of the Tamils not only in the *art* of living but in so sophisticated a field as psychoanalysis. It is true, the Tamils did not bother to come out with 'systematic' psychological and philosophical theories. But it does not mean that there prevailed in them a vacuum as regards these complex fields. On the other hand, as their literatures bear unmistakable evidences, the Tamils had an astonishingly profound understanding of the psychic and psycho logical forces operating in and on man. Their minute and penetrating study of the phenomenon of human mind has compelling evidences in their literatures. One cannot but marvel at their a searching insights into the extraordinarily complex

unpulses, emotions and feelings which spring from the centres of human consciousness as well as unconsciousness. One is tempted to suggest that had freud and Jung and their illustrious followers had some knowledge of this priceless body of artefacts their theoritizations of the human psyche and what is called 'collective unconscious' and especially the Freudian findings on dreams and the unconscious emotions connected with libido would have got a more convincing, more comprehensive treatment.

But the present-day Tamils are destinied to a painful course of existence. It is their attitude towards the inexhaustibly rich records of human life they have inherited from their prophetic ancestors which is totally responsible for the comparative obscurity of their exemplary culture and civilization. We are more than prepared to exclaim that Shakespeare is the **unsurpassable** genius in his 'true-to-life' portrayal of human life and in his grasp of the complex passions and emotions of human heart. We unhesitatingly acknowledge that Homer and Virgil and Dante and Tolstoy are the artists of supreme excellence. Who is responsible to the state of affairs in which Kapilar and Nakkīrar, Ilanko and Kampar are still 'regional' poets? Who is to be held accountable for the painful fact that our Tolkāppiar is far, far 'inferior' to Aristotle in terms of universal recognition and acceptance inspite of the unthinkably deep imaginative riches and scholarship which Tolkāppiam embodies? We hardly have the right to claim for ourselves the privilege of being the inheritors of that exemplary culture.

What is now needed is not more and more interpretations of caṅkam and the post-caṅkam poetical works. We have interpretations and interpretations. They do not take us anywhere. We need objective, scientific studies of our artworks with their conceptual frameworks clearly defined. We need **Competent** scholars trained in the art of criticism, who are capable of seeing literature in its true perspective. We need, in addition to Varadarajans and Manickams, critics who **could** unfathom

the psychological, mythic sociological and historical riches buried into our literatures. The poems in the Eight Anthologies are not merely the aesthetic records of the passional and cerebral lives of the caṅkam Tamils. They contain in them valuable treasures of psychological interest; humanistic concern sociological material and so on. Each poem there can speak volumes about the varied realms of knowledge and human thought which the unacknowledged legislators' of the age were well-versed with Dr. Varadarajan's **Ōvaceiti** is an instance at point, where he has tried to explore the psychological, historical and ethical undertones embodied in a single poem. From such studies must evolve systematic theories of thematic and outologi cal concerns. It is possible to construct a theory of Dreams from the Caṅkam poems and the post-caṅkam epics, a b`gin-ning for which has been made in Dr. S.V. Subramanian's **Ilakkiya Kanavukal** (Dreams in Literature). As things stand in the world of literature today, such studies alone will resurrect and regenerate the values of our literature which are in a process of steady dissolution. Our tendency to view our ancient works of art as mere imaginative pieces must give place to viewing them as the oeuvre of the various disciplines of human thought prevalent in those days, since the people living in the early phases of human civilization had been so imaginative and artistic and sensuous that whatever they wanted to write-be it philosophy or religion or politics-they wrote in the form of poetry.

And the present work **The Tamil Concept of Mind** is an attempt in that direction, in the direction of trying to see the different facets of human thought which find expression in ancient Tamil poetry. As a first step, this work attempts at elucidating the concept of mind in Tamil poetry through the ages. In the course of this study it was marvelled to see that the Tamils' concept of mind and the cerebral characteristics neatly agree with the findings of the modern philosophers and psychoanalysts. What is more the various terms they have coined

for the mind to suit its varied states and functions such as 'ullam', 'Cintai' and so on stand far ahead of the scientific theories on mind which we have so laboriously constructed.

To repeat, this book is merely an introduction, a prologue done solely with the desire of paving the way for a comprehensive study of the characteristics of human mind as revealed in Tamil poetry. This study urge the fellow men, people who are genuinly interested in the 'propagation' of the great cultural heritage of their ancestors, the scholars who have dedicated themselves for the cause of unearthing the great treasure of their forefathers to raise to the occasion, shed their craze for whatever is foreign and to rededicate themselves toward discovering 'values' which their literature has embodied abundantly. This is the sole motive which impelled to venture this complex task. This work is placing in the hands of the Tamils with full confidence that this work will take them on and on towards better, more systematic works on these ilnes.

தமிழர் கண்ட மனம்

தமிழின் சிறப்பு

'உயர்தனிச் செம்மொழி' என்று பெருமை பெற்றுச் சிறந்த மொழிகளுள் தமிழும் ஒன்று. இலக்கிய வளமும் இலக்கண ஆழமும் பெற்றுயர்ந்து, பிறமொழிகளின் துணையின்றியே தனித்தியங்கும் தன்மை பெற்று, செம்மையோடு அமைந்த மொழியைத்தான் 'உயர்தனிச் செம்மொழி' என்று குறிப்பிட்டனர். அத்தகைய பெருமை பெற்றுச் சிறந்த மொழிகள் ஐந்து. ஆரியம், எபிரேயம், இலத்தீன், கிரேக்கம், தமிழ் என்பன அவை. அந்த மொழிகளுள் ஏனைய நான்கு மொழிகளும் இன்று எந் நிலையில் உள்ளன என்பதே கேள்விக்குறியாகி விட்டது. இலக்கிய வழக்காறற்றுப்போன மொழிகளும், பல புதுமொழிக் குழந்தைகளைக் 'கலப்புத் திருமணத்தின்' மூலம் ஈன்றெடுத்து விட்டுத் தங்கள் வாழ்வை இழந்த மொழிகளும் உண்டு; மொழி என்ற நிலையை இழந்து சொற்கள் வடிவோடு ஏனைய மொழிகளில் புகுந்து உயிர் வாழும் நிலைக்கு வந்துவிட்ட மொழிகளும் உண்டு. ஆனால் அன்று முதல் இன்று வரை என்றும் 'சீரிளமைக் கன்னி'யாக வாழும் சிறப்பைப் பெற்ற ஒரே மொழி நம் தாய் மொழியாகிய தமிழே! இவ்வுண்மையை நினைக்கும்போது ஒவ்வொரு தமிழனும் பெருமையோடு நெஞ்சை நிமிர்த்தி நிற்கலாம். அதே சமயம் இத்தன்மையைத் தமிழ் பெற்றுச் சிறக்கத் துணைசெய்த நம்முன்னோர்களையும் வியந்துபோற்றி அவர்தம் வழிநின்று மொழிப்பணியாற்றவேண்டும் என்ற உணர்வினையும் நாம் அனைவரும் பெற்றாகவேண்டும்.

தமிழ் காலத்தைவென்று கன்னியாகவே சிறப்புற்றோங்கி வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே தெளிவான இலக்கண அமைதியைப் பெற்ற மொழி இது; பேசப்படும் மொழிக்கு மட்டுமன்றிப் பேசும் மக்களின் வாழ்விற்கும் இலக்கணம் காட்டிச்சிறந்த மொழி இது; அவ்வப்போது காலத்தின் மாற்றத்தாலும், கருத்துகளின் வளர்ச்சியாலும் மொழியில் அடையும் மாற்றங்களையும்கூட முறைப்படுத்தி அதற்கும் இலக்கண விதிகளை அமைத்து அரண் அமைத்து ஆண்டபெருமைக்குரிய மொழியிது; தொல்காப்பியத் திற்குப் பின்பு தோன்றிய நன்னூலே இவ்வுண்மைக்கு ஏற்ற நற்சான்று.

எத்தனையோ மொழிபேசும் மக்கள் இந்நாட்டில் வந்து வாழ்ந்த போதிலும், அவர்களுடைய மொழிகளும் இங்கு பேசப் பட்ட போதிலும் அதனால் எவ்விதப் பாதிப்பையும் அடையாது பாதுகாப்பைப் பெற்ற மொழி தமிழ். வடமொழியின் வரவால் தமிழ் தன்னிலையினின்றும் திரிந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபோது, வந்த மொழி எது? சொந்த மொழி எது என்ற எல்லைகளை வகுத்துக்காட்டி 'தற்பவம்' 'தற்சமம்' என்ற அரண்களை அமைத்தனர் அறிஞர்கள். அதனால் வடமொழி தமிழில் புகுந்து ஆதிக்கம் செய்ய இயலாமற்போயிற்று! இந்த நிலை கன்னடம், களிதெலுங்கு, மலையாளம், துளுவிற்கு இல்லை. அதனால்தான் அம்மொழிகள் தங்களது தனித்தன்மைகளை இழந்து நிற்கின்றன.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன்னுதிரத் துதித்தெழுந்து ஒன்று பல வாயிடினும் ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாஉன் சீரிளமைத் திறம் வியந்து..." என்று மனோன்மணீயம் ஆசிரியர் வியந்து பாராட்டும் பாங்கில் தமிழின் சிறப்பும், கடந்தகால வரலாற்று உண்மையும் அடங்கியுள்ளதை அறிதல்வேண்டும். இவையனைத் துக்கும் மேலாக நாடாண்ட மன்னர்களும் தங்களது நல்லுயி ரெனத் தமிழைப் போற்றி வளர்த்தனர்; தமிழ்பாடும் புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளம்பெறும் வண்ணம் காப்பியங்கள் பல செய்யத் துணை நின்றனர்.

"சந்தணப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்திர பாண்டிய னெனுந்தமிழ் மாறனும்

சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப''

என்று பாண்டிய நாட்டின் பெருமை கூறும் அப்பாடல், அந் நாட்டின் பெருமையே அங்கு வளர்ந்த அழகுத் தமிழால் தான் என்று குறிப்பிடுவது சிந்தித்தற்குரியது.

உலகமொழிகள் பிறவற்றிற்கில்லாத பெருஞ்சிறப்பு ஒன்றும் தமிழுக்குண்டு. அதுவே இறைவனால் விரும்பும் பெருமையைப் பெற்றது! இறைவனே புலவனாக வீற்றிருந்து தமிழை ஆய்ந் தான் என்ற செய்தியைப் பழந்தமிழ்ப் பாடல்களாலும் பிற்காலப் பாடல்களாலும் அறிய முடிகிறது.

''கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெளிந்து ஆய்ந்தநற் பசுந்தமிழ்''

என்று புலவர் போற்றும் பெருமை தமிழுக்கே உண்டு. 'பித்தன் என்று தன்னை இகழ்ந்து பேசிய சுந்தரரையும்கூட 'சொற்றமிழ் பாடு' என்று தான் அன்போடு பணித்தான் இறைவன். இப்படி மக்களாலும், மன்னர்களாலும் மட்டுமன்றி, இறைவனாலும் விரும்பிப்போற்றி வளர்க்கப்பட்ட நந்தம் தாய்மொழியாகிய தமிழ், வானோர் அமுதத்திற்கு இணையாக வைத்துப்போற்றும் சிறப்பும் பெற்றது. இத்தகைய சிறப்பிற்குரிய ஒருமொழியைப் பெற்றதுவே தமிழினத்தின் சிறப்பிற்குக் காரணம்.

தமிழினத்தின் சிறப்பு

''தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு''

என்று பாடினார் நாமக்கல் கவிஞர். உலகில் எத்தனையோ இனங்கள் தோன்றியதுண்டு; தோன்றியதுபோலவே மறைந்து விட்ட இனங்களும் உண்டு; தன் பழம் பெருமையை இழந்து விட்ட இனங்களும் உண்டு! ஆனால், ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி'' யாகிய தமிழினம் உலகையாண்ட பெருமைக்குரியது. உலகில் முதன் முதல் தோன்றிய இனம் என்ற சிறப்பிற்குரியது; கடலொடு கலந்த இலெமோரியாக் கண்டத்தில் வாழ்ந்து சிறப்புப் பெற்று பல்வேறு இனமக்களையும் தோற்றுவித்த தாய்மைத் தன்மை யுடையது. ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குமுன்பே நாகரிகம் பண்பாடு போன்ற உயர்ந்த நிலைகளை உருவாக்கிக்கொண்டு

வாழ்ந்த இனம் இது; அறியாமை இருளில் உலகமே ஆழ்ந்திருந்த போது அறிவொளிபரப்பும் ஞாயிறாகத் திகழ்ந்த இனம் இது. காட்டுமிராண்டிகளாகவும் நாடோடிகளாகவும் உலகில் பல இனத்தவர் அலைந்து திரிந்தபோது நாடு, நகரங்களை ஆக்கி நல்வாழ்வு வாழ்ந்த இனம் தமிழினம். ஹரப்பா, மொகஞ்சதரோ போன்ற இடங்களில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் சிறப்புமிக்க சிந்துவெளி நாகரிகமே தமிழர் நாகரிகம்தான் என்ற உண்மையை உலகறியச் செய்துள்ளது. இத்தகு பெருமைகளெல்லாம் தமிழினத்திற்கு உண்டு என்பதை உணர்ந்ததால்தான் அதை ஒப்பற்ற இனம் என்ற பொருள் படுமாறு 'ஒரு இனம்' என்று குறிப்பிட்டார் நாமக்கல் கவிஞர். அந்த ஒப்பற்ற இனத்திற்கென்று சில தனிப்பண்புகள் இருக்கத் தான் செய்தன.

அறவழியில் பொருளீட்டி இன்பம் துய்த்தல்; அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை போன்ற தன்மைகளைப் பெற்றுச் சான்றோராய் விளங்குதல்; புகழுக்காக உயிரையும் கொடுத்தல்; பழிவருமெனின் உலகமே பரிசாக வருமெனினும் ஏற்றுக்கொள்ளாமை; ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகப் பேணுதல்; மானமே வாழ்வின் அடிப்படையாகக் கருதுதல்; மறத்திற்கும் அன்பு அடிப்படையென்றுணர்தல்; உலகத்தோடு ஒட்டஒழுகுதல்; மகளிர்க்குக் கற்பே உயிர் என்று எண்ணுதல்; ஒருவனுக்கு ஒருத்தி என்பதையே வாழ்வின் இலட்சியமாகப் போற்றுதல்-இவையெல்லாம் தமிழர் வாழ்வில் காணக்கூடிய தனித் தன்மைகள். இருந்தோம்பி இல்வாழ்வது, விருந்தோம்பி வேளாண்மை செய்தற்கே என்ற உயர்ந்த கொள்கையும் உடையவர்கள் தமிழர்கள். காதல், வீரம், ஈகை இவையெல்லாம் தமிழரின் தனித் தன்மைக்குரிய எடுத்துக்காட்டுக்கள்.

தமிழரின் மனம்

தமிழர் பண்பட்ட அறவாழ்வு வாழ்ந்ததற்குக் காரணமே அவர்கள் பெற்ற பெருமைக்குரிய மனம்தான். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற கொள்கையுடையவர்கள் தமிழர். அனைத்திற்கும் நாமே காரணம் என்றால், நாம் நன்மை செய்து பெருமையடைவதற்கும், தீமை செய்து இன்னலுறுவதற்கும் காரணமான ஒரு பேராற்றல் நம்மிடம் உண்டு என்பது புலனாகிறது. அந்த ஆற்றல் நல்ல முறையில் பயன்படும்போது நன்மை

களை மட்டுமே செய்கின்றோம்; சான்றோர்களாக் வாழ்வில் மேன்மை பெறுகின்றோம்; அதற்கு மாறாகப் பயன்படும்போது தீமைசெய்து தீராப்பழிக்கு ஆளாகின்றோம். அத்தகைய பேராற்றலையே மனம் என்று கூறுகிறோம். தமிழர் மனம் உயர்ந்திருந்ததுவே தமிழரின் வாழ்வும்உயர்ந்ததற்குக் காரணம். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற நோக்கமுடையவர்கள் தமிழர்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"[2]

என்பதல்லவா தமிழ்மறை கூறும் உண்மை! தமிழர் மனம் நுட்ப மானது; ஆழமானது; பல்வேறு வகையான உணர்ச்சிகளைக் கொண்டது. அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாட்டிற்கேற்ற வெவ் வேறு சொற்களையும் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். மனம் என்பது பொதுவானதாகவும் தலைமைத் தன்மையுடையதாக வும் விளங்குகிறது. நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்ற சொற்கள் மனத்தில் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் சொற்களாகத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். இவை களிடையேயுள்ள நுட்பமான வேறுபாடுகளைக் கருதி இடமறிந்தே ஏற்ற சொற்களைப் பெய்து புலவர்கள் பாடி யுள்ளார்கள். ஆனால் பிற்கால உரையாசிரியர்கள் அதன் நுட்பம் உணராமல் எல்லாமே ஒன்றெனக்கருதி உரையெழுதிப் போந்த மையும் தெரிகின்றது. இம்முரண்பாட்டைப் போக்கும்விதத்தில் ஒவ்வொரு நிலைகளையும் தனித்தனியே எடுத்து ஆய்ந்து மனத் திற்கும் அந்த நிலைகளுக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்து வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

மனத்தின் மாண்பு

உயிரினங்களை அவற்றிற்கு அமைந்த அறிவின் அடிப்படை யில் ஆறுபெரும் பிரிவுகளாகப் பிரித்தார் தொல்காப்பியர். ஏனைய உயிரினங்களையெல்லாம் ஐந்து அறிவுக்குள் அடக்கி யவர், ஆறாம் அறிவைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஆறறிவதுவே அவற்றொடு மனனே" என்று குறிப்பிடுகின்றார். எனவே ஆறாவது அறிவு என்று அவர் கருதுவது மனத்தையே! அந்த மனத்தைப் பெற்றதனால்தான் மனிதன் ஏனைய உயிரினங் களைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறான். ஏனைய உயிரினங் களைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'ஓரறிவினவே' 'ஈரறி

வினவே' என்று குறிப்பிடும் தொல்காப்பியர், மக்களைமட்டுமே "மக்கள் தாமே ஆறறி உயிரே" என்கிறார். எனவே, உயிர் என்ற பெருமைக்குரியது மனிதப்பிறவிமட்டுமே என்பது புலப்படுகிறது. உயிர் என்ற சொல் 'உய்தல்' என்ற சொல்லடியாகப் பிறந்ததாகும். உய்யும் நிலை மனிதனுக்கு மட்டுமே உரியது.'மனம்' என்ற சொல்லே இத்தன்மையினை உறுதிப்படுத்தும். 'மன்' என்ற சொல்லின் அடியாக இச்சொல் பிறந்தது. 'மன்' என்பது நிலை பேற்றைக் குறிக்கும். நிறைபேற்றிற்குரிய பிறவி மனிதப்பிறவி மட்டுமேயாகும். மனம் என்ற சொல்லின் அடியாகவே மனிதன் என்ற சொல்லும் தோன்றியிருக்க வேண்டும். மனத்தை உடையவன் 'மனத்தன்' என்றிருந்து பின்பு மனிதன் என்றாகியிருக்கலாம். அதுவே முதல் நீண்டு மானிடன் என்றும் ஆகியிருத்தல் வேண்டும்.

மனம் மனிதப்பிறவிக்கே உரியது; ஏனைய விலங்குகட்கு இல்லாதது. அதனால்தான் திருநாவுக்கரசர், "என் வினைகட்கேற்பப் புழுவாகப் படைத்தாலும் பரவாயில்லை. படைத்துவிட்டுப் போ; ஆனால் உன்னை நினைப்பதற்குரிய மனத்தை மட்டும் தந்துவிடு" என்று இறைவனிடம் வேண்டுகிறார். புழுவுக்கு நினைத்துப் பார்க்கும் மனம் இல்லை என்பது அவர் பாடலாலும் புரிகிறது.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரம் தரவேண்டும்"

என்பது அப்பாடல். நினைத்துப் பார்க்கும் மனத்தைப்பெற்றவர்கள் நாம். அதனால்தான் தமிழர் கண்ட மனம் எத்தகையது என்பதையும் நினைத்துப் பார்க்கத் தலைப்பட்டுள்ளோம்.

தொல்காப்பியத்திலிருந்து இன்றைய இலக்கியங்கள் வரையிலும் ஒரு தொடர்ச்சியான ஆய்வைச் செய்தால்தான் காலப் போக்கில் மனத்தின் தன்மையில் அடைந்த மாறுதல்களையும், வளர்ச்சிகளையும் நன்கு தெரிந்து தெளியமுடியும். ஆனால் அப்படிச் செய்யமுற்படும் ஆய்வு விரிந்து பரந்து செல்லுமாதலால் ஒரு அரங்கை அமைத்துக்கொண்டு ஆய்வுசெய்ய முற்பட்டுள்ளோம்.

சங்க இலக்கியங்களில் அக இலக்கியத்திற்கு நற்றிணையும், புறஇலக்கியத்திற்குப் புறநானூறும் எடுத்துக் கொள்ளப்

பட்டுள்ளது. தேவாரங்களின் வரிசையில் திருநாவுக்கரசர் தேவாரமும், திருவாசகம் முழுமையும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தத்துவ விளக்க நூல்களான திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள் ஆகியனவும் ஆராயப்பட்டுள்ளன. வைணவ இலக்கியங்களில் மனத்தின் தன்மையை நோக்குமுகத்தான் நாலாயிரத்திவ்ய பிரபந்தமும் கம்பராமாயணமும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் பக்தி உணர்வு, சமுதாய உணர்வு ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களைப் படம் பிடித்துக் காட்டும் திருவருட்பா, பாரதியார் கவிதைகள் ஆகியனவும் ஆராயப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நூல்களிலும் மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்ற சொற்கள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது புள்ளி விவரப்படி தயாரிக்கப்பட்டு, அச்சொற்கள் எந்தச் சூழ்நிலையில் எப்படிப் பயன் படுத்தப்பட்டுள்ளன என்பதும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. சான்றாக, 'நெஞ்சம்' என்ற சொல்லின் முழுப்பட்டியலும் பின்னிணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

தமிழர் கண்ட மனத்தின் தனித்தன்மைகளை, செயற்பாடுகளை அறிந்துகொள்ள இம்முயற்சி பெரிதும் துணை செய்யும் என்பது உறுதி.

நெஞ்சம்

சொல்லமைப்பு

மனத்தின் பல்வேறு நிலைகளில் ஒன்றைக்குறிக்கும் சொல்லே நெஞ்சம் எனப்படும். இது, நெஞ்சம், நெஞ்சு, நெஞ்சகம் என்றெல்லாம் வழங்கப்படும்.

(எ.டு) "காமர் நெஞ்சம் ஏமாந் துவப்ப" [புறம்]
"நெஞ்சுள் இறைவனை ஏத்துமின்கள்" [அப்பர் தேவாரம்]
"அகங்கார மென்னும் கல்லைப் பிளந்து நெஞ்சகமான பூமி வெளி காணத் திருத்தி" [தாயுமானவர்]

இதுபோன்ற பலவிடங்களைச் சான்று காட்டலாம். மனம் நைந்த நிலையினையே இச்சொல் குறிக்கிறது. மிகுந்த உணர்ச்சி வெளிப்பாட்டின் போதுதானே மனம் நையும் நிலையே உருவாகிறது? எனவேதான், காதல், பக்தி, துயரம், மகிழ்ச்சி போன்ற நிலைகளில் மனத்தின் தன்மையைக் குறிக்கும்போது 'நெஞ்சம்' என்ற சொல் கையாளப்பெறுகிறது.

'நைந்து' என்ற சொல்லே 'நைஞ்சு' என்றாகிப் பின் முதற்போலியாக 'நெஞ்சு' ஆகியிருத்தல் வேண்டும். இப்படி நாம் கருதுவதற்குத் தேவார, திருவாசகப் பாசுரங்கள் துணை செய்கின்றன.

"நைஞ்சு நைஞ்சு நின்றுள் குளிர்வார்க் கெலாம்" என்கிறார் திருநாவுக்கரசர்,

"நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே" என்பது திருவாசகச் சொற்றொடர். அந்த நெஞ்சு என்ற சொல்லே வழக்கில் நெஞ்சம், நெஞ்சகம் என்றெல்லாம் ஆகியிருத்தல் வேண்டும்.

இச்சொல்லின் தன்மைகள், செயல்கள் இவற்றை அறியு முன்பு இலக்கியங்களில் எந்த அளவிற்கு இச் சொல் கையாளப் பெற்றுள்ளது என்பதை முதலில் காண்போம்.

இலக்கியம்	கையாளப்பெற்ற இடங்கள்
1. நற்றிணை	— 77
2. புறநானூறு	— 32
3. அப்பர் தேவாரம்	— 191
4. திருவாசகம்	— 35
5. திருமந்திரம்	— 54
6. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்	— 377
7. கம்பராமாயணம்	— 232
8. தாயுமானவர் பாடல்கள்	— 113
9. திருவருட்பா	— 407
10. பாரதியார் கவிதைகள்	— 140

மேற்கண்ட புள்ளி விபரத்திலிருந்தே நமக்குப் பொதுவான சில உண்மைகள் தெரியவருகின்றன. சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டும் ஏறத்தாழ சமஅளவு எண்ணிகையுள்ள பாடல்களைக் கொண்டனவே. ஆனால் புறநானூற்றில் 32 இடங்களில் மட்டுமே அச்சொல் கையாளப்பெற நற்றிணையில் 77 இடங்களில் கையாள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. காரணம், மிகுந்த உணர்ச்சி வெளிப்பாடான காதல் வாழ்வு பற்றிக் கூறும் பாடல்களல்லவா நற்றிணையில் இடம்பெறுகின்றன? கூடுதல், ஊடுதல், பிரிதல், கலங்கல் போன்ற மனநிலைகளை விளக்கும் இடங்களில் 'நெஞ்சம்' என்ற சொல்லையே புலவர்கள் நினைந்து கையாண்டுள்ளனர்.

கம்பராமாயணத்தைக் காட்டிலும் திருவருட்பாப் பாடல்கள் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும், நெஞ்சம் என்ற சொல் திருவருட்பாவில்தான் அதிகமாகக் கையாளப்பட்டுள்ளது. மனம் நைந்து நைந்தல்லவா வள்ளலார் இறைவனிடம் முறையிடுகின்றார்! அதனால்தான் அத்தன்மைக்குரிய சொல்லையும் அவர் அதிக இடங்களில் கையாண்டுள்ளார். அத்தன்மையினை

ஆழ்வார்கள் நாரணனைத் தொழுதுபாடிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலும் காண்கின்றோம்.

அடிமையிருளில் மூழ்கிக் கிடந்த பாரத மக்கள் நெஞ்சில் உரிமைச்சுடரை ஏற்றிய மகாகவிஞன் பாரதி. நாட்டு மக்கள் நிலைகண்டு ஆற்றாது 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்று வேதனைக் கண்ணீர் வடித்த அவன் கவிதைகளிலும் கூட, 'நெஞ்சம்' என்ற சொல்லே அதிக இடங்களில் இடம் பெற்றிருப் பதும் சிந்தனைக்குரியது.

பாவுக்கரசராகிய நாவுக்கரசரும் கூடத் தாம்பாடிய பாடல் களில் மனத்தைக்குறிக்கும் ஏனைய சொற்களைக் காட்டிலும் நெஞ்சம் என்ற சொல்லையே அதிக இடங்களில் எடுத்தாண்டுள் ளார். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"[2] என்றல்லவா பிறைசூடிய பெம்மானிடம் முறையிடுகின்றார் அவர்! உணர்ச் சிப் பெருக்கான அவர் பாடல்களுக்கு உரிய வெளியீட்டுச்சொல் நெஞ்சமாகத்தானே இருக்க முடியும்.

ஆண், பெண் காதல் வாழ்வு பற்றிக் கூறுவது நற்றிணை. ஆண்டவன் அடியாரிடையே அரும்பும்பேரின்பக்காதலைப் பற்றிக் கூறுவனவே நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருவருட்பா, திரு வாசகம் போன்ற பக்தி இலக்கியங்கள். நாட்டுப்பற்று, கடமை யுணர்ச்சி போன்றனவற்றைப் புறநானூறு, பாரதியார் கவிதை கள் போன்ற நூல்களில் காண்கிறோம்.

இனி, நெஞ்சத்திற்கு அடைமொழிகளாகப் புலவர்கள் எச் சொற்களைக் கையாண்டனர் என்பதையும், அதன் மூலம் நெஞ் சத்தின் தன்மை எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதையும் காண்போம்.

நற்றிணை

1. நேர்புடை நெஞ்சம்
2. பருவரல் நெஞ்சம்
3. பெரும்புலம்புற்ற நெஞ்சம்
4. நொதுமல் நெஞ்சம்
5. அவல நெஞ்சம்
6. கொள்கை நெஞ்சம்
7. பைதல் நெஞ்சம்
8. பிணித்த நெஞ்சம்
9. எவ்வ நெஞ்சம்
10. நாரில் நெஞ்சம்
11. நினைந்த நெஞ்சம்
12. நேர்ந்த நெஞ்சு
13. உயவு நெஞ்சம்
14. நோய்மலி நெஞ்சம்
15. (முனியல்)மா நெஞ்சே
16. பேதை நெஞ்சம்

17. மையல் நெஞ்சம்
18. பேரஞர் பொருத புகர்படு நெஞ்சம்
19. நிறையில் நெஞ்சம்
20. தெளிந்த நெஞ்சம்
21. ஈர நெஞ்சு
22. பேரருள் ஞெ்நசம்
23. இன்சொல் மேவலைப் பட்ட என் நெஞ்சம்
24. நாருடை நெஞ்சம்
25. கனியா நெஞ்சம்
26. காமர் நெஞ்சம்
27. வன்கண் நெஞ்சம்
28. வலியா நெஞ்சம்
29. பொருண்மலி நெஞ்சம்
30. (நோம்) என் நெஞ்சு
31. செம்மல் நெஞ்சம்
32. உண்மலி நெஞ்சம்
33. புலரா நெஞ்சம்
34. தேறா நெஞ்சம்
35. உணர்ந்த நெஞ்சம்
37. நடுங்கலானா நெஞ்சு

புறநானூறு

1. நேள நெஞ்சு[நேள = ஈரம்]
2. மம்மர்நெஞ்சம்
3. காதல் நெஞ்சு
4. தீதில் நெஞ்சம்
5. கவலை நெஞ்சம்
6. (இரங்கும்) என்னெஞ்சம்
7. காமர் நெஞ்சம்
8. அவல நெஞ்சம்
9. நீங்கா நெஞ்சம்
10. அழிந்த நெஞ்சம்
11. இடும்பைகூர் நெஞ்சம்
12. ஆரஞருற்ற நெஞ்சம்
13. தளரும் நெஞ்சம்
14. நாணுடை நெஞ்சம்
15. உலக்கும் நெஞ்சு
16. மறங்கெழு நெஞ்சம்
17. அற நெஞ்சம்
18. அறவை நெஞ்சம்
19. மறவை நெஞ்சம்
20. ஏமாந்த நெஞ்சம்

திருநாவுக்கரசர் தேவாரம்

1. கரவாடும் வன்னெஞ்சம்
2. நினைந்த நெஞ்சம்
3. மறவிலா நெஞ்சம்
4. நிணமுடை நெஞ்சு
5. தகவில் நெஞ்சம்
6. மட நெஞ்சம்
7. நிலையிலா நெஞ்சம்
8. பாவி நெஞ்சம்
9. நஞ்ச நெஞ்சம்
10. இழுதை நெஞ்சம்
11. தகவுடையார் நெஞ்சம்
12. வஞ்ச நெஞ்சம்

திருவாசகம்

1. பாழ் நெஞ்சம்
2. வாழாத நெஞ்சம்
3. வேட்ட நெஞ்சம்
4. பிண நெஞ்சம்
5. மட நெஞ்சம்
6. இரும்பு நெஞ்சம்
7. கீறிலா நெஞ்சம்
8. வன்னெஞ்சம்
9. கன்னெஞ்சம்
10. அழுக்கடையா நெஞ்சம்

திருமந்திரம்

1. மதியிலர் நெஞ்சு
2. புனஞ் செய்த நெஞ்சு
3. ஏழை நெஞ்சு
4. நன்னெஞ்சு
5. வில குறுநெஞ்சு
6. கல்லா நெஞ்சம்
7. விதஞ் செய்யும் நெஞ்சு
8. இளைக்கின்ற நெஞ்சு
9. பாலிக்கும் நெஞ்சம்
10. கசியாத நெஞ்சம்
11. கொல்லை செய் நெஞ்சம்
12. குலைவாய நெஞ்சம்
13. நகைக்கின்ற நெஞ்சு
14. மால் கொண்ட நெஞ்சு
15. கல் நெஞ்சம்

நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்

1. நினைப்பிலா வலிநெஞ்சு
2. வன்னெஞ்சம்
3. இரும்புபோல் வலிய நெஞ்சம்
4. பேதை நெஞ்சம்
5. தூய் நெஞ்சு
6. மட நெஞ்சம்
7. உருகும் நெஞ்சம்
8. எள்கு நெஞ்சம்
9. தட நெஞ்சம்
10. திட நெஞ்சம்
11. சூதறியா நெஞ்சம்
12. குழையும் நெஞ்சம்
13. புலம்பும் நெஞ்சம்
14. கசிந்த நெஞ்சு

கம்பராமாயணம்

1. காமர் நெஞ்சம்
2. கல் ஒக்கும் நெஞ்சு
3. பெருஞ்சினம் கதுவும் நெஞ்சு
4. இருப்பு நெஞ்சு
5. துடிக்கும் நெஞ்சு
6. சோரும் நெஞ்சு
7. வாட்டம் தரு நெஞ்சம்
8. உருகும் நெஞ்சம்
9. அருளில் நெஞ்சம்
10. துணியும் நெஞ்சம்
11. பரியும் நெஞ்சு
12. இரங்கும் நெஞ்சம்
13. புழுங்கும் நெஞ் சம்
14. அருள் தீர்ந்த நெஞ்சு
15. பொய்ந்நின்ற நெஞ்சு
16. முனிந்த நெஞ்சம்
17. பதைக்கும் நெஞ்சு
18. தளர்கின்ற நெஞ்சம்
19. குழையும் நெஞ்சம்
20. சீறிய நெஞ்சம்
21. காரன்ன நெஞ்சு

தாயுமானவர் பாடல்

1. துடிக்கும் நெஞ்சு
2. பொய் வளரும் நெஞ்சு
3. காதலித் திடுநெஞ்சம்
4. தீ நெஞ்சம்
5. கல் நெஞ்சு
6. இரும்பு நேர் நெஞ்சம்
7. கன் மார்க்க நெஞ்சம்
8. புலம்பும் நெஞ்சம்
9. பதைக்கும் நெஞ்சம்
10. மடம்பெறுபாழ்நெஞ்சம்
11. வன்னெஞ்சம்
12. வஞ்சநெஞ்சம்
13. வஞ்சனை அழுக்காறாதி வைத்திடும் பாண்டமான நெஞ்சம்
14. மரப்பான்மை நெஞ்சு
15. அழுக்கார்ந்த நெஞ்சு
16. கள்ளம்பொருந்து மடநெஞ்சு
17. தெளிந்த நெஞ்சம்
18. புன்மை நெஞ்சம்
19. சுத்த மூட நெஞ்சம்
20. திண்ணிய நெஞ்சம்
21. கல்லா நெஞ்சம்
22. உருகும் நெஞ்சம்

திருவருட்பா

1. வஞ்சமறு நெஞ்சம்
2. வன்புகலா நெஞ்சு
3. கல் நெஞ்சு
4. ஈரமிலா நெஞ்சு
5. பொய்தாவு நெஞ்சு
6. நித்தமிரங்காநெஞ்சம்
7. சஞ்சல நெஞ்சம்
8. தூய நெஞ்சம்
9. இடும்பை நெஞ்சம்
10. மால் கொண்ட நெஞ்சம்
11. புற்கண்ட நெஞ்சம்
12. கன்மநெஞ்சம்
13. வெம்பாலை நெஞ்சம்
14. அற்ற மடைந்த நெஞ்சு
15. நன்னர் நெஞ்சகம்
16. புலைய நெஞ்சு
17. இரும்பினேர் நெஞ்சகம்
18. மூட நெஞ்சம்
19. மடங்கொள் நெஞ்சம்
20. வெய்ய நெஞ்சகம்
21. மடிகொள் நெஞ்சு
22. ஏம நெஞ்சு
23. வேமுறு நெஞ்சம்
24. ஊழை நெஞ்சம்
25. இழுதை நெஞ்சம்
26. அழுக்கு நெஞ்சம்
27. வல்வினை நெஞ்சம்
28. கோணாத நெஞ்சம்

பாரதியார் கவிதைகள்

1. பாவ நெஞ்சு
2. புண்ணிய நெஞ்சு
3. கனிவுறு நெஞ்சகம்
4. சோர நெஞ்சம்
5. அசையா நெஞ்சம்
6. மூட நெஞ்சம்
7. துச்சப்படு நெஞ்சு
8. துணிவுடைய நெஞ்சு
9. வீரமிலா நெஞ்சு
10. காய்ந்த நெஞ்சு
11. திருகு நெஞ்சம்
12. அழலு நெஞ்சம்
13. கருங்கல்லில் விடந்தோய்ந்த நெஞ்சு
14. துவளும் நெஞ்சு

மேற்கண்ட அடை மொழிகளிலிருந்து நெஞ்சத்தின் தன்மைகளை மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன :

1. பொதுத் தன்மைகள்
2. நல்ல தன்மைகள்
3. தீய தன்மைகள்

பொதுத்தன்மைகள்

ஆய்விற்கு இங்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்கள் அனைத்துமே ஒரே பொருளைக் கூறுவன அல்ல; அதில் காதல் உண்டு; வீரம் உண்டு; பக்தி உண்டு; தத்துவம் உண்டு; நாட்டுப் பற்றுண்டு! ஆயினும் அவைகளை உணர்த்தும் நெஞ்சம் என்ற சொல்லில் அனைவருமே ஏற்றுக்கொண்ட பொதுத்தன்மைகள் சிலவும் உண்டு. அவைகளைக் கீழ்கண்டவாறு முறைப்படுத் தலாம்.

1. துன்பமடைதல்
2. புலம்புதல்
3. நினைதல்
4. சினமடைதல்
5. இரக்க மடைதல்
6. அருளுணர்வு
7. உணர்தல்
8. தளருதல்
9. மறத்தல்
10. வேட்டல்
11. இளைத்தல்
12. கசிதல்
13. துடித்தல்
14. பதைத்தல்
15. உருகுதல்
16. குழைதல்
17. சோர்தல்
18. துணிதல்
19. கனிவுறுதல்
20. துவளுதல்

மேற்காட்டிய சொற்கள் அனைத்தும் மனம் நைந்த நிலையில் தொழிற்படும் தன்மையினையே எடுத்துக்காட்டுகின்றன. நினைப்பிற்கும் மறதிக்கும் காரணமாயிருக்கின்ற நெஞ்சந்தான், ஆத்திரத்திற்கும் அருளுடைமைக்கும் காரணமாக இருக்கின்றது; உணர்வதற்கும் உருகுவதற்கும் நிலைக்களனாய் உள்ளது; பதைத்தல், துடித்தல், குழைதல், கசிதல், துவளுதல், இளைத்தல் போன்ற நிலைகளைப் புலப்படுத்துவனவாகவும் உள்ளது.

நல்ல தன்மைகள்

நெஞ்சத்திற்கென்று சில பொதுத் தன்மைகள் இருப்பதைப் போன்று சில நல்ல தன்மைகளும் உள்ளன. அப்படிப்பட்ட நன்னெஞ்சே கோயிலாகக் கொண்டு'இறைவன் எழுந்தருளுவான் என்றல்லவா வள்ளலார் கூறுகிறார்! அந்தத் தன்மைகளையும் ஈண்டு நோக்குவோம்.

1. பேரருடைமை
2. தீதற்ற தன்மை
3. நாணுடைமை
4. அறமுடைமை
4. தெளிதல்
6. உருகுதல்
7. சூதறியாமை
8. வஞ்சகமற்ற தன்மை
9. நடுங்கலானாமை
10. கோணாத தன்மை

இவை போன்ற நல்ல தன்மைகளையும் நெஞ்சம்பெற்றுச் சிறப்பதைக் காண்கிறோம். பக்தி வாழ்விலும், காதல் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நன்னெஞ்சம் அமையப் பெற்றவர்களே எண்ணியது முடிக்கும் தன்மை பெற்றவர்களாகவும், எல்லோர்க்கும் பயன்படுமாறு வாழும் தகுதி வாய்ந்தவர்களாகவும் காண்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தீது, நன்றின் திறம் அறிந்து செல்பவர்களாகையால் அவர்களுக்குச் சோதனைகளும் வேதனைகளும் வருதல் அரிது. அத்தன்மையோரால்தான் அறம் வளர்க்கப்படுகிறது; அருளுடைமை மண்ணில் மலர்ந்து மணம் வீசுகிறது; வஞ்சமற்ற தன்மையால், பழிக்கு அஞ்சி, புகழுக்கு உயிர்கொடுக்கும் துணிவும் வளர்கிறது.எந்நிலையிலும் தன்னிலை பிறழாத தன்மையும் நன்னெஞ்சம் அமையப்பெற்றோருக்கே அமைந்த பாங்காகும். அப்படிப்பட்ட நன்னெஞ்சம் அமையப் பெற்றிருந்தமையால்தான், "எப்போதும் என்னெஞ்சத்துள்ளான்" இறைவன் என்று திருநாவுக்கரசரால் கூறமுடிந்தது. இம்மண்ணில் வாழும் அனைத்து மாந்தருக்கும் அந்தத் துணிவும் தெளிவும் வாய்த்து விடுமென்றால் இம்மண்ணுலகே பொன்னுலகாய் மாறிவிடுமே! ஆனால், நாமிங்கே அன்று கண்டதும், இன்று காண்பதும் வேறாகவல்லவா உள்ளது! நன்னெஞ்சம் அமையப் பெறாமையால் சமயச் சான்றோர்கள் பட்டபாட்டைப் பக்திப் பாசுரங்கள் உருகி உருகி உணர்த்துகின்றனவே!

நெஞ்சில் நல்ல தன்மைகள் மலர்வதற்கு முன்பாகத் தீய தன்மைகள் அல்லவா அருளாளர்களையும் ஆட்டிப் படைத்துள்ளது!, அதன் கொடுமையை அவர்கள் நன்கு உணர்ந்து தெளிந்திருந்தமையால்தான் அதை விளக்குவதற்கு எண்ணற்ற அடைமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதையும் மேற்கண்ட நூல்களின் வழியாக உணர்கிறோம். அவைகளைப் பற்றிச்சிறிது நோக்குவோம்.

தீய தன்மைகள்

"நினைப்பவர் நெஞ்சத்துள்ள" இறைவன், "கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியார்" என்கிறார் திருநாவுக்கரசர். நெஞ்சில் வஞ்சமுடைய நீசர்களை என்றும் இறைவன் அடையமாட்டான்; அவர்கள் பாவப் படுகுழியில் விழ்ந்து கரையேறும் திறமின்றி அழிந்து படுவர்; பிறரையும் அழுத்தும் முயற்சியில் முனைந்து நிற்பர். அத்தீய தன்மைகளில் சில மேற்கண்ட அடைச் சொற்களில் காட்டப்பட்டுள்ளன. அவைகளாவன:

1. முனிதல்
2. பேதமை
3. வன்கண்மை
4. தேறாமை
5. கரவாடுதல்
6. தகவின்மை
7. நிலையில் நில்லாமை
8. வஞ்ச முடைமை
9. கல்லாமை
10. கசியாமை
11. மால் கொள்ளுதல
12. பொய் வளருதல்
13. மடம் பெறுதல்
14. புன்மை
15. இரும்புபோல் வலிய தன்மை
16. கல் ஒக்கும் தன்மை
17. காரன்ன தன்மை
18. ஈரமிலாமை
19. மடி கொள்ளுதல்
20. புழுங்குதல்
21. சீறுதல்
22. அழலுதல்
23. காய்தல்

இவை போன்ற தீய தன்மைகள் அமையப்பெறுமென்றால் அத்தகைய நெஞ்சமுடையோர்க்கு நிம்மதியான வாழ்வு ஏது? அடைமொழிகளால் மட்டுமன்றி ஆங்காங்கு வாய்ப்புக்கிட்டிய போதெல்லாம் நெஞ்சத்தின் தீய தன்மைகளைப் புலவர்கள் சாடியுள்ள விதத்தினையும் பாடல்களால் அறிகிறோம்.

'எவ்வ நெஞ்சம்', 'நாரில் நெஞ்சம்', 'அழிந்த நெஞ்சம்', 'பாவி நெஞ்சம்', 'நஞ்ச நெஞ்சம்', 'இழுதை நெஞ்சம்', 'பாழ் நெஞ்சம்', பின நெஞ்சம்', 'தீ நெஞ்சம்', 'மரப்பான்மை நெஞ்சு', 'சுத்தமூட நெஞ்சம்', 'அழுக்கு நெஞ்சம் என்றெல்லாம் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய தன்மையுடைய நெஞ்சுடையோர் வாழ்வது வாழ்வாகாது என்பதையே, "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்று எச்சரிக்கின்றார் மணிவாசகப் பெருந்தகை.

பக்தி இலக்கியங்களில் மட்டும்

நெஞ்சத்தின் தன்மைகளைப் பலரும் உணர்ந்து பாடியிருப்பினும் பக்திப் பனுவல்களைப் பாடிய சான்றோர்களே அதன்

திட்ப நுட்பங்களைக் கூர்ந்து நோக்கி வெளிப்படுத்யுள்ளார்கள். அவர்களால்தான் நெஞ்சத்தின் தன்மைகளை முழுமையாக அறியமுடிந்தது என்றும் கூடக்கூறலாம். எனவே தான் எப்படியெல்லாம் நெஞ்சம் தம்மை ஆட்டுவித்தது என்பதைச் சொல்லோவியங்களாக வடித்துக் காட்டியதுடன், அதன் தன்மைகளுக்கேற்ற அடைமொழிகளைப் பெய்தும், உவமைகள், உருவகங்கள் வாயிலாக உணர்த்தியும் காட்டியுள்ளார்கள். நெஞ்சத்தின் தீய தன்மைகளை நினைத்தபோது அருளுடையார்களான அவர்களுக்குங்கூட ஆத்திரம் மேலிடுகிறது. அதன் சாயலை அவர்கள் சொற்களே சொல்லி விடுகின்றன. சில சான்றுகளை இப்போது காணலாம்.

'நினைவிலாத் தகவில் நெஞ்சம்'
'பாரினாய் பாவி நெஞ்சே'
'வஞ்ச நெஞ்சினை ஏற்றேன்' -திருநாவுக்கரசர்

'துணையிலி பிண நெஞ்சே'
'மதியிலி மட நெஞ்சே'
'பதைத்துருகும் பாழ்நெஞ்சே' -மணிவாசகர்

'விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே'
'இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை யுள்ளே'
'கொல்லைசெய் நெஞ்சம் குறிப்பறியாதே' -திருமூலர்

'வன்னெஞ்சம் புக்கிருக்க வொட்டேன்'
'விட நெஞ்சை யுற்றார்'
'பேதை நெஞ்சே நீ சொல்வாய்' -ஆழ்வார்கள்

'இரும்பு நேர் நெஞ்சக் கள்வன்'
'ஆயிரம் சொன்னாலும் அறியாத வன்னெஞ்சம்'
'ஆழாழியென்ன அளவுபடா வஞ்ச நெஞ்சம்'
–தாயுமானவர்

'பொல்லாத நெஞ்சப் புலையன்'
'கரு நெஞ்ச கள்வன்'
'துட்ட நெஞ்சக வஞ்சசக் கொடியேன்' -வள்ளார்

பக்தி இலக்கியங்களிலும் கூட நெஞ்சத்தை அவர்கள் நோக்கும் தன்மையில் சிறிது வேறுபாடு தெரிவதைக் காண்கிறோம். சைவ சமயக்குரவர்களாகிய திருநாவுக்கரசர், மணிவாசகர், திருமூலர், தாயுமானவர் ஆகியோர் தீய நெஞ்சத்தின் திறத்தைச் சற்று வன்மையாகவே சாடியுள்ளனர். 'பாவி நெஞ்சம்', 'பிண நெஞ்சம்', 'பாழ் நெஞ்சம்' என்றெல்லாம் பன்முறைகுறித்துச்

செல்கின்றார்கள். அத்தகைய நிலையை ஆழ்வார்கள் பாசுரங்களில் பார்க்க முடியவில்லை. நெஞ்சின் தீய தன்மையை உணர்ந்திருப்பினும் அதுகுறித்து அதிகமாக அவர்கள் கவலைப்படவில்லை. பல இடங்களில் 'நன்னெஞ்சே' என்றுதான் குறிப்பிடுகின்றனர். மடநெஞ்சம் என்று குறிப்பிடும்போதும் கூட 'சொல்லு வாழி மடநெஞ்சமே' என்று அதையும் கூட வாழ்த்தும் பாங்கையும் காண்கிறோம். ஒருவேளை, அது அவர்கள் கொள்கையாகக்கூட இருக்கலாமோ என்றும் எண்ண இடம் தருகிறது. அதேபோல, முந்திய சைவசமயக் குரவர்களிடம் காணப்பட்ட வேகத்தைப் பிற்றைநாளில் தோன்றியருளிய வள்ளலாரிடமும் காணமுடியவில்லை. பெரும்பாலான இடங்களில் தீய நெஞ்சத்தை உடையவனை (தம்மை)ப்பற்றித் தான் பாடுகின்றாரே தவிர, நெஞ்சத்தையே நேரிடையாகத் தாழ்வுப்படுத்திப் பேசும் தன்மையை அவரிடம் அதிகம் காண முடியவில்லை. இது காலப்போக்கில் ஏற்பட்ட மன வளர்ச்சியைக் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

தீய நெஞ்சம் தூய நெஞ்சமாதல்

பாவ நெஞ்சமே, புண்ணிய நெஞ்சமாவதுண்டு, அழலு நெஞ்சமே அருளுடைய நெஞ்சமாவதுண்டு. அழுக்கு ஆடை தூய்மையாவதில்லையா? அதுபோலத்தான் இதுவும். நெஞ்சின் மாசுகள் நீக்கப்படும்போது அது தூய்மையடைகிறது. அதற்கு முதலில், தன்னையே நோக்கியறியும் பக்குவம் வேண்டும். அப்போதுதான் தன்னெஞ்சில் உள்ள மாசுகள் எவை என்பது புரியும். புரிந்துகொண்டு அவற்றைப் போக்கிவிட்டால் புனிதம் தானாகவே தோன்றிவிடும்.

"வஞ்சனை அழுக்காறாதி வைத்திடும் பாண்டமான நெஞ்சு' என்கிறார் தாயுமானவர். பிறரை வஞ்சித்தல், பிறர் ஆக்கங் கண்டு பொறாதிருத்தல் போன்ற பொருள்களைச் சேர்த்துவைக்கும் பாண்டமாக நம் நெஞ்சம் அமைந்திருப்பதைக் கண்டு வருந்துகிறார் அவர். இப்பொருள்களையெல்லாம் அப்பாண்டத்திலிருந்து போக்கிவிட்டால் பாண்டம் தூய்மையடைந்துவிடுமே! அதைப் போக்கும் செயல் ஒன்றே அரிது என்பதை உணர்ந்ததனால்தான் திருவள்ளுவருங்கூட "மனத்துக் கண் மாசில னாதல் அறம்" என்று, அச் செயலை ஒரு ஒப்பற்ற அறச்செயலாகவே கூறிப்போந்தார்.

'நெஞ்சின் வஞ்சம் கெடவேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி தானுண்டு. அது இறைவன் அருளைப் பெறுவதேயாகும், என்பதை, "நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட" என்று சிவபுராணத்தில் குறிப்பிடுகின்றார் மணிவாசகப் பெருந்தகை. இறைவனை எண்ணி உருகுவதற்குத் தமக்கு இருக்கும் நெஞ்சம் போதாது என்று வருந்தும் அவர் "உள்ளந்தாள் நின்று உச்சியள வும் நெஞ்சாய் உருகாதால்" என்று உருகுகின்றார்.

"இடருட்டு நெஞ்சக் குரங்கால் மெலிந்து" வருந்தும் நான், "அஞ்சு புல வேடர்க்கு அறிவைப் பறிகொடுத்தேன். நெஞ்சு புலர்ந்த தேங்கு நிலை" அதனால்தான் உருவாகியது என்கிறார் இராமலிங்க அடிகளார். நம்முடைய இன்பதுன்பங்களுக்கு நாம் தானே காரணம்! நம்முடம்போடு பொருந்திய புலன்களின் போக்கிலேயே நெஞ்சத்தையும் போக்கும்போதுதான் துன்பத் திற்கு ஆளாகி வருந்த வேண்டிய நிலைக்கு ஆளாகின்றோம். எனவே, நம்முடைய அறிவைச் சூறையாடுவதற்கு ஐம்புலன்களா கிய வேடர்களும் முற்படும்போது அறிவு பறிபோகாமல் காக் கின்ற துணிவு நம் நெஞ்சத்திற்கு இருந்தாக வேண்டும். அத் தகைய துணிவை நெஞ்சம் பெறத் துணை புரிவது இறைவன் திருவருளேயென்பதை உணர்ந்த அவர் தம்முடன் இறைவனிருக் கும் இடத்திற்கு வருமாறு நெஞ்சை அழைக்கின்றார். "நெஞ்சமே சுகமாய் வாழ வேண்டிடில் வருதியென்னுடனே" என்று கூறு வதோடு நெஞ்சிற்கு ஆறுதலும் கூறுகின்றார். "கலங்கலை நெஞ் சமே காம ஐம்புலக்கள்வரை வீட்டி வயமளிக்குவன்" என்பது அவர் மொழிந்த அருட்பா அமுது. ஐம்புலக்கள்வரையும் வெல்லும் துணிவை நம் நெஞ்சம் பெற்றுவிட்டால், நம்மை வீழ்த்தும் பகை வேறேது இருக்க முடியும்?

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்றுதானே தமிழ்மறையும் உணர்த்துகிறது!

வறுமை, வருத்தும் நோய் போன்றவற்றால் உடல் இளைக் கின்றது; அடுத்தடுத்துவரும் பல்வேறு பிறவிகளால் உயிர் இளைக்கின்றது. ["எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்பது சிவபுராணம்] அதேபோல தீய தன்மைகளின் சேர்க்கை யால் நம் நெஞ்சமும் இளைக்கின்றது. அந்நிலையினின்றும் அதை மீட்பதற்கு இறைவன் அருள் ஒன்றே ஏற்றது என்பது சமயச்

சான்றோர்களின் நப்பிக்கை. அப்படி இளைக்கின்ற நெஞ்சமானது இருட்டறையைப் போன்று இருக்குமாம்; ஒளிபுகாத இருட்டறையில் தீய செயல்கள் நடக்கும் என்பதைத்தானே உலகியலிலும் உணர்கிறோம். அதனையே திருமூலரும், 'இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை'' என்று குறிப்பிடுகின்றார். நெஞ்சத்து+இருட்டறை என்ற சொல்லையே வேறுவிதமாகப் பிரித்தால் நெஞ்சம்+திருட்டறை என்று அமைவதும் நினைத்தற்குரியது. அப்படிப்பட்ட நெஞ்சினரும் இறைவனைப் பணிந்து வணங்கினால் போதும்; ''கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்து'' அருள் ஒளியால் இருள் போக்கி வாழ்விப்பான் என்கிறார் திருமூலர்.

நெஞ்சத்தின் நல்ல தன்மைகளை நாம் அறிய முடியாமல் தடை செய்வது, அதில் சேர்ந்திருக்கும் அகங்காரம் என்ற தீய தன்மையே. பாண்டத்தில் சேர்ந்திருந்து அதன் தன்மைக்கே மாசு உண்டாக்கி விடுகிறதே களிம்பு. களிம்பு பிடித்த பாண்டத்தில் வைக்கப்பட்ட பொருளும் நச்சுத் தன்மையைப் பெற்றுவிடுகின்றதே. அதுபோலத்தான் நெஞ்சத்திலுள்ள அகங்காரம். அதை அகற்றும்போதுதான் நெஞ்சம் தூய்மையடைகிறது.

''அகங் காரமென்னும் கல்லைப் பிளந்து
நெஞ்சகமான பூமிவெளி காணத் திருத்துமாறு''

கூறுகிறார் தாயுமானவர். நாம் நடப்பதற்கும் வாழ்வதற்கும் ஏற்ற பூமிவெளியைக் காண வேண்டுமென்றால் முதலில் கருங்கற்பாறைகளைப் பிளந்தாக வேண்டும்.

அதைப் பிளப்பதற்கு எத்துணை வலிமை பெற்றாக வேண்டும்! எப்படியோ கல்லைப் பிளக்காதிருக்கும்வரை பூமிவெளியைக் காணமுடியாது; அது போலவே அகங்காரத்தை அகற்றாதிருக்கும்வரை நெஞ்சம் நன்னிலையைப் பெறமுடியாது. திருநாவுக்கரசரும், ''ஆங்காரந் தவிர் நெஞ்சே'' என்று கட்டளையிடுகிறார்.

வேட்டையாடுவதற்காகக் கானகம் சென்ற வேடன் ஓரிடத்திலேயே நிலைத்து நிற்கமாட்டான்; ஆங்காங்கு அலைந்துகொண்டேதான் இருப்பான்; எங்கே விலங்குகள் அகப்படும் என்பதில்தான் அவன் எண்ணம் ஈடுபட்டிருக்கும். வேடனைப் பொறுத்தவரையில் அது சரியே! ஆனால் மனித மேம்பாட்டிற்கு துணைபுரியும் மனத்தின் ஒரு நிலையாய் உள்ள நெஞ்சமும் அப்படி அலையலாமா? வேலையில்லை வீட்டிலென்று தெருவில்

அலைவதனால் தானே பலர் தீயவர்களாகவே மாறிவிடுகின்றனர். அப்படி அலையும்போது நெஞ்சமும் அந்த நிலையைத்தான் அடைகிறது.

"சும்மா அலையுமென் வேட நெஞ்சம்" என்று வேதனைப் படுகின்ற இராமலிங்க வள்ளலார், அப்படி அலைவதற்குக் காரணம் 'பொல்லாத மாயை'தான் என்றும் குறிப்பிடுகின்றார். பொல்லாத மாயையின் பிடியிலிருந்து நெஞ்சத்தை மீட்டு நிலைத்து நிற்கும் தன்மையைத் தோற்றுவிக்கவேண்டும். மாயையின் பிடியில் சிக்குண்டு நெஞ்சம் தவிப்பதை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறார் அவர்.

"ஆற்று நிறைய வெள்ளம் பெருக்கெடுத்து வருகிறது. கரையோரங்களிலுள்ள பெரு மரங்களையெல்லாம் அவ்வெள்ளம் வேரோடு பேர்த்து நீரோடு அடித்துவருகிறது. அவ்வெள்ளத்தில் சிறிய துரும்பு ஒன்றும் சிக்கிக் கொண்டுவிட்டது. விரைந்து செல்லும் அப்பெரு வெள்ளத்தில் அச்சிறு துரும்பு என்னபாடு பட்டிருக்கும்?... மாயையென்ற பேராற்று வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் நெஞ்சம் என்ற சிறு துரும்பின் நிலையும் அதுதான்!"

"மாயை யென்னும் நிறையாறு சூழும் துரும்பாய்ச்
சுழலுமென் னெஞ்சு" என்பது திருவருட்பா.

மாயங்கடந்த தூயோனாகிய இறைவனின் திருவடியை நினைக்கும்போதுதான் மாயையின் பிடியினின்றும் விடுபட்டு நெஞ்சம் தூய்மையடையும் என்பது வள்ளலார் கண்டு தெளிந்து காட்டிய முடிபாகும்.

நிலையின்றி ஓடியலையும் தன்மையைப் போலவே ஒன்றை உறுதியாகப் பற்றும் தன்மையும் நெஞ்சத்திற்கு உண்டு. நல்லனவற்றைப் பற்றும்போது நலம் பயக்கும்; தீயனவற்றைப் பற்றினால் தீங்கன்றோ விளைந்துவிடும். பெரும்பாலும் தீயனவற்றையே நெஞ்சம் விரைந்து பற்றுகிறது என்பது சமயச் சான்றோர் கருத்தாகும். அந்தப் பற்றின்றும் விடுபட்டாலும் கூட, கேவலமான நிலைக்கே நம்மைச் சில நேரங்களில் நெஞ்சம் இட்டுச்சென்று விடுகிறது என்பதை,

'பற்றினதைப் பற்றும் எந்தாய். பற்றுவிட்டாற்கேவலத்தில்
உற்றுவிடும் நெஞ்சம்"

என்று இறைவனிடம் முறையிடுகின்றார் தாயுமானவர். அப்படிப் பற்றும் இயல்புடைய காரணத்தால்தான் பாசக்கடலில் மூழ்கித்

துன்ப முத்துக்களை எடுக்கும் நிலைமையும் நெஞ்சத்திற்கு ஏற்பட்டு விடுகின்றது என்கிறார் தாயுமானவர். பற்றுவோரை விடாது பற்றிக்கொண்டு அலைக்கழிக்கும் தன்மையுடையதே பாசம்; மனித வாழ்க்கையில் ஏற்படும் பெறும்பாலான துன்பங்கள் பாசத்தால் வருவனவே. பசுவாகிய உயிர்கள், பதியாகிய இறைவனைச் சென்று சேர்வதற்குத் தடையாக இருப்பதுடன் அரு நரகிற்கு ஆற்றுப்படுத்தும் தன்மை வாய்ந்தது பாசம். அந்தப் பாசத்துள் செல்லும் தம் நெஞ்சை நோக்கி,

''பாசத்துட் செல்லாத பல்காலும் பாழ்நெஞ்சே''

என்றுஎச்சரிக்கின்றார் தாயுமானவர்.ஒருமுறை,இருமுறை அல்ல, பன்முறையும் பாசவலைக்குள் அவர் நெஞ்சம் சிக்கித் தவித்துள்ளது.எனவேதான் அதன்மீது அவருக்குள்ள ஆத்திரம் புலப்படுமாறு'பாழ் நெஞ்சே' என்று இகழ்ந்துரைக்கின்றார். நம்மில் பலரின் நெஞ்சம் அந்தப் பட்டியலில் இடம்பெறும் நிலையில் தானே உள்ளது! அந்நிலையினின்றும் விடுபடவேண்டுமானால், ''முக்கணெங் கோவைப்பணி நெஞ்சே!'; அவ்விறையின் ''பாதமே கதிமற்றிலை பாழ் நெஞ்சே!'என்றெல்லாம் அறிவுறுத்தும் அவர், உண்மையில் நம்மைக் காக்கும் தகுதி அவன் ஒருவனுக்குத் தான் உண்டே தவிர, சுற்றமென்ற பேரில் நம்மைச் சூழ்ந்துள்ள மனிதர்களுக்கு இல்லை யென்பதை,

''சுற்றமோ நமைக் காக்கும் சொலாய் நெஞ்சே''

என்று நெஞ்சையே கேட்பதுபோலக் கேட்டு, அது இயலாது என்ற உண்மையினையும் உணர்த்துகிறார் அவர்.

நெஞ்சின் அழுக்கு, அற்றம், வஞ்சனை பொய்மை அனைத்தையும் போக்கித் தூய்மைப் படுத்துவதற்குரிய ஒரே வழி இறைவனை நினைந்து தொழுதலே என்ற உண்மையைத் தான் பக்தி இலக்கியங்கள் அனைத்தும் உணர்த்துகின்றன.

பாரதியாரும் இதையும் வலியுறுத்துகின்றார்.

''நெஞ்சம் சக்தி தனக்கே கருவியாக்கு''

''காளிமீது நெஞ்சம் - என்றும் கலந்து நிற்கவேண்டும்''

''நெஞ்சம் ஈனக் கவலைகள் எய்திடும்போதில்''

மறவாது கண்ணனைப் போற்றி வணங்கவேண்டுமாம்; அப்படி வணங்கினால் அவன், ''நெஞ்சிற் கலக்க மிலாது செய்வான்'' என்கிறார்.

இறைவனிடத்துப் பக்திவைத்தால் மனிதர்க்கு ஞானம் கைவரப் பெறும்; அது கைவரப் பெற்றுவிட்டால் எவ்வித ஈனச் செயல்களையும் நெஞ்சம் நினைக்காது. சினத்தீ யெல்லாம் தோன்றமாட்டாது என்பது அவர் கருத்து.

"நிச்சயமாம் ஞானத்தை மறத்த லாலே
நேர்வதே மானுடர்க்குச் சினத்தீ நெஞ்சில்"

என்று அறுதியிட்டுக் கூறுகின்றார் அவர்.

"நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்" கூட சக்தியின் அருளால்தான் பெற வேண்டும்; பெற முடியும் என்று எண்ணியவன் பாரதியல்லவா!

சங்க இலக்கியங்களின் போக்கு

நெஞ்சின் நிலைபற்றிய முடிபுகளில் பக்தி இலக்கியங்களினின்றும் சங்க இலக்கியங்கள் மாறுபட்டே காணுகின்றன. நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டிலும் பல இடங்களில் நெஞ்சை விளித்துப் பேசும் பாங்கைப் பார்க்கிறோம். ஆனால் பக்தி இலக்கியங்களில் காணப்பட்டது போன்று நெஞ்சைப் பழித்துப் பேசும் தன்மையை இவைகளில் காண முடியவில்லை. 'பேதை நெஞ்சம்' 'தேறா நெஞ்சம்' 'இடும்பைகூர் நெஞ்சம்' என்ற அளவோடு நெஞ்சின் மீதுள்ள வெறுப்பை அடக்கிக் கொண்ட தன்மையை இவ்விலக்கியங்களில் காண்கிறோம். அதற்குரிய காரணங்களாக மூன்றைக் கருத இடமுண்டு.

1. நெஞ்சிற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய கவலை இன்மை.
2. நெஞ்சத்தை முழுநிலையில் புரிந்து கொள்ளாமை.
3. வாழ்க்கைச் சிக்கல் மிகுதியின்றி வளமோடு வாழ்ந்ததால் உடல், மனம், உலகநிலை இவைகளைப் பற்றிய ஆய்வில் இறங்க வேண்டிய அவசியமின்மை.

எனவே தான் பொது நிலையிலேயே நெஞ்சத்தைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்கள். ஆனால் பிற்றைநாளில் தோன்றிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றவர்கள் உடல், உயிர், ஆன்மா, இறைவன் போன்ற ஆய்வுகளில் தீவிரமாக இறங்கத் தலைப் பட்டதால் நெஞ்சத்தின் பல்வேறு நிலைகளையும் அறியும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. அதன் எதிரொலியைத்தான் அவர்கள் பாடல்களில் கேட்கிறோம்.

நெஞ்சமும் பிறப்பும்

ஒரு பிறவியில் உயிர்கள் புரியும் நன்மை தீமைகளுக்கேற்ப அடுத்த பிறவிகளை அடைகின்றன. மனிதன் தவறு செய்கின்றான் என்றால் அவனை அந்நிலைக்கு ஆக்குவதே அவனது நெஞ்சந்தான். எனவே மீண்டும் நாம் பிறப்பெடுப்பதற்குக் கருவியாக இருப்பதே நம்முடைய நெஞ்சந்தான் என்பது விளங்கும். நாம் பிறப்பெடுப்பதற்குக் காரணமாக இருப்பதோடன்றி, பிறவிகள் தோறும் அதே நெஞ்சமே நம்மைத் தொடர்ந்தும் வருகிறது என்று கூறுகின்றார் வள்ளலார்.

''எப்பிறப்பும் விட்டகலா என்னெஞ்சே''

என்று அவர் உரைப்பதிலிருந்து அவ்வுண்மை உறுதியாகின்றது. ஆனால், தாயுமானவரோ இதற்குமாறுபட்ட நிலையில் கூறுகின்றார். பிறப்பு நெஞ்சத்தால் ஏற்படுவன அல்ல என்ற தொனியில் நெஞ்சைப் பார்த்தே கூறுகின்றார் அவர்.

''நெஞ்சே, உன்னால் இல்லை பிறப்பதெனக்கே''
என்று உரைப்பதோடு நில்லாமல்,

''நெஞ்சே, பெரும்பிறவி சாராமல் கற்றோமே
மோனக் கரு

என்றும் அவர் உரைப்பதிலிருந்து, இறைவன் அருளைப் பெறுதற்குரிய கல்வியைக் கற்றுவிட்டால் நெஞ்சால் பெறும் பிறவித் துன்பத்தினின்றும் நீங்க வழியுண்டு என்ற உண்மையும் உணரக் கிடக்கிறது. இறைவனை மட்டுமே மதிக்கும் உறுதிப்பாடு அவருக்கிருந்ததால் தான்,

''நெஞ்சே, உனையோர் காசா மதியேன் நான்''
என்று சூளுரைத்தார். அந்த உறுதிப்பாட்டைப் பெற்றுவிட்டால் பிறவிப் பிணியும் நமைவிட்டு நீங்கும்.

நெஞ்சமும் வினையும்

நெஞ்சத்திற்கும் பிறப்பிற்கும் தொடர்புள்ளது போலவே, நெஞ்சத்திற்கும் வினைகளுக்கும் தொடர்புண்டு என்றும் கருதப்படுகிறது. இக்கருத்து, சங்க இலக்கியங்களிலேயே காணப்படுகிறது. நல்வினை, தீவினைகளை நம்முடைய நெஞ்சமே செய்கிறது. அதாவது கருவியாக அது இருந்து கொண்டு நம்மைச் செய்விக்கிறது. இக்கருத்து நற்றிணையிலேயே பேசப்படுகிறது.

"நெஞ்சே, நல்வினைப் பாற்றே"

என்று நல்வினை செய்த தன் நெஞ்சத்தைப் பாராட்டும் வகையில் அப்பாடல் வரி அமைந்துள்ளது.

தீவினை செய்த நெஞ்சமுடையவன் சூரன்; அவனை அழித்து உலகை உய்வித்தவன் அறுமுகச் செவ்வேள்; அதுபற்றிக் குறிப்பிடும் போது,

"வல்வினை நெஞ்சச் சூரனைத் தடிந்த வீரனை"

என்று இராமலிங்க அடிகளார் போற்றிப் பரவுகின்றார். எனவே, இரண்டு நிலைகளிலும் நெஞ்சம் தொழிற்படும் என்பது தேற்றம்.

முற்பிறப்பில் நம் நெஞ்சம் செய்தவினை இப்பிறப்பிலும் வந்து வருத்தலுண்டு; அந்நிலையில் நம்மைக் கரையேற்றிக் காக்கும் தெப்பமாக அமைவதே இறைவன் திருவடி. எனவே, அவ்வினைகளை எண்ணியே அஞ்ச வேண்டியதில்லை என்பதை,

"ஆல வினையால் நெஞ்சே நீ அஞ்சேல்"

"ஆய வினையால் நெஞ்சே நீ அஞ்சேல்"

என்றெல்லாம் பன்முறை தம் நெஞ்சிற்கு ஆறுதல் கூறுகின்றார் வள்ளலார். அதே சமயம், இப்பிறப்பில் இறைவன் பேரருளைப் பெற்றுப் பேரின்ப வெள்ளத்தில் நீந்தித் திளைப்பதற்குத் தம் நெஞ்சம் எத்தகைய பெருந்தவமியற்றியிருக்கவேண்டும் என்று திருநாவுக்கரசர் வியந்து பாடுவதையும் பார்க்கிறோம்.

"எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே!"

என்பது அவரது அருள்வாக்கு.

"தீவினைக்கே தாழ்வுறும் நெஞ்சினர்" களைப் பார்த்து இரங்கும் 'பெரிய திருவந்தாதி' ஆசிரியர், எந்த வினையையும் மாற்றும் வல்லமை மிக்க இறைவன் உண்டே என்பதை,

"வல்வினையை மாற்றோனோ நெஞ்சே"

என்று தம் நெஞ்சிற்குக் கூறுவது உலகிற்கே உணர்த்தும் உண்மையாகும்.

நெஞ்சம்-உட்கண்

பரந்த உலகைப் பார்த்துப் புரிந்து கொள்ள நமக்குத் துணை செய்வன, நம்முடைய புறக்கண்கள்; இது புறத்துறுப்புகளில் ஒன்று. அதே போலப் புறக்கண்களால் கண்டு தெளிய

முடியாத நுண்பொருள்களின் நுட்பத்தை உணர்ந்து தெளிய வைக்கும் உட்கண்ணே நம்முடைய நெஞ்சம். எனவே, இது அகத்துறுப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வுண்மை யைப் 'பெரிய திருவந்தாதி' அருளிய ஆழ்வார்,

"நெஞ்சென்னும் உட்கண்ணேற் காணு முணர்ந்து"

என்று குறிப்பிடுகின்றார். புறக்கண்கள் பழுதானால் நம்மைச் சுற்றியுள்ளனவற்றை அறிய முடியாது; அகக் கண்ணாகிய நெஞ்சம் பழுதானால் உண்மைப் பொருள்களையே உணர முடியாது என்பது கருதியே அதையும் ஓர் கண்ணாகக் கூறிய நுட்பம் வியத்தற்குரியது.

உவமை, உருவகங்களில் நெஞ்சம்!

நெஞ்சத்தின் தன்மைகளையும், அது தொழிற்படும் நிலைகளையும் விளக்குவதற்குப் புலவர்கள் பல்வேறு உவமைகளையும், உருவகங்களையும் ஆங்காங்கு கையாண்டுள்ளனர். அவற்றின் இயல்புகளையும் ஆராய்வது நெஞ்சத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளத் துணைபுரியும்.

நெஞ்சமும் உவமைகளும்

1.	இழுதை நெஞ்சம்	அப்பர் தேவாரம்
2.	பிண நெஞ்சம்	திருவாசகம்
3.	இரும்பு நெஞ்சம்	திருவாசகம்
4.	கல்நெஞ்சு	திருவாசகம்
5.	கல் நெஞ்சு	திருமந்திரம்
6.	இரும்புபோல் வலிய நெஞ்சம்	நாலாயிரத் திவ்யபிரபந்தம்
7.	விடநெஞ்சம்	நாலாயிரத் திவ்யபிரபந்தம்
8.	கல் ஒக்கும் நெஞ்சு	கம்பர்
9.	மரம் தான் எனும் நெஞ்சினள்	கம்பர்
10.	இரும்பின் நெஞ்சினேன்	கம்பர்
11.	இழுதை நெஞ்சினேன்	கம்பர்
12.	நெஞ்சினிருண்டது நீலவானம்	கம்பர்
13.	கனல்புரை நெஞ்சினர்	கம்பர்
14.	காரன்ன நெஞ்சினர்	கம்பர்
15.	புண் பிளந்தனைய நெஞ்சன்	கம்பர்
16.	தீநெஞ்சம்	தாயுமானவர்
17.	கல் நெஞ்சம்	தாயுமானவர்

18.	இரும்பு நேர் நெஞ்சம்	தாயுமானவர்
19.	மரப்பான்மை நெஞ்சு	தாயுமானவர்
20.	மண்ணாங்கட்டி நெஞ்சு	தாயுமானவர்
21.	கல் நெஞ்சம்	திருவருட்பா
22.	செம்மரம்போல்தணிந்தநெஞ்சேன்	திருவருட்பா
23.	துரும்பெனச் சுற்று நெஞ்சம்	திருவருட்பா
24.	இரும்பினேர் நெஞ்சம்	திருவருட்பா
26.	இழுதை நெஞ்சினேன்	திருவருட்பா
27.	எட்டிக்காய் நெஞ்சம்	திருவருட்பா

உவமைகளால் உணரப்படுவன

மேலே காட்டிய உவமைகளிலிருந்து,

1. நெஞ்சத்தின் நிலையில்லாத் தன்மை; அதாவது, ஆங்காங்கு அலையும் தன்மை புலப்படுகிறது. இதை உணர்த்த 'இழுதை' என்ற உவமையை அப்பர், கம்பர், வள்ளலார் ஆகிய மூவருமே பயன்படுத்தியுள்ளனர். 'இழுதை'யைப் போன்று மயக்கும் தன்மையும், அலைக்கழிக்கும் தன்மையும் நெஞ்சத்திற்கு உண்டு என்பதும் தெரிகிறது.

2 நெஞ்சின் வலியதன்மை, அதாவது பிறருக்கு இரங்காத தன்மையும் உண்டு என்பதை 'கல் நெஞ்சம்' 'இரும்பு நெஞ்சம்' போன்ற சொற்கள் உணர்த்துகின்றன. இவ்வுவமைகளைப் பலரும் பலமுறை கையாண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

3. நல்லனவற்றை நினைக்காமலும் சிலபோது தொழிற்படாமலும் வாளாவிருக்கும் தன்மையைப் 'பிண நெஞ்சம்' 'மரப் பான்மை நெஞ்சம்' என்ற சொற்கள் உணர்த்துகின்றன. 'பிண நெஞ்சம்' என்று மணிவாசகர் மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

4. அலை மோதும் நெஞ்சின் நிலையைத் 'துரும்பு' என்ற உவமையும், வஞ்சக உணர்வுகள் நெஞ்சில் நிறைந்திருப்பதை 'காரன்ன நெஞ்சு' போன்ற உவமைகளும், சினம், செருக்கு போன்ற தீய இயல்புகள் இருப்பதை 'கனல் புரை நெஞ்சு', 'தீ நெஞ்சு', 'விட நெஞ்சு' போன்ற சொற்களும் உணர்த்து கின்றன. சிலபோது பயன்படாச் செயல்களையும் நெஞ்சு செய்து விடுகிறது என்பதை 'மண்ணாங்கட்டி' என்ற உவமையும் உணர்த்துகிறது.

மேலே காட்டிய சான்றுகளிலிருந்து நாம் அறியக்கூடிய உண்மை ஒன்றுண்டு. அதாவது, நெஞ்சின் தீய தன்மைகளை விளக்குவதற்கு மட்டுமே புலவர்கள் உவமைகளைக் கையாண்டுள்ளனர் என்பதே அது.

நெஞ்சமும் உருவகமும்

1. சரக்கறையோவென்றனி நெஞ்சம் — அப்பர்
2. நெஞ்சமென்பதோர் நீள்கயம் — அப்பர்
3. தகவுடையார் நெஞ்சிருக்கை — அப்பர்
4. நெஞ்சங்கல்லாம் — மணிவாசகர்
5. நெஞ்சத் திருட்டறை — திருமூலர்
6. நெஞ்சத்துக் கோயில் — திருமூலர்
7. நெஞ்சச் சகளம் — திருமூலர்
8. தாளினைக் கொரு வாரமாகுமென் நெஞ்சமே — திவ்யபிரபந்தம்
9. என்னெஞ்சகமே கோயிலாய் — திவ்யபிரபந்தம்
10. நெஞ்சென்னும் உட்கண் — திவ்யபிரபந்தம்
11. ஈர நெல்வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய் — திவ்யபிரபந்தம்
12. நெஞ்சகமான பூமிவெளி — தாயுமானவர்
13. இரும்போ, கல்லோ, மரமோ எனும் நெஞ்சம் — தாயுமானவர்
14. வஞ்சனை அழுக்காறாதி வைத்திடும் பாண்டமான நெஞ்சு — தாயுமானவர்
15. நெஞ்சமாங்கல் — தாயுமானவர்
16. நெஞ்சங்கிண்ணமாய் — தாயுமானவர்
17. என் நெஞ்சம் ஐயா தீயுண்டிருந்த மெழுகலவோ — தாயுமானவர்
18. சுழல் நெஞ்சமாகிய பாதரசம் — தாயுமானவர்
19. நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம் — தாயுமானவர்
20. திண்ணிய நெஞ்சப் பறவை — தாயுமானவர்
21. நெஞ்சப் பாவியை — தாயுமானவர்
22. என்னெஞ்சோர் கோயில் — திருவருட்பா
23. நெஞ்சக்கல் — திருவருட்பா
24. வஞ்சநெஞ்சம் கல் மலையோ, இரும்போ, செம்மரமோ பாறைக்கல்லோ, முருட்டுக்கட்டையோ — திருவருட்பா

25. நெஞ்சக் குரங்கு (பன்முறை) திருவருட்பா
26. நெஞ்சகப்பாவி திருவருட்பா
26. வன்னெஞ்சப் பேதை திருவருட்பா

உருவகங்களாம் உணரப்படுவன

மேலே காட்டிய சான்றுகளிலிருந்து நெஞ்சின் நல்லியல்புகளும் தீய தன்மைகளும் அறியக்கிடக்கின்றன. நெஞ்சத்தைக் கோயிலாகப் பலரும் உருவகப்படுத்தியுள்ளனர். அது எல்லோருடைய நெஞ்சத்தையும் அல்ல என்ற குறிப்பை "தகவுடையார் நெஞ்சிருக்கை" யாக மட்டுமே கொண்டு இறைவன் வந்து தங்குவான் என்று குறிப்பிடுகிறார் நாவுக்கரசர். ஈரமென்கின்ற நெல் விளையும் இனிய வயலாகவும், இறையடியார் தாளிணைகளுக்குச் சூட்டும் மாலையாகவும், அனலிடை மெழுகாகவும் நெஞ்சத்தை உருவகப் படுத்தியுள்ளனர். இந்த நிலை குறைவே. பெரும்பாலும் நெஞ்சத்தின் தீய தன்மைகளையே உருவகங்களும் உணர்த்துகின்றன.

இருட்டறையாகவும், தீய சரக்குகள் சேர்த்து வைக்கப்பட்ட அறையாகவும், வஞ்சனை, பொறாமை போன்ற பொருள்கள் வைக்கப்பட்ட பாத்திரமாகவும், கல்லாகவும், மரமாகவும், இரும்பாகவும், முருட்டுக் கட்டையாகவும் பல இடங்களில் நெஞ்சம் உருவகப்படுத்தப் பட்டுள்ளதை உணர்கிறோம்.

பாவியாகவும், பேதையாகவும் இருப்பதோடன்றி அங்காங்குப் பறந்து திரியும் 'பறவை'யாகவும் நெஞ்சம் உருவகிக்கப் பட்டுள்ளது. பறந்துமட்டுந்தானா திரியும்? மரத்திற்கு மரம் தாவிச் செல்லும் குரங்காகவும் நெஞ்சம் இருக்கும் இயல்பை வள்ளலார் தம் அருட்பாவில் பன்முறை குறிப்பிட்டுள்ளார் சுழல்கின்ற நெஞ்சத்தின் தன்மையை நோக்கி அதைப் பாதரசம் என்கிறார் தாயுமானவர். நீர் அலைகள் ஓயாது மோதிக்கொண்டிருக்கும் நீள்கயத்தையும் நினைவலைகள் ஓயாது மோதிக் கொண்டிருக்கும் நெஞ்சத்தையும் ஒன்றாகக் காண்கிறார் அப்பரடிகள். உட்கண்ணாக நெஞ்சம் இருக்கும் நுட்பத்தை உணர்த்துகிறது திவ்யப்பிரபந்தம்.

விளித்தொடராக நெஞ்சம்

உயிருள்ள பொருள்களையும், உயிரற்ற, ஆனால் உருவமுள்ள பொருள்களாகிய மலை, கடல், ஆறு, மேகம் போன்றவற்

றையும் முன்னிலைப்படுத்திப் பேசுவது இலக்கிய வழக்கு. ஆனால் நுண்பொருளாகிய நெஞ்சத்தையும் முன்னிலைப் படுத்திப் பேசிய பாங்கை, சங்க இலக்கியங்களிலிருந்து பாரதியார் கவிதை வரையிலும் காண முடிகிறது.

1. அன்பிலை வாழியெம் நெஞ்சே — நற்றிணை
2. எழுமதி நெஞ்சே துணிபுமுந்துறுத்தே — புறநானூறு
3. என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே — அப்பர் தேவாரம்
4. மதியிலி மடநெஞ்சே — திருவாசகம்
5. பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே — திருமந்திரம்
6. மருளொழி நீ மடநெஞ்சே — திவ்யபிரபந்தம்
7. ஓயாமல் உன்னி உருகு நெஞ்சே — தாயுமானவர்
8. நன்னெஞ்சே கோயிலென — திருவருட்பா
9. இன்னுமொரு முறை சொல்வேன்பேதை நெஞ்சே — பாரதியார் கவிதைகள்

கம்பராமாயணம் காவியமாய் இருப்பதாலும் கதைமாந்தர்கள் பேசும் பாங்கில் அமைந்ததாலும் நெஞ்சை விளித்துக் கூறும் வாய்ப்பு அங்கே ஏற்படவில்லை போலும்.

நிறைவுரை

நெஞ்சம் என்ற சொல்லமைப்பு, அதன் தன்மைகள், தொழிற்படும் நிலைகள், அது தூய்மையடைவதற்கான வழிகள் ஆகியனவற்றை எடுத்துக்கொண்ட இலக்கியங்களின் வழிநின்று இதுகாறும் கூறப்பட்டது.

உள்ளம்

சொல்லமைப்பு

மனத்தின் நிலைகளில் ஒன்றைக்குறிப்பதே இச் சொல். இது உள்ளம், உளம், உள்ளகம் என்றெல்லாம் வழங்கப்பெறும்.

(எ-டு) "அறிவும் உள்ளமும் அவர் வயிற் சென்றன" நற்றிணை
"வந்தென் உளம் புகுந்த ஆராவமுதாய்" திருவாசகம்
"உளங்கொள் அன்பர்தம் உள்ளகத் திருப்போர்"
திருவருட்பா

உள்ளம் என்ற சொல் 'உள்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்திருக்க வேண்டும் உள் + அம் = உளம் என்று முதலிலிருந்து அதுவே பின்பு உள்ளம் என்றும், உள்ளகம் என்றும் ஆகியிருக்க வேண்டும். ஏனெனில் இன்றும் 'உள்' என்ற சொல்லே உள்ளம் என்ற பொருளையும் தந்து நிற்கின்றது.

"உள் மகிழ்ந்த நாதனூர்"
"என்னுள் புகுந்தான்"

என்று நாலாயிரத்திவ்ய பிரபந்தம் கூறுகிறது. இதே வழக்கை வேறு இலக்கியங்களிலும் பரக்கக் காணமுடிகிறது.

உள்ளுதல், உள்குதல் போன்ற சொற்களே உள்ளத்தின் தொழிலை உணர்த்தும் நிலையில் உள்ளன. அச்சொற்களுக்கு நினைத்தல் என்பது பொருளாகும்.

(எ-டு) "உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளம்" புறநானூறு
"உள்குவார் உள்ளத்தென்றும்" அப்பர் தேவாரம்

இச்சொல் இப்பொருள்களில் இன்று வழங்கப் பெறினும் தொடக்கத்தில் உள்ளம் என்பது மனவலிமையைக் குறிக்கும் நிலையிலுள்ள சொல்லாகவே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

"உள்ளம் உடைமை உடமை" என்று குறிக்கும் திருக்குறளில், உள்ளம் என்ற சொல் மனவலிமையையே உணர்த்துகிறது. 'ஒடுங்கா உள்ளம்', 'உரனுடை உள்ளம்' என்ற புறநானூற்றுச் சொற்களும் மனவலிமையைத்தானே உணர்த்துகின்றன?

'உள்' என்ற சொல்லுக்கு 'உள்ளே' என்ற பொருள் இன்று வழக்கிலிருப்பினும் 'வலிமை' என்ற ஒருபொருளும் அதற்குண்டு என்பதைப் புறநானூறு காட்டுகிறது.

"உள்ளி லோர்க்கு வலியாகுவன்"

என்ற வரி, வலிமையற்றவர்களுக்கு வலிமையாக இருந்து துணை செய்த ஒரு மன்னனைப் பற்றிப் பாடப்பட்டதாகும்.

உள்ளம், உள்ளகம் என்ற இரு சொற்களும் பொதுவாக மனித மனநிலையை விளக்கப் பயன்படினும் 'உளம்' என்ற சொல் இறைவனைப் பற்றியோ, அவதார புருஷர்களைப் பற்றியோ குறிப்பிடும் இடங்களில் மட்டுமே பெருவழக்காக வருவதைக் காண்கிறோம்.

"உளங்கனிந்திருக்கும் அடியார்" —திவ்விய பிரபந்தம்
"உளங்குளிர அமுது செய்து" —திவ்விய பிரபந்தம்
"திருவுள மிரங்காத தன்மையால்" —தாயுமானவர்
"கருதும் அடியார்கள் உளம்காண" —தாயுமானவர்

இதுபோன்ற பலசான்றுகளைப் பக்தி இலக்கியங்கள் அனைத்தினின்றும் காட்டலாம். பெருவழக்கு இப்படிப் பட்டதெனவே சிறு வழக்கிற்றாக மனிதர்களைப் பற்றியும் வருமென்பது பெற்றாம்.

இறைவனோடு 'உளம்' என்ற சொல்லிற்கு இருக்கும் தொடர்புச்சிறப்புக் கருதியே 'திரு' என்ற அடைசொல் சேர்ந்து 'திருவுளம்' என்று வழங்கப்படுகிறது. 'திருநெஞ்சம்', 'திருமணம்' 'திருச்சிந்தை' என்றெல்லாம் வழக்கிலில்லாமையே இச்சொல்லின் தனித்தன்மையை அறிந்து கொள்ளத்தக்க சான்றாகும்.

இலக்கியங்களில் உள்ளம் என்ற சொல்

இலக்கியங்களில் இச்சொல் எந்த அளவிற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்று காண்பதும் இவ்வாய்விற்கு

அடிப்படையான ஒன்றே. அப்போதுதான் காலத்தின் மாறுதலுக் கேற்ப இச்சொல்லைப் பயன் படுத்திய முறைகளில் உள்ள வேறு பாட்டையும் நாம் அறிய முடியும்.

இலக்கியம்	எடுத்தாளப் பெற்ற இடங்கள்
நற்றிணை	15
புறநானூறு	21
அப்பர் தேவாரம்	89
திருவாசகம்	58
திருமந்திரம்	74
நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்	103
கம்பராமாயணம்	214
தாயுமானவர் பாடல்கள்	46
திருவருட்பா	443
பாரதியார் கவிதைகள்	117

சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டிலும் இச்சொல் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளது. நற்றிணையில் 'உள்ளுதல்' என்ற பொருள் தருமாறு பலவிடங்களிலும் காதல் உள்ளத்தின் வலிமையைக் குறிக்குமாறு சில விடங்களிலும் கையாளப்பட்டுள்ளது. புறநானூற்றில் மனவலிமையைக் குறிக்குமாறு பலவிடங்களிலும், 'உள்ளுதல்' என்ற நிலையில் சில விடங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. இந்த இரண்டு இலக்கியங்களிலும் இறைவனைப் பற்றிய நிலையில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை.

ஏனைய பக்தி இலக்கியங்கள் அனைத்திலும் இறைவனோடு தொடர்பு படுத்தியே உள்ளம், உளம் போன்ற சொற்களினைப் பயன் படுத்தியுள்ளார்கள். "இறைவனைத் தேடி நான் வேறெங்கும் செல்லவில்லை. என்னுடைய உள்ளத்திலேயே அவன் இருக்கின்றான்; பன்முறையும் முயன்று முடிவில் இவ்வுண்மைப் பொருளைக் கண்டு கொண்டேன்" என்கிறார் நாவுக்கரசர்.

"தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"

என்பது அவர்தம் திருவாக்கு.

திருவாசகத்திலும் அதே நிலையைத்தான் காண்கிறோம். "இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் எழுந்தருளியிருப் பான்; ஆனால் அவனை உணரும் அறிவு இல்லாதவர்களால்

அவனைக் காண்டல் அரிது; அவர்கள் கண்களில் படாமல் ஒளிந்திருப்பான். ஆனால் உண்மையான அன்பர்கள் உள்ளத்தில் எப்போதும் அப்படி அவன் மறைந்து நிற்பதில்லை'' என்பதை மணிவாசகப் பெருமான் உணர்ந்து உரைக்கின்றார்.

''ஓரா தாருள்ளத்து ஒளிக்கும் ஒளியானே''

என்ற சிவ புராணப் பாடலும்,

''விரும்பும் அடியார் உள்ளத்துள்ளாய்''

என்ற நீத்தல் விண்ணப்பப் பாடலும் அவ்வுண்மைகளை உணர்த்தி நிற்கும்.

''ஒண்சுடராகி என் உள்ளத்து இருக்கின்''றார் இறைவன் என்று உறுதியோடு உரைக்கின்றார் திருமூலர். அவர் பாடல்கள் பெரும்பாலும் தத்துவ விளக்கமாக அமைந்திருப்பதால், உள்ளத்தைப் பற்றிய தெள்ளிய பல விளக்கங்களை இறைவனோடு தொடர்புபடுத்தி அவர் பேசும் பாங்கைத் திருமந்திரத்தில் காண்கிறோம். இறைவன் உள்ளத்திற்குள்ளே தான் உள்ளான்; அவனைக் காணும் பக்குவமில்லார்க்கு ஒளிந்து நிற்கின்றான் என்ற உண்மையை,

''உள்ளத் துள்ளே தான் கரந்தெங்கும் நின்றவன்''

என்கிறார் அவர். அந்த இறைவன் ''உரநெறியாகி யுளம் புகுந்தான்'' என்றும் அவர் குறிப்பிடுகின்றார். 'உரம்' என்ற சொல் மனவலியையும் குறிக்கும் அல்லவா! ''உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை'' என்று தானே தமிழ்மறையும் கூறுகிறது! எனவே இறைவனைப் பற்றி எண்ணுவதற்கும், அவனைக் காண்பதற்கும் கூட மனவலிமை தேவைப்படுகிறது என்ற உண்மை திருமந்திரத்தால் உணரக்கிடக்கிறது.

''தொழுவோர் உள்ளமே ஞான வொளி''யாக இறைவன் காட்சி தருகின்றான் என்று விளக்குகின்றார் தாயுமானவர். இறைவனது பேராற்றலையும், தமது தாழ்ந்த நிலையையும் நினைந்து நைந்து பாடிய திறமே இவரது பாடல்களில் மிகுதியும் காணப்படுவதால் 'நெஞ்சம்' என்ற சொல்லில் பாதியளவிற்கும் குறைவாகவே 'உள்ளம்' என்ற சொல்லை இவர் எடுத்தாண்டுள்ளார். அவரது அருள் கனிந்த உள்ளத்திலேயே இறைவன்

ஒளிந்திருந்து அவரை ஆட்டுவித்தான் என்று உளமுருகிக் கூறுகிறார்.

''உள்ளத்தி னுள்ளே ஒளித்தென்னை ஆட்டுகின்ற
கள்ளக் கருணையே...''

என்று அவர் குறிப்பிடும் முறை வியப்பிற்குரியது. கருணை வடிவாக இறைவனைக் கண்ட அவர், உள்ளத்தில் ஒளிந்து நின்ற தன்மையால் 'கள்ளக் கருணை' என்று அடைசொல்லோடு குறிப்பிடுகிறார்.

நாரணனை நாயகனாகப் பாவித்து மனம் நெகிழ்ந்து பாடிய திறத்தையே நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் மிகுதியும் காண்கிறோம். எனவே தான் 'நெஞ்சம்' என்ற சொல்லில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாகவே 'உள்ளம்' என்ற சொல்லை ஆழ்வார்கள் பயன்படுத்தியுள்ளார்கள். அந்த உள்ளத்தை இறைவன் எழுந்தருளும் ஆலயமாகவே அவர்கள் கண்டுள்ளார்கள்.

''என்னுளங் கோயில்''
''அடியேன் உள்ளத் தின்னுயிரே''
''என்னுள்ளம் கவர்ந்தானை''

என்றெல்லாம் இறைவனோடு உள்ளத்தை இயைபுபடுத்திப் பாடியுள்ளார்கள்.

இறைவன் அவதாரமாகிய இராமனைப் பற்றிப்பேசிப் பக்தி மணம் கமழச் செய்யினும், மானுடத்தின் மாண்பும் கம்பராமாயணத்தில் காட்டப்பட்டுள்ளதால் ஊக்கமுடைமையாகிய மனவலிமை இங்கே பகுதியும் பேசப்படுவதை உணர்கிறோம். எனவே தான் 'நெஞ்சம்' என்ற சொல்லைக் கையாண்ட அளவிற்கு 'உள்ளத்தை'யும் கம்பர் கையாண்டிருப்பதை உணர்கிறோம்.

''ஊக்கம் உள்ளத்து உடைய முனிவரால்
காக்கல் ஆவது...''

என்று குறிப்பிடுவார் அவர். உள்ளத்தின் பல்வேறு இயல்புகளையும் கம்பர் விரிவாக நோக்கி விளக்கியுள்ள திறம் நினைந்து மகிழுதற்குரியது.

ஆய்விற்கு எடுத்துக் கொண்ட நூல்களில் அதிக இடங்களில் 'உள்ளம்' என்ற சொல்லைக் கையாண்டிருப்பது திருவருட்பாவே. 'நெஞ்சம்' என்ற சொல்லைக் காட்டிலும் இச்சொல்லையே இந்நூலாசிரியர் அதிக இடங்களில் எடுத்தாண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சமுதாய வளர்ச்சியாலும், காலப் போக்கில் சமய உலகில் ஏற்பட்ட மாறுதலாலும் இம்மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். மற்றவர்கள் இறைவனைக் கண்டு வழிபட்ட முறைக்கும் வள்ளலார் கண்டு வழிபட்ட முறைக்கும் உள்ள வேறுபாட்டையும் உணரவேண்டும். இறைவனை ஜோதி வடிவாகக் கண்டு வழிபட்டவர் வள்ளலார்.

"அருட் பெருஞ் ஜோதி என்னுளத்தே நீதியிற் கலந்து நிறைந்தது" என்பது அவர்தம் அருள்வாக்கு. அத்துடன், சமயம் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்து நிற்க வேண்டும் என்ற புரட்சிக் கருத்துடையவர் வள்ளலார். அதனால் அவர் ஆலயத்திற்குள்ளே ஆண்டவனைக் கண்டு தொழுததோடு அமைந்து விடாமல் சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளையும் கண்டு வன்மையாகச் சாடினார். அந்த மனத்துணிவு அவரிடம் காணப்பட்டதே 'உள்ளம்' என்ற சொல்லை அதிக இடங்களில் கையாளுதற்குரிய காரணமா யிருத்தல் வேண்டும்.

பாடல்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் வள்ளலாரைப் போன்று அதிக இடங்களில் 'உள்ளம்' என்ற சொல்லைப் பயன்படுத்திய மற்றொரு கவிஞர் பாரதியார். இவர்பெரும் பாலும் வள்ளலாரின் அடிச்சுவட்டிலேயே நடந்து பழகியவர். வள்ளலாரின் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு புதுக் கருத்துக்களைக் கூறியவர். எனவே அதே மனத்துணிவை இவரிடமும் காண்கிறோம்.

"உள்ளத்திலே உறுதி கொண்டாய் கொண்டாய்"

என்று பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்துக் கூறுகிறார்.

"வண்மையிலே உளத்திண்மையிலே"

சிறந்திருந்ததாகப் பாரத நாட்டைப் போற்றுகின்றார்.

"பராசக்தி யுளத்தின்படி நிகழும் உலகம்"

என்றும் உறுதியோடு கூறுகின்றார்.

சொற்களின் எண்ணிக்கையடிப்படையில் சில செய்திகளை இதுவரை நோக்கினோம். அச்சொல்லின் அடைமொழிகளை ஆதாரமாகக் கொண்டு அதன் தன்மை, தொழில்கள் ஆகியன வற்றை இனிக்காண்போம்.

நற்றிணை

1. அயர்ந்த உள்ளம்
2. உரும்பின் உள்ளம்
3. மதிவல் உள்ளம்
4. அள்ளல் அன்ன உள்ளம்
5. உரம்புரி உள்ளம்
6. பேரஞர் உள்ளம்
7. வினையே நினைந்த உள்ளம்
8. வருந்தும் உள்ளம்
9. அண்ணல் உள்ளம்
10. உணர்ந்த உள்ளம்

புறநானூறு

1. ஒடுங்கா உள்ளம்
2. கரப்பில் உள்ளம்
3. ஊனசை உள்ளம்
4. மடங்கா உள்ளம்
5. ஒல்கல் உள்ளம்
6. மாயா உள்ளம்
7. ஆண்டகை உள்ளம்
8. உரனுடை உள்ளம்
9. மடியுளம்
10. வளன் வலியுறுக்கும் உளம்

அப்பர் தேவாரம்

1. மறுகும் உள்ளம்
2. உருகுமென் உள்ளம்
3. உள்கும் உள்ளம்
4. நையும் உள்ளம்
5. இருளாய் உள்ளம்

திருவாசகம்

1. ஓராதா ருள்ளம்
2. அடியாருள்ளம்
3. நோக்கும் உள்ளம்
4. அளிபவர் உள்ளம்
5. வெதும்பும் உள்ளம்
6. கருணைக் கடலினுள்ளம்
7. கசிந்த உள்ளம்
8. நையுமுள்ளம்
9. உருகா உள்ளம்
10. கரந்து பரந்த உள்ளம்
11. பெருகுமுள்ளம்
12. தொழுதழு முள்ளம்
13. வெள்கு முள்ளம்
14. வாடு முள்ளம்
15. வடுவறியா உள்ளம்

திருமந்திரம்

1. வாயடையா உள்ளம்
2. ஒருங்கிய உள்ளம்
3. துய்யருள்ளம்
4. உரநெறியுள்ளம்
5. ஒடுங்கிநிலைபெற்ற உள்ளம்
6. ஓர்க்கின்ற உள்ளம்
7. ஊற்றுகை யுள்ளம்
8. உலையுளும் உள்ளம்

நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

1. மறவாத உள்ளம்
2. உவந்த வுள்ளம்
3. அழியுமுள்ளம்
4. உருகு முள்ளம்
5. துளங்கு முள்ளம்
6. இருளுடை உள்ளம்
7. இளைத்த உள்ளம்
8. எள்கிய உள்ளம்
9. குழையு முள்ளம்
10. களியு முள்ளம்
11. குளிரு முள்ளம்
12. மெலியு முள்ளம்
13. கலங்கு முள்ளம்
14. ஓராத உள்ளம்
15. தீவினை உள்ளம்

கம்பராமாயணம்

1. பொய்யிலா உள்ளம்
2. உவந்த உள்ளம்
3. உளைக்கும் உள்ளம்
4. செம்மை உள்ளம்
5. புலமை உள்ளம்
6. செவ்வழியுள்ளம்
7. கொதிக்கும் உள்ளம்
8. நவையில் உள்ளம்
9. வேகின்ற உள்ளம்
10. அற்பின்நார்அறாதஉள்ளம்
11. கள்ள உள்ளம்
12. சீறாத உள்ளம்
13. அறன்வழியொழுகுமுள்ளம்
14. கருணையுள்ளம்

தாயுமானவர்

1. பொய்யுடை உள்ளம்
2. கசியு முளம்
3. இருளா முள்ளம்
4. பாவியுள்ளம்
5. கொதிக்கு முளம்
6. இரக்கமிலா உள்ளம்
7. உருகு முள்ளம்

திருவருட்பா

1. உய்வறியா உளம்
2. தெருளுடைய உளம்
3. மெய்வைத்த உள்ளம்
4. தேறாவுள்ளம்
5. பதைக்கு முள்ளம்
6. வஞ்சகக் கருவுளம்
7. வெப்பா குள்ளம்
8. புரையறு முளம்
9. ஒன்றாத முளம்
10. ஒன்றாத உள்ளம்

பாரதியார் கவிதைகள்

1. சூதிலா உள்ளம்
2. காய்ந்த உள்ளம்
3. உணராவுள்ளம்

மேற்கண்ட அடைச் சொற்களிலிருந்து உள்ளத்தின் தன்மைகளையும் மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன:

1. பொதுத் தன்மைகள்
2. நல்ல தன்மைகள்
3. தீய தன்மைகள்

பொதுத் தன்மைகள்

உள்ளம் என்ற சொல் உணர்த்தும் பொருள்கள் பலவகைப் படுவன. காதல், வீரம், பக்தி, சமுதாய அமைப்பு முறைகள் போன்ற பலவற்றின் இயல்புகளையெல்லாம் விளக்குவதற்கு மேற்கண்ட நூல்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வவ்விடங்களில் அந்தந்த நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ள அடைமொழிகளின் மூலமே அதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. நூல்கள் நுவலும் பொருள்களிடையே வேறுபாடு களிருப்பினும் சில பொதுத் தன்மைகள் 'உள்ளம்' என்ற சொல்லிற்கு இருப்பதனை எல்லா நூலாசிரியர்களுமே உடன் பட்டுள்ளார்கள். அவையாவன.

1. நினைதல்
2. வருந்துதல்
3. உணர்தல்
4. அயர்தல்
5. உரனுடைமை
6. உருகுதல்
7. நைதல்
8. கசிதல்
9. குழைதல்
10. மெலிதல்
11. இளைத்தல்
12. கலங்குதல்
13. பதைத்தல்

பொதுத் தன்மைகளை உணர்த்தும் அடைமொழிகள் பலவாக இருப்பினும் அத்தன்மைகளை மூன்று வகைக்குள் அடக்கலாம்.

முதல் வகை

காதல் உள்ளங்களின் நிலையை விளக்கும் தன்மை நினைதல், வருந்துதல், உணர்தல், அயர்தல் போன்ற தன்மைகளை இதில்

அடக்கலாம் பேரின்பக் காதலாகிய ஆண்டவன் அடியார் உறவு பற்றிய நிலையையும் இதில் அடக்க இடமுண்டு.

"காரென்று அயர்ந்த உள்ளம்"
"வருந்தினை வாழியென் உள்ளம்" நற்றிணை
"உளங்கிடந்த வாற்றால் உணர்ந்து"
"நினைந்து நினைந்து உள் கரைந்துருகி"
நாலாயிரத்திவ்ய பிரபந்தம்

இவைபோன்ற பல சான்றுகளை இவ்வகைக்குக் காட்டலாம்.

இரண்டாம் வகை

மனவலிமையை அதாவது ஊக்கமுடைமையை உணர்த்துதல். உரனுடைத்தாதல் என்ற சொல்லைப் பலரும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளனர். அதுவேயன்றி 'உரும்பின் உள்ளம்' 'ஒடுங்கா உள்ளம்' 'மடங்கா உள்ளம்' 'மாயா உள்ளம்' போன்ற சொற்களையும் கையாண்டுள்ளனர். அச்சொற்களும் இதே தன்மையை உணர்த்துவனவே!

"உரம்புரி உள்ளமொடு சுரம்பல நீந்தி" நற்றிணை
"உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து"
"ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை"
"மடங்கலிற்சினைஇ மடங்கா உள்ளத்து"
"மாயா உள்ளமொடு பரிசில் உன்னி" புறநானூறு
"உரநெறியாகி உளம் புகுந்தானை" திருமந்திரம்

இவைபோன்று பலவிடங்களில் மனவலியைக் குறிக்கும் சொல்லாக உள்ளத்தைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

மூன்றாம் வகை

பக்தி உலகைப்பற்றியது இறைவன் அருள்வேண் தவிக்கும் அடியார்கள் மனநிலையை, அப்போது அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களை விளக்கும் தன்மை உருகுதல், நைதல், கசிதல், குழைதல், மெலிதல், இளைத்தல், கலங்குதல், பதைத்தல் போன்ற தன்மைகள் இவ்வகையில் அடங்கும்.

"ஊறி உருகுமென் னுள்ளமே"
"உருகி நைபவர் உள்ளங் குளிரவே" அப்பர்

"கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகி" மணிவாசகர்

"உகந்துகந்துள் மகிழ்ந்து குழையுமே"
நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்

"உள்ளமெலிவோ டுடல்மெலிவும் கண்டு" திருவருட்பா

இவைபோன்று வருவன வெல்லாம் இவ்வகையில் அடங்கும். இம் மூன்று தன்மைகளும் உள்ளத்தின் பொதுத் தன்மைகளாகும்.

நல்ல தன்மைகள்

மேற்கண்ட பொதுத் தன்மைகளை உள்ளம் பெற்றிருந்தாலும் அது தொழிற்படும் நிலைமைக்கேற்ப அதன் தன்மைகள் உயர்ந்து காணப்படுவதையும் ஆய்விற்கெடுத்துக் கொண்ட இலக்கியங்களின் மூலம் உணர்கிறோம். மேலே குறிப்பிடப்பட்ட அடைமொழிகளிலிருந்தே அத்தன்மைகளையும் உணரலாம்.

அவையாவன:

1. மதிவல்லமை
2. வினையே நினைதல்
3. கரப்பில்லாமை
4. கருணைக்குணமுடைமை
5. வடுவறியாமை
6. உவத்தல்
7. பொய்யிலாமை
8. செவ்வழி நிற்றல்
9. நவையில்லாமை
10. சீறாமை
11. அறன்வழியொழுகுதல்
12. சூதிலாமை

"உள்ளத்தனையது உயர்வு"

என்று கூறும் தமிழ்மறை. உள்ளத்தின் தன்மைகள் உயர்ந்திருந்தால் அதை உடைய மனிதனின் நிலையும்உயர்ந்து காணப்படும். அப்படி உயர்த்துவதற்குரிய உயரிய வழிகளைக் காட்டுவதே இலக்கியங்களின் படைப்பிற்குரிய அடிப்படை நோக்கமாகும்.

உள்ளம் திட்பமாக இருக்கும்போதுதானே அறிவுத் திட்பமும் அமையமுடியும்? நுண்ணிய நூல்கள் பல கற்பினும் ஒருவனிடம் உள்ள உறுதிமட்டும் இல்லையெனில் அவன் கற்ற கல்வியால் அவனும் பயன் எய்துவதில்லை; பிறரும் எய்தவிடுவதில்லை. போதிய கல்வியறிவு இல்லாவிட்டாலும்கூட மனவலிமையைப் பெற்ற ஒருவன் சாதனைகள் பல படைப்பதையும் உலகில் காண்கிறோம். எனவே ஒருவன் மதியில் வல்லவனாக இருப்பது அவன் உள்ளத்தைப் பொறுத்தே அமைகிறது.

"நின்று மதிவல் உள்ளமொடு மறைந்தலை ஆடி"
நற்றிணை

"அறிபவையெல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரியசற் குருவே" — திருவருட்பா

பெருங்கருணைப் பெருவள்ளலாகிய இறைவன் இராமலிங்க அடிகளார்க்குச் சற்குருவாகத்தோன்றி, அவர் அறியவேண்டிய அனைத்தையும் அறிவித்துள்ளார்; அந்த அறிவுத்திறம் அவர் அடைவதற்குக் காரணமே அவருக்கு இறைவனிடம் இருந்த உறுதிப்பாடு மிக்க பக்திதானே! அது அவரது உள்ளத்தின் நல்ல தன்மைகளில் ஒன்று! எடுத்த வினையிலேயே எண்ணத்தைச் செலுத்தி முடிக்கும் பாங்கும் உள்ளத்திட்பம் உடையவர்களுக்கே உடைய தன்மையன்றோ!

"வினையே நினைந்த உள்ளமொடு"

என்று கூறும் நற்றிணைப் பாடல்.

நல்ல தன்மைகளைப் பெற்றவுள்ளம் வஞ்சகம் அறியாது; வடுவேதும் அதில் காணமுடியாது; பொய்மை, பொறாமை போன்ற தீயகுணங்கள் அவ்வுள்ளத்தில் புகமுடியாது; அது எப்போதும் கருணைக் கடலாகவே காட்சியளிக்கும்; செல்வழியாகிய அறவழியிலேயே அது செல்லும்; அப்படிப்பட்ட நல்ல உள்ளத்தில் சீற்றத்திற்கே இடமில்லை; சூது, சூழ்ச்சிபோன்ற தீயபண்புகள் என்றுமே அதைச் சொந்தம்கொண்டாடமுடியாது. அப்படிப்பட்ட உள்ளங்களையே நல்ல ஆலயங்களாக எண்ணி இறைவனும் விரும்பிக் குடிபுகுவான்; இத்தகைய சிறந்த கருத்துக்களையெல்லாம் மேலே காட்டப்பட்ட அடைமொழிகளிலிருந்தும் அம்மொழிகளுக்குரிய இலக்கிய வரிகளிலிருந்தும் அறிய முடிகிறது.

"கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி"
புறநானூறு

"பொய்யிலா உள்ளத்தான்" — கம்பராமாயணம்

"கருணைக்கடலினுள்ளம்" — திருவாசகம்

"சினங்கடந்தோ ருள்ளச் செந்தாமரையில் செழித்து"
திருவருட்பா

"சூதிலா உளத்தினன் எந்தைதான்"
பாரதியார் கவிதைகள்

மேலே காட்டியனவற்றைப் போலப் பலசான்றுகளைக் காட்டலாம். இவைகள் அனைத்தும் உள்ளத்தின் நல்ல தன்மை களைக் காட்டுவனவாகும்.

தீய தன்மைகள்

நல்ல தன்மைகளை உள்ளம் பெற்றுச் சிறக்கும்போது அம் மனிதர்களை உத்தமர்கள் என்று உலகம் புகழக்காண்கிறோம்; ஆனால், அதற்குமாறாகத் தீய தன்மைகளை உள்ளம் பெறுமென்றால் அதன் விளைவுகளாகப் பல குற்றங்களைப் புரிகின்றனர்; திசைமாறிச் செல்கின்றனர்; "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று அப்பர் பெருமானே வருந்துகிறார் என்றால் தீய தன்மைகளை உடைய உள்ளத்தைப் பெற்றவர்கள் எப்படி யெல்லாம் கெட்டழிவர் என்று கூறத்தேவையில்லை. அப்படிப் பட்டவர்கள் ஒருபோதும் இறைவனைப்பற்றியும் அறிவதில்லை; அதனால் அவர்கள் உள்ளத்திலும் இறைவன் நிற்பதில்லை என்பதை,

"ஓராதா ருள்ளத்தில் நில்லார் தாமே"

என்று உணர்த்துகிறார் நாவுக்கரசர். அப்படிப்பட்ட ஏதங்கள் தன்னுள்ளத்துளேயும் இருந்தனவென்றும், அவைகளை யெல்லாம் இறைவனிடத்தே காட்டிய பக்தியால் அவன் நீக்கியருளினான் என்றும் ஆழ்வார் திருவாக்காய் நாலாயிரத்திவ்ய பிரபந்தம் கூறுகிறது.

"ஏதங்களாயினவெல்லாம் இறங்கவிடுவித்து என்னுளே..." என்பது அப்பாடல் வரி. எனவே, உள்ளத்திற்குச் சில தீய தன்மை களும் உண்டு என்பது தெரிகிறது. மேலே காட்டப்பட்ட அடை மொழிகளில் அவை எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைக் காண்போம். தீய தன்மைகளைக் குறிக்கும் சொற்களாவன.

1. பெருந்துன்பம் அடைதல்
2. சோம்பல் (மடி)
3. இருள் நிறைதல்
4. உண்மையறியாமை
5. வெதும்புதல்
6. வாடுதல்
7. பொய்யுடைமை
8. கொதித்தல்
9. இரக்கமிலாமை
10. அழிதல்
11. வேகுதல்
12. கள்ளம்
13. தெருளுடைமை
14. வஞ்சகம்
15. ஒன்றாத நிலை
16. காய்தல்

உள்ளத்திற்குரிய தீய தன்மைகளாக மேற்கண்டனவற்றை அறிகிறோம்.

(எ-டு)

"பேரஞர் உள்ளம் நடுங்கல் காணியர்" நற்றிணை

"அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப" புறநானூறு

"இருளாய உள்ளத்தி னிருளை நீக்கி" அப்பர்தேவாரம்

"ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே" திருவாசகம்

"கண்டுகண் டென்னுள்ளம் வாடுமிது வென்னே" திருவாசகம்

"வேகின்ற உள்ளத்தாளை" கம்பராமாயணம்

"பொய்யினேன் உள்ளத்திருந்து" தாயுமானவர்

"இரக்கமிலா வன்பாவி உள்ளத்தும் தாயுமானவர்

"வஞ்சகக் கருவுளக்கடையேன்" திருவருட்பா

இதுபோன்ற பலசான்றுகளை மேலே குறிப்பிடப்பட்ட நூல்களில் காணமுடிகிறது. தீய தன்மைகளாக நாம் காண்பவைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

முதற் பிரிவு

வாழ்வில் பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அதன் விளைவால் நம் உள்ளம் அடையும் மாறுதல்கள் இத்தகைய தன்மைகளால் அவ்வுள்ளம் உடையவன் மட்டுமே பாதிக்கப்படுகிறான்! பெரும்பாலும் இத்தகைய உள்ளங்களால் பிறருக்குத் தீங்கு விளைவதில்லை. இது தனிமனிதனைப் பற்றியது.

துன்பமடைதல், சோம்பல், வெதும்புதல், வாடுதல், அழிதல் போன்ற தன்மைகள் இப்பிரிவில் அடங்கும். உள்ளத்தில் உறுதி இன்மையால் ஏற்படும் தீங்குகளே இவைகள். துன்பமெதையும் துணிவோடு ஏற்கும் பாங்கைப்பெற்றுவிட்டவர்க்கு வாடுதல், வெதும்பல், அழிதல்போன்ற நிலைகள் என்றுமே இல்லை என்பதை வாழ்விலும் காண்கிறோம்; வரலாற்றிலும் படித்தறிகிறோம். துணிவுடைய ஒருவனை சோம்பற்குணம் என்றுமே நெருங்கமாட்டாது. "சோம்பேறிகளின் மூளைகள் சாத்தான் குடியிருக்கும் இடங்கள்" என்பார்கள். அப்படிப்பட்டவர்களால் நாடும் வீடும் என்றுமே நலம் பெறுவதில்லை.

"ஊக்கம் உள்ளத்து உடையமுனிவரால்
காக்கல் ஆவது"

என்பார் கம்பர். எனவே இத்தகைய தீயதன்மைகளை அகற்றும். ஒரே மருந்து ஊக்கமுடைமையேயாகும்.

இரண்டாம் பிரிவு

தன்னலத்தின் காரணமாகவும் உண்மையை உணராமையாலும் தான் கெடுவதோடு தன்னைச் சார்ந்தவர்களையும் கெடுக்கும் தன்மை இது. இத்தகைய தீய தன்மை உடைய உள்ளங்களால்தான் சமுதாயத்தில் குறைகளும், குற்றங்களும் பெருகுகின்றன.

உண்மையறியாமை, பொய்யுடைமை, தெருளுடைமை, கள்ளம், வஞ்சகம், இரக்கமிலாமை, உள்ளத்தில் இருளுடைமை போன்ற தன்மைகள் இவ்வரிசையில் அடங்கும்.

உண்மையை உணராதவர்களின் உள்ளத்தில் இறைவனும் கூட வெளிப்படாமல் மறைந்துகொள்கிறான்; உண்மை எதுவென்று உணராததனால்தான் பல பிரச்சினைகளே உருவாகின்றன என்பதையும் காண்கிறோம். உண்மையறியாமை என்ற சொல், உண்மைப் பொருளான இறைவனை அறியாமை என்ற பொருளும்தரும். அதனால் விளைவது தீங்குதானே! கள்ளம், வஞ்சகம் போன்ற தீய தன்மைகள் உடைய உள்ளங்கள் எப்போதும் பிறருக்குத் தீங்கு பயப்பதே தம் வாழ்க்கைக் குறிக்கோளாய்க் கொண்டிருப்பார்கள். தம்முடைய நலம் கருதி எத்தகைய இழிசெயல்களைச் செய்வதற்கும் அவர்கள் தயங்க மாட்டார்கள்; பழிவருமென்று பயப்படும் தன்மையும் அவர்களுக்கில்லை. அப்படிப்பட்ட பாவக்கடல்களுக்குள் மூழ்கியவர்களைக் கரையேற்றுதல் என்பது எளிதான காரியமல்ல; அதற்கு ஒரே வழி இறைவன் திருவடியைப் பணிந்து, தாம் செய்த தவற்றை நினைந்து வருந்துதலே. ஏனெனில் பாவக்கடலில் வீழ்ந்து உழலும் நம்மைக் கரையேற்றும் தகுதி அவன் ஒருவனுக்கே உண்டு என்பது சமயச்சான்றோர்களின் உறுதியான நம்பிக்கை.

"வன் பாவ வாழ்கடல் வீழ்ந்துள்ள மழுந்தும் நமை"

இறைவனே கரையேற்றுபவன் என்கிறோர் இராமலிங்க அடிகளார்.

உள்ளத்தில் இரக்கமில்லாதிருத்தலும், இருள் நிறைந்திருத்தலுமே கொலை, கொள்ளை போன்ற குணக்கேடுகளுக்குக் காரணம். ''வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடும்'' உள்ளப்பாங்கு நம் அனைவருக்கும் உருவாகிவிடுமென்றால், வலியோர், எளியோரை வாட்டுதல், 'மனிதர் உணவை மனிதர் பறித்தல்', 'மனிதர்நோக மனிதர் பார்த்தல்'போன்ற நிலைகளே மக்கட்சமுதாயத்தில் இல்லாமல் நீங்கிவிடுமே! உள்ளத்து இருள் நீங்கி ஒளிபெற, கருணையொளி வடிவான இறைவனை எண்ணித் துதிக்கவேண்டும். அப்போதுதான் உள்ளம் ஒளிபெறும். அப்படி,

''உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்''

சொல், செயல் எல்லாமே உண்மை வடிவாகிவிடும் என்கிறார் பாரதியார்.

''இரக்கமிலா வன்பாவி உளத்தும்''

கூட இறைவன் கருணை செய்கிறான் என்கிறார் தாயுமானவர்.

நம்முடைய உள்ளத்தையும், அது படும்பாட்டையும் அறிகின்ற ஆற்றல் உடைய ஒருவன் இறைவனே என்பதை,

''உள்ளம் அறிவாய் உழப்பறிவாய்''

என்கிறார் அவர். எனவே அனைத்தையும் அறிகின்ற அவனே தீமைமாற்றித் தூய்மைப்படுத்தும் தன்மையும் உடையவன் என்பது வெள்ளிடைமலை.

''உள்ளக்கொதிப்பகல வுள்ளுள்ளே ஆனந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும்''

என்று தாயுமானவரைப்போல வேண்டுதல் ஒன்றே உள்ளத்தின் தீய தன்மைகள் நீங்குதற்கு உரிய வழியாகும்.

பக்தி இலக்கியங்களின் நிலை

மேற்கூறிய இரண்டு நிலைகளில், இரண்டாவது நிலையில் உள்ள உள்ளத்தின் தன்மைகளைப் பற்றிப் பேசும் பாங்கையே பக்தி இலக்கியங்களில் பெரும்பாலும் காண்கிறோம். ஏனென்றால் சாதாரணமாகச் சில பிரச்சினைகளுக்காத மனிதனின் உள்ளத்

தில் தோன்றும் தீய தன்மைகள் விரைவிலேயே மாறவாய்ப்புண்டு. அத்தகைய நிலைக்கு ஆளாகிய ஒரு மனிதனை வேறொரு மனிதனேகூட மாற்றிவிடமுடியும். ஆனால் வஞ்சகம், சூது, பொய்ம்மை, வன்கண்மை (இரக்கப்படாதிருத்தல்) போன்ற கொடிய தன்மைகள் உடைய உள்ளங்களை வேறொரு மனிதன் திருத்துவதென்பது இயலாத காரியம். எனவே, அப்படிப்பட்ட தீய தன்மைகள் உடைய உள்ளங்களை இறைவனால்தான் திருத்தமுடியும் என்பது அருளாளர் தம் கொள்கை. அதனால் தான் அத்தீய உள்ளத்தின் இழிவைப்பற்றியே பலவாறாகப்பாடி அப்படிப் பாடுவதன் மூலமாக அவ்வுள்ளங்களை எச்சரித்து நன்னெறிப்படுத்தும் பாங்கையும் பக்தி இலக்கியங்களில் காண்கிறோம். அப்படிப்பாடும் போக்கில், பாடிய சான்றோர்கள், தாங்கள் தூயவர்களே எனினும் மற்றவர்கள்மீதுள்ள அன்பால், அவர்கள் புரியும் தவறுகளையெல்லாம் தாங்களே புரிந்ததுபோலவும், அதனால் இறைவன் தங்களைச் சோதனைக் குள்ளாக்குவது போலவும் பாடியுள்ளனர். முற்றிலும் அது சரியாகாது எனினும், மற்றவர்களை வாழ்விப்பதற்காக அப்படியொரு கற்பனை நிலையை அவ்வடியார்கள் தோற்றுவித்துக் கொள்கின்றார்கள் என்றுதான் கூறவேண்டும்.

(எ-டு)

"என் உள்ளத்தினுள்ளிருந்த கள்ளத்தை" — அப்பர்

"பொய்யினேன் உள்ளத்திருந்து" — தாயுமானவர்

"என்னுளத்தின் வெள்ளென்ற வன்மை
விளங்காதோ?" — வள்ளலார்

"என்னுளத்து வேரகழ்ந்திருத்தலால்" — பாரதி

சங்க இலக்கியங்களின் நிலை

சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டும் இந்நிலையினின்றும் மாறுபட்டிருப்பதை உணர்கிறோம். மேலே குறிக்கப்பட்ட இரண்டு நிலைகளில் முதல்வகை உள்ளத்தின் நிலையைத்தான் இப்பாடல்களில் காண்கிறோம். உள்ளத்தில் ஏற்படும் சாதாரணத்தடுமாற்றங்கள், சலனங்களையே இங்கு சந்திக்கிறோம். ஊக்கத்தைப் பெறுவதுதான் அவைகளைப் போக்கும் வழியாகக் காட்டப்படுகிறதேயன்றி, இறைவன் அருளைப்பெறுவதன் மூலம்தான் உளம்திருந்தமுடியும்

என்று கூறப்படவில்லை. சங்ககால மக்கள் வாழ்வு செழிப்பாகவும், சிறப்பாகவும் அமைந்திருந்தமையால்மிகுதியான தீய தன்மைகள் அவர்கள் உள்ளத்தில் தோன்றுதற்கு வாய்ப்பு இல்லாதிருந்திருக்கலாம். அல்லது பிற்காலத்தில் பக்தி உலகில் ஏற்பட்ட வளர்ச்சி, இறைவனைப் பற்றிய அச்சம் இவைகளெல்லாம் மிகுதியும் இல்லாமையால் தங்கள் குறைகளையும் நிறைவு செய்ய இறைவனால்தான்முடியும் என்ற எண்ணம் தோன்றாமல் இருந்திருக்கலாம். எப்படியிருப்பினும், சங்ககால மக்களின் உள்ளம் பிற்காலத்தைக் காட்டிலும் உயர்ந்திருந்தது என்பது உண்மை.

உள்ளமும் இன்பதுன்பமும்

வாழ்க்கையில் சிலர் எந்நிலையிலும் மலர்ந்த முகத்தோடும், மகிழ்ச்சியோடும் காணப்படுவதை அறிகிறோம். அப்படிப் பட்டவர்கள் எப்போது சிரமப்படுகிறார்கள் அல்லது செல்வச் செழிப்போடு வாழ்கிறார்கள் என்பதை எவரும் எளிதில் அறிய முடியாது இது ஒருவகை மாந்தர்களின் உள்ளநிலை. வேறு சிலர் எப்போதுமே வாடிய முகத்தோடு காணப்படுவார்கள்; சிலர் துன்பம் வந்தபோது வாடியும் இன்பத்தைக் கண்டால் மலர்ந்தும் காணப்படுவார்கள். இன்னும் சிலர்,எப்போதோ வரப்போகின்ற துன்பத்தை எண்ணி இப்போதே வருந்தத் தலைப்படுவர். "துன்பம் வராததற்கு முன்பாகவே வந்துவிட்டதாகவே எண்ணி வருந்துகின்றேனே" என்று வள்ளலாரும் இறைவனிடம் முறையிடுகின்றார். இத்தகைய மாற்றங்கள் அனைத்திற்கும் ஒரே காரணமாய் அமைந்தது அவரவருக்கு அமைந்த உள்ளங்களேயாம்.

"இன்பமும் துன்பம் தானும் உள்ளத்தோடு இயைந்தது"

என்பார் கம்பர். எனவே, இருவேறுபட்ட பொருள்களும் சேர்த்து வைக்கப்பட்ட ஒரு அறைபோன்றதே உள்ளம். அதில் எப்பொருளை யார் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே அவர்கள் வாழ்க்கை முறை அமைகிறது. அசோக வனத்திலிருந்த சீதை, "துன்பமும் உவகையும் சுமந்த உள்ளத்தாளாக" இருந்தாள் என்பது கம்பர்வாக்கு. அப்போதைய அவளது நிலைதுன்பத்தையும், பின்னால் நேரப்போவதை நினைத்து உவகையும் அவள் அடைந்தனளாம். துன்பத்திலும் இன்பத்தைக் காணுகின்ற பக்குவம் கைவரப் பெற்றுவிட்டால்

இன்பமே எப்போதும் என்ற நிலை உருவாகும். அதற்குச் சிறந்த கல்வியாற்பெறும் அறிவும், இறைவன் அருளுமே துணைசெய்ய வல்லன.

உள்ளமும் ஊசலும்

ஊசல் ஓரிடத்திலேயே நிலைத்து நிற்கும் தன்மையை உடையது அல்ல; அது இயங்கிக் கொண்டிருக்கும் காலம்வரை இங்கும் அங்குமாக மாறிமாறி வந்து கொண்டேதான் இருக்கும். ஊசலின் தன்மையைப் பொறுத்தவரையில் அது சரியே. ஆனால் சிலரின் உள்ளமும்கூட அவ்வூசலைப்போலவே ஓரிடத்தில் நிற்காமல் அலைந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

"உள்ளத்தின் ஊசலாடும் குழை" என்று விளக்குகிறார் கம்பர். ஊசலேனும் ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் வரையில் தான் செல்லும்; பின்பு திரும்பி விடும். ஆனால் நம் உள்ளமோ எங்கெங்கோ சென்று திரியும் தன்மையைப் பெற்றுள்ளது.

"உள்ளமோ ஒன்றில் நில்லாது" என்பது ஆழ்வார் திருவாக்கு. அப்படி நில்லாது செல்லும் தன்மையை உள்ளம் பெற்றிருப்பதே ஆசாபாசங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி நாம் வருந்துவதற்குரிய காரணம். உலகியலில் நம் உள்ளம் சிக்கித் தவிப்பதும் அதன் இத்தன்மையால் நேர்வதே. எனவே தான், "உலகியலிற் சிறிதும் உளம் பிடியாவகை"யில் எனக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறார் வள்ளலார். அந்நிலையைப் பெற்றுவிட்டால் ஊசல் தன்மையும் மாறி விடும். உள்ளமானது ஒடுங்கி நிலைபெற வேண்டும்; அப்போது தான் அவ்வுள்ளத்தைப் பெற்றவன் உத்தமனாக முடியும் என்பதை,

"ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்"

என்று கூறுவார் திருமூலர். 'ஒடுங்குதல்' என்ற சொல், ஊசல் போல அலையும் தன்மையை விட்டு நிலைத்து ஓரிடத்தே நின்று அதிலேயே ஒன்றி விடுதல் என்பதனையே உணர்த்தும். அப்படி நிலைத்து நின்று ஒடுங்க வேண்டிய இடம் இறைவன் திருவடியே என்பது அருளாளர்கள் எண்ணம். இந்நிலையில் வேறொரு உண்மையையும் நாம் மறந்து விடுவதற்கில்லை; உள்ளத்தை அப்படி ஊசல் போல அலையச் செய்வது எது? அச்சக்தியையும்

நாம் அறிதல் அவசியம். உள்ளத்தை நெறிப்படுத்துவதற்குரிய வழியை உணர்த்துகிறார் திருநாவுக்கரசர்.

"பொறிபுலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை
நெறிப்படுத்து நினைந்தவர்..."

என்று அவர் குறிப்பிடுவதிலிருந்து உள்ளம் நெறிப்படுவதற்கு இடையூறாய் இருப்பன பொறிபுலன்களே என்பது புலப்படும். எனவே, அவைகளின் போக்கில் உள்ளம் செல்லாதபடி தடுத்து நிறுத்தப்படு மென்றால் உத்தமர்களாக அனைவருமே ஆக முடியும்.

உள்ளமும் வினையும்

அன்பர்களின் உள்ளங்களையே தான் உறையும் உன்னத ஆலயங்களாகக் கருதுபவன் இறைவன்; பொன்னாலும், கல்லாலும் நாம் அவனுக்கு வேறு செயற்கை ஆலயங்களை எழுப்பி அங்குச் சென்று அமருமாறு வேண்டினாலும் அவன் விரும்புவது உள்ளக்கோயில்களையே. பூசலார் நாயனாரின் தூய வரலாறு உணர்த்தும் உண்மை இதுவே. இதையே, "அன்பர் திருவுளம் கோயிலாகக் கொண்டே" என்ற வள்ளலார் வாக்கு உணர்த்தும். ஆனால் நம் உள்ளங்களைக் கோயில்களாக ஆக்க வொட்டாமல் தடுப்பவைகளே, பிறவிகள் தோறும் நம்மைத் தொடர்ந்து வந்து வருத்தும் "இருள்சேர் இரு வினைகள்."!

அதன் பிடியினின்றும் உள்ளத்தைக் காக்கும்போதுதான் உள்ளம் ஆலயமாகிறது. அப்படிக் காப்பதற்கு உரிய ஒரே வழி "இறைவன் பொருள்சேர் புகழ் புரிதல்" என்பது தானே வள்ளுவம் நமக்கு உணர்த்தும் உண்மை! அவ்வுண்மையை உணர்ந்து பின்பற்றியதால் தமது உள்ளத்தின் வினை தீர்க்கப் பட்டதென்றும் அதன் பின்பு அது ஆலயமாகியது என்றும் கூறுகிறார் நாவுக்கரசர்.

"வினை தீர்த்திட் டென்னுள்ளம் கோயிலாக்கி"

இறைவன் அருள் புரிந்தான் என்பது அவரது அனுபவமொழி.

இராமனைப் பிரிந்து அசோக வனத்தில் தனித்து வருந்திக் கொண்டிருந்த சீதை தன் உள்ளத்தைப் பற்றிய நினைவில் மூழ்குகிறாள். இராவணனுக்கு அஞ்சி இப்போது ஒளிந்து கொண்டிருக்கும் தேவர்கள் அனைவரும் உள்ளம் களிக்கும் நல்வினையைத்

தன்னுள்ளம் கொண்டிருக்கக் கூடாதா என்று எண்ணிப் பார்க்கிறாள்.

"ஒளிக்கும் தேவர் உவந்து உள்ளம்
களிக்கும் நல்வினை..."

என்பார் கம்பர். ஆனால் எல்லாவினைகளையும் நம் உள்ளம் வெல்ல வேண்டுமானால் அதற்குரிய வழி இறைவன் அருளை வேண்டிப்பெறுதல் என்பதே பக்தி இலக்கியங்கள் உணர்த்தும் உண்மையாகும்.

உள்ளமும் மாயையும்

பொறிபுலன்கள் நம் உள்ளத்தை அலைக்கழிக்கின்றன. எனினும், அவைகளைப் பற்றியும் அவற்றின் தன்மைகளைப் பற்றியும் ஓரளவேனும் நம்மால் உணர முடியும்; ஆனால் நம் உள்ளத்தாலும் அறிந்து கொள்ள முடியாத ஒரு சக்தி உட்பகையாக இருந்து கொண்டு அதை ஆட்டிப் படைக்கின்றது. அதனால் விளையும் கேடுகள் மிகுதி. அதுவே மாயை என்பது.

"உள்ள மறியா மாயையென்னும் உட்பகை"

என்று அதற்கு விளக்கம் தருவார் வள்ளலார். மாயையை 'உட்பகை' யென்று அவர் உரைப்பது அரிய கருத்தாகும். ஏனென்றால் மாயையினையும் அது செய்யும் செயல்களையும் எளிதில் எல்லோராலும் உணர முடியாது. புறப்பகையால் வரும் கேடுகள் குறைவு. ஆனால் உட்பகை அளவில் சிறிதாய் இருப்பினும் தீயவிளைவு பயப்பதில் பெரிதாகும். அப்படிப் பட்ட மாயையின் மயக்கத்திலிருந்து நாம் விடுபட்டு மேன்மையடைய வேண்டுமானால் நம் உள்ளங்களை இறைவன் மகிழ்ந்துறையும் ஆலயங்களாக ஆக்குதல் ஒன்றே நம் கடமையாகும். "என் உள்நிறைந்த மாயை ஒழிந்திட" அருள்புரியென்று தாயுமானவரும் இறைவனை வேண்டுகிறார்.

உள்ளங்கள் ஆலயங்களாக மாறும்போது உடம்பில் ஏற்படும் பிணியும்கூட மாறும் என்கிறார் நாவுக்கரசர்.

"ஒழிந்திடுமே யுள்குவார் உள்ளத்துள்ள
உறுபிணியும்"

என்பது அவர்தம் பாடல்வரி. மற்றவர்களெல்லாம் உள்ளமே கோயில் என்னும் போது திருமூலர் மட்டும் அதனின்று உயர்ந்து

வேறு ஓர் உண்மையைக் கூறுகிறார். உள்ளம் பெருங்கோயில்; உடம்பே ஆலயம் என்பது அவரது தத்துவ விளக்கம்.

"உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பே ஆலயம்"

என்ற திருமந்திரத்தை எண்ணும்போது உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் கூட இறைவன் உள்ளான் என்றும், அதனால்தான் உடல்நோய் அவன் கருணையின் மூலம் அகற்றப்படுவதாக நாவுக்கரசர் கருதுகிறார் என்றும் நம்ப இடமுண்டு.

உள்ளமும் உவமையும்

உவமைகளின் மூலமாக உள்ளத்தின் தன்மை, அது தொழிற்படும் நிலைகள் ஆகியன எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்போம்.

உவமைகள்

1.	உரும்பின் உள்ளம்	நற்றிணை
2.	ஆண்டகை உள்ளம்	புறநானூறு
3.	கருணைக்கடலி னுள்ளம்	திருவாசகம்
4.	குழைபோல ஊசலாடுதல்	கம்பராமாயணம்
5.	மருங்கெனத்துவளும் உள்ளம்	கம்பராமாயணம்
6.	பிரையுண்ட பாலினுள்ளம்	கம்பராமாயணம்
7.	மத்துறு தயிரி னுள்ளம்	கம்பராமாயணம்
8.	மத்து வாழ் கடலி னுள்ளம்	கம்பராமாயணம்
9.	உள்ளம் கனலில் வைத்த பாகோ மெழுகோ	தாயுமானவர்
10.	அழலார் மெழுகொத்த உள்ளம்	திருவருட்பா
11.	கணிகை போலெனைக் கலக்கிற்றுள்ளம்	திருவருட்பா
12.	விசையுறு பந்தினைப் போல் உள்ளம்	பாரதியார்

உவமைகளால் உணரப்படுவன

1. உரும்பு, ஆண்டகை போன்ற உவமைகளின் மூலமாக உள்ளத்தின் வலிமைத்தன்மை புலப்படுகிறது.

2. கருணைக்கடல் என்ற உவமையின் மூலமாக உள்ளத்தின் இரங்கும் தன்மை, கடல் போன்று ஆழம் காண முடியாத தன்மை, அலைகள் ஓயாது ஆடுதல் போன்று நினைவலைகள் ஓயாது மோதும்தன்மை போன்ற செய்திகள் தெரிய வருகின்றன.

3. கனலில் வைத்த பாகு, மெழுகு போன்ற உவமைகள் உள்ளத்தின் உருகும் தன்மையை உணர்த்துகின்றன.

4. குழை, விசையுறு பந்து, பிரையுண்ட பால், மத்துறு தயிர் போன்ற உவமைகள் உள்ளத்தின் நிலையற்ற தன்மை, அலை மோதும் தன்மை, மாறும் தன்மைகள் ஆகியனவற்றை உணர்த்தும்.

5. 'மருங்கென' என்ற உவமை உள்ளம் எவ்வாறு வினை, மாயை போன்றவற்றால் துவள்கின்றது என்பதை உணர்த்துகின்றது.

6. 'கணிகை' என்ற உவமை, பொருள் கவரும் நோக்கோடு கணிகையர்கள் நம்மிடம் போலிஅன்பு காட்டி நம்மை முடிவில் வருந்தச் செய்வது போலவே உள்ளமும் நிலையற்ற ஆசாபாசங்களைக் காட்டி, அதில் நம்மைச் செலுத்த முயன்று முடிவில் வருத்தும் என்பதை உணர்த்துகிறது.

உள்ளத்தின் நல்லியல்புகள் குறைவாகவும், தீய தன்மைகள் மிகுதியாகவுமே உவமைகளால் உணர்த்தப் பட்டுள்ளன. அதன் தொழிற்படும் நிலைகளே பல்வேறு உவமைகளின் மூலமாக உணர்த்தப்பட்டுள்ளன.

உள்ளமும் உருவகமும்

உள்ளத்தின் தன்மை, தொழிற்படும் நிலைகள் ஆகியனவற்றை விளக்குவதற்கு உருவகங்களை எவ்வாறு நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை இனிக் காண்போம்.

உருவகங்கள்

1.	உள்ளக்கிழி	திருநாவுக்கரசர்
2.	உள்ளம் பெருங் கோயில்	திருமந்திரம்
3.	என்னுளங் கோயில்	திவ்ய பிரபந்தம்
4.	உள்ளப்-போது	திவ்ய பிரபந்தம்
5.	உள்ளத் தாமரை	கம்பராமாயணம்
6.	திருவுளம் கோயில்	திருவருட்பா
7.	என்னுள்ள மணிவிளக்கே	திருவருட்பா
8.	உள்ளச் செந்தாமரை	திருவருட்பா
9.	முனிவர் உள்ளத் தாமரை	திருவருட்பா
10.	உள்ளமெனும் சிறுகுடிசை	திருவருட்பா

11. உள்ளமென் கமலம் — திருவருட்பா
12. உள்ள மென்னுங்கடல் — பாரதியார்
13. உள்ளமாம் வீணை — பாரதியார்

உருவகங்களால் உணரப்படுவன

1. உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலய மாகவே பலரும் உருவகப்படுத்தியுள்ளனர். அதில் உள்ளத்தின் தூயதன்மை, பெருமை முதலியன விளங்குகின்றன.

2. உள்ளத்தை மலராக, குறிப்பாகச் செந்தாமரையாக உருவகப் படுத்தியுள்ள பாங்கைப் பல விடங்களில் காண முடிகிறது.இதில் உள்ளத்தின் மென்மைத் தன்மை புலப்படுகிறது. அதுவே யன்றி, 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை' என்று அப்பரடிகளால் புகழ்ந்து பேசப்படும் தாமரையாக உள்ளம் உருவகிக்கப்படுவதன் மூலம், அதன் பெருமைத் தன்மை விளங்கு கிறது. கதிரவன் வரவால் தாமரை மலர்ந்து மணம் வீசுதல் போல இறைவன் அருள்பெற்றே நம் உள்ளத்தாமரையும் மலர்ந்து மணம் வீசும் என்ற உண்மையும் உணரக்கிடக்கிறது.

3. உள்ளத்தைக் கடலாக உருவகப்படுத்தியுள்ளது அதன் ஆழம், அலைகளால் ஆரவாரம் போன்ற தன்மைகள் கருதியே. உள்ளக்கடலிலும் நினைவலைகளின் நீங்கா ஆரவாரம் உண்டு என்பது பெற்றாம்.

4. உள்ளத்தை மணிவிளக்காகவும், இன்னிசை மீட்டும் வீணையாகவும் உருவகப் படுத்தியுள்ள பாங்கும் அதன் நுட்பத்தைக் குறிக்கும். இறைவன் அருள் பெற்றுச் சிறக்கும் போது அப்பேரொளியால் நம் உள்ளமும் மணிவிளக்காகி விடு கிறது. தீயதன்மைகள் இல்லா நிலையில் நம் உள்ளம் எப்படிச் சிறக்கிறது என்பதையும், அதனால் எத்துணை நலம் உண்டு என்பதையும் வீணையாக உருவகம் செய்துள்ள நுட்பம் விளக்கும்.

5. இறைவன் அருள் பெற்ற போது உள்ளம் ஆலயமாகி விடுகிறது என்பதைக் கண்டோம். அவ்வருள் பெறாத நிலையில் அது எவ்வாறு உள்ளது என்பதைச் 'சிறு குடிசை' என்ற உருவகம் விளக்குகிறது. எனவே சிறுகுடிசையை ஆலயமாக்க வேண்டும் என்ற அறிவுரையும் இங்குக் காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலும் உள்ளத்தின் நல்ல தன்மைகளே உருவகங்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளன. அதற்கு ஒரே காரணம், உள்ளத்தை இறைவனோடு தொடர்புபடுத்தி ஆலயமாக, செந்தாமரையாகப் பேசிய சிறப்பே யாகும்.

உள்ளத்தின் தன்மைகளை விளக்குவதற்கு உவமை, உருவகங்களைப் பயன்படுத்திப் பேசும் பாங்கைப் பிற்கால இலக்கியங்களில்தான் பெரிதும் காண்கிறோம். சங்க இலக்கியங்களில் சிறு வழக்கிற்றாகவே காணப்படுகின்றன.

விளித்தொடராக உள்ளம்

நெஞ்சைப் போலவே உள்ளத்தையும் முன்னிலைப்படுத்திப் பேசும் பாங்கு பற்றி இனிக் காண்போம்.

"உள்ளமே, யோருதி உரைப்பன்நான்" — திருநாவுக்கரசர் தேவாரம்

"உள்ளமே, வலியை போலும்" — திவ்ய பிரபந்தம்

"உள்ளமே, நீங்காய என்னை" — தாயுமானவர்பாடல்

ஆய்விற்கெடுத்துக் கொள்ளப்பட்ட பத்து நூல்களில் மேற்கண்ட மூன்று நூல்களில் மட்டுமே உள்ளத்தை முன்னிலைப் படுத்திப் பேசிய பாங்கைக் காண்கிறோம்.அம்மூன்று நூல்களிலும் கூட ஓரிரு இடங்களில்தான் காணப்படுகின்றன.

நெஞ்சைப்பல இடங்களில் முன்னிலைப் படுத்திப் பேசிய புலவர்கள் உள்ளத்தை அப்படிக் கையாளாமைக்குக் காரணம் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் எண்ணும்போது சில உண்மைகள் புலப்படும்.

1. நெஞ்சம் உணர்ச்சிமயமானது; நெகிழக் கூடியது; எனவே அதனிடம் பேசவாய்ப்புண்டு. ஆனால் உள்ளம் உணர்ச்சிகள் ஒடுங்கிக்கிடப்பது; உறுதியானது; எனவே இதை முன்னிலைப் படுத்திப் பேசுதல் இயலாது.

2. நெஞ்சம் விரைந்து செல்லக் கூடியது; பறவை போல் பறந்தும், குரங்குபோல் தாவியும் செல்லும் தன்மைகளெல்லாம் நெஞ்சத்திற்கே உண்டு. ஆனால் உள்ளம் கடல்போல் ஆழமுடையது; தாமரைபோல் விரிந்து மணம் வீசக்கூடியது. எனவே தான் கடல், தாமரை போன்றவற்றை உள்ளத்துடன்

மட்டுமே இணைத்து உவமை, உருவகங்களை அமைத்துள்ளார்கள்.

3. உள்ளத்தைப் பெரும்பாலும் கோயிலாகவே பலரும் கண்டுள்ளனர்; இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் அது. எனவே இறைவனிடம் பேச வேண்டுமே தவிர, அவன் இருக்கும் இடத்திடம் ஏன் பேச வேண்டும் என்ற எண்ணத்துடனும் அப்படிச் செய்திருக்கலாம். வீட்டிற்கு உரியவனிடம் பேசுவோமே தவிர, வீட்டினிடமே பேசமாட்டோம் அல்லவா! இதுபோலவே அப்புலவர்களும் கருதியிருக்க இடமுண்டு.

இவ்வுண்மை கருதியே, தூது இலக்கியங்களிலும் கூட 'நெஞ்சுவிடு தூது' உண்டே தவிர உள்ளத்தையோ மனத்தின் பிற நிலைகளையோ தூது விடும் பழக்கம் இல்லை என்பதும் சிந்தித்தற்குரியது.

உளம் = விருப்பம்

உளம் என்ற சொல்லின் அமைப்பு, தன்மை, தொழிற்படும் நிலைகள் ஆகியனவற்றை ஏற்கெனவே கண்டுள்ளோம். அவைகளேயன்றி அச்சொல்லிற்கு விருப்பம் என்ற ஒரு பொருளும் பயக்குமாறு புலவர்கள் கையாண்டுள்ளனர். கம்பராமாயணத்திலிருந்தே அவ்வழக்கு உண்டு என்பதும் புலனாகிறது.

(எ-டு)

1. "என்கொல் திரு உளம்"
2. "திருவுளம் எனின்" — கம்பராமாயணம்

"பெருமான் தனது திருவுளமெதுவோ" — திருவருட்பா

1. "கருகத் திருவுளமோ"
2. "மடியத் திருவுளமோ" — பாரதியார் கவிதைகள்

மேற்காட்டிய சான்றுகளும் கூட இறைவனது விருப்பம் பற்றிப் பேசும் நிலையில்தான் எடுத்தாளப்பட்டுள்ளன. கம்பராமாயணத்தில் இராமனிடம் குகன் பேசும் நிலையும் கூட, ஆண்டவனிடம் ஒரு அடியார் பேசும் தன்மையில் அமைந்ததே என்பதை யாவரும் ஏற்பர். காலப்போக்கில் சொற்கள் அடையும் பொருள்மாற்றத்தில் ஒன்றாக இதனையும் நினைக்க இடமுண்டு.

நிறைவுரை

உள்ளம் என்ற சொல்லின் அமைப்பு, அதன் பல்வேறு வடிவங்கள், அவைகளின் தன்மைகள், தொழிற்படும் நிலைகள் ஆகியனபற்றி இதுகாறும் கூறப்பட்டது. உள்ளத்தை நெஞ்சத்துடன் ஒப்பிட்டு இரு நிலைகளுக்கு மிடையே உள்ள வேறுபாடுகளும் காட்டப்பட்டன. 'உளம்' என்ற சொல் காலப்போக்கில் அடைந்த பொருள் மாற்றமும் எடுத்துக் காட்டப்பட்டது.

சிந்தை

சொல்லமைப்பு

மனத்தின் தெளிந்த நிலையை உணர்த்தும் சொல் இது. சங்க காலத்தில் அருவழக்காய் இருந்து பிற்காலத்தில் பெரு வழக்காய்க் காணப்படுகிறது. பெரும்பாலும் சமயத் தொடர் புடைய இலக்கியங்களிலேயே கையாளப்படுகிறது. மனத்திற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைச் சித்திரிக்கும் நிலையில் இச்சொல்லைத் தேர்ந்தெடுத்துப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

இச்சொல்லின் அறிமுகமும், பின்பு அது அதிகமாகக் கையாளப்படும் விதமும் தமிழரிடையே பக்தி உணர்வு பரவிவரும் நிலையை அறிந்து கொள்வதற்கு ஏற்ற சான்றாகும்.

'சிந்தித்தல்' என்ற தொழிற் பெயரின் அடியாக இச்சொல் தோன்றியிருக்க வேண்டும். சிந்திக்கும் தொழிலைச் செய்வதால் சிந்தை எனப்பட்டது. பொதுவாகச் சிந்தித்தல் என்பது 'ஆழமாக நினைத்தல்' என்ற நிலையில் இன்று வழக்கிலிருப்பினும் இச்சொல்லே முன்பு 'இறைவனைப் பற்றி நினைத்தல்' என்ற நிலையிலேயே வழங்கப்பட்டுள்ளது. எனவே தான் சிந்தை என்ற சொல்லைப் பக்தி இலக்கியங்களிலேயே பரக்கக் காணமுடிகிறது.

"சிந்திப்பார் சிந்தையுள்ளார்"

என்பது திருநாவுக்கரசரின் வாக்கு.

'சிந்தித்தல்' என்ற சொல்லின் அடியாகவே இச்சொல் பிறந்திருக்க வேண்டும் என்ற உண்மையைப் பல இலக்கியங்களும் உறுதிப் படுத்துகின்றன.

"சிந்தையுள் சிந்திக்கின்ற..." திருநாவுக்கரசர்

"சிந்திக்கும் சிந்தையும்" தாயுமானவர்

இது போன்று பல சான்றுகள் காணக்கிடக்கின்றன. 'ஆழமாக நினைத்தல்' என்ற நிலையேயன்றி 'சாதாரணமாக நினைத்தல்' என்ற தன்மையிலும் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளமையும் அறியக்கிடக்கிறது.

(எ-டு)

"நினைப்பதாகச் சிந்தை செல்லும்" திருவாசகம்

"சிந்தையால் நினைவார்களை" திருநாவுக்கரசர்

"சிந்தையால் நினையவும் அரியது" கம்பர்

சிந்தையின் செயல் சிந்தித்தல், நினைதல் என்பதைக் கண்டோம். சிந்தை என்ற அச்சொல்லே மேற்கண்ட தன்மைகளை விளக்கும் நிலையில் பயன்படுத்தப் பட்டுள்ளமையும் அறியமுடிகிறது.

"பெருவெளியைச் சிந்தை செய்வோம்" தாயுமானவர்

இங்கு ஆழமாக நினைத்தல், அதாவது இறைவனைப்பற்றி நினைத்தல் என்ற பொருளில் சிந்தை பயன் படுத்தப்பட்டுள்ளது.

"யாரெனச் சிந்தை செய்தான்" பாரதி

இங்கு நினைதல் என்ற நிலையிலேயே அச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளமை புலனாகும்.

இவைகளே யன்றி விரும்புதல் என்ற நிலையிலும் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதனையும் அறிகிறோம்.

"அவனிதழில் தேன்பருகச் சிந்தை கொண்டாய்" பாரதி

இங்கு அவனது இதழில் தேன் பருக விரும்பினாய் என்ற பொருளையே அச்சொல் தந்து நிற்கிறது.

சிந்தித்தல், நினைதல் யாவையுமே மனத்தெளிவின்போது நிகழக் கூடியனவே. மனக்குழப்ப முடையாரால் எதையுமே சிந்திக்கவும் முடியாது; எதைப் பற்றியும் நினைக்கவும் முடியாது. எனவே தான் சிந்தை என்ற சொல் மனத்தெளிவைக் காட்டும் சொல் என்று கருதப்படுகிறது.

"சிந்தை தெளிந்தார் சிவமாயினார்களே"

என்று கூறுகிறது திருமந்திரம். எனவே சிந்தையென்பது தெளிந்த நிலையை உணர்த்தும் ஒருசொல் என்பது விளங்கும்.

சிந்தையிலிருந்து தோன்றும் உண்மைகள், முடிபுகள் தன்மையே 'சிந்தனை' என்று வழங்குகிறோம். தெளிந்த மதிநுட்பமும் மனநிலையும் உடையவர்களுக்கே சிந்தனை செய்யும் ஆற்றலும் அமையப் பெறும் என்பதும் உலகறிந்த உண்மை.

"சிந்தனை முடிந்தன வென்னுஞ் சிந்தையார்"

என்று கம்பர் கூறுவது சிந்தனைக்கும் சிந்தைக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்தும்.

இனி, இலக்கியங்களில் இச்சொல் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

இலக்கியம்	கையாளப் பெற்ற இடங்கள்
1. நற்றிணை	—
2. புறநானூறு	1
3. திருநாவுக்கரசர் தேவாரம்	118
4. திருவாசகம்	24
5. திருமந்திரம்	73
6. நாலாயிரத்திவ்ய பிரபந்தம்	74
7. கம்பராமாயணம்	272
8. தாயுமானவர்	72
9. திருவருட்பா	67
10. பாரதியார் கவிதைகள்	40

சங்க இலக்கியமான நற்றிணையில் சிந்தை என்ற சொல்லே காணப்படவில்லை; புறநானூற்றில் ஒரே இடத்தில் மட்டும் கையாளப்பட்டுள்ளது. இதிலிருந்து சங்க காலத்தில் இச்சொல் வழக்கில் பெரும்பாலும் இல்லை என்பதோடு, பிற்காலத்தில் ஏற்பட்ட சமயத் தொடர்பான சிந்தனைகள் அப்போது ஏற்படவில்லை என்பதும் புலனாகிறது.

திருநாவுக்கரசர், தம் தேவாரத்தில் அதிகமான இடங்களில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 'உள்ளம்' என்ற சொல்லைக் காட்டிலும் சிந்தை என்ற சொல்லே இவர் பாடல்களில் மிகுதி.

தம்முடைய சிந்தையுள்ளே இறைவனை வைத்திருப்பதாகவும், அதனால் அதைவிட்டு அவன் வெளியில் வரமுடியாது என்றும் உறுதியோடு உரைக்கின்றார் அவர்.

''செல்வனைச் சிந்தையுள்ளே வைத்தேனே''
''என் சிந்தையுள் பிரியுமா றெங்ஙனே!''

என்பது அவர்தம் வாக்கு. அச்சிந்தை தெளிவோடு இருத்தல் அவசியம் என்பதிலும் கருத்துடன் நினைந்து வாழ்ந்தார். அதனால் அவர் சிந்தையைப் பற்றி அதிகம் சிந்தித்துள்ளார்.

''சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்''

என்று தம் சிந்தையில் இறைவன் கோயில் கொண்ட நுட்பம் உணர்ந்து பாடினாலும் தம் பாடல்களில் இச்சொல்லைக் குறைந்த அளவிலேயே மணிவாசகர் பயன்படுத்தியுள்ளார். அவரது பாடல்களில் மனநெகிழ்ச்சியையே அதிகம் காண்கிறோம். எனவே தான், ''திருவாசகத்திற் குருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற பழமொழி பிறந்தது.

இறைவன் தம் ''சிந்தைதனைத் தெளிவித்து'' ஆட்கொண்ட முறை பற்றிப் பேசினாலும் இறைவனைப் பற்றியே உருகிப் பாடியதால் தம் சிந்தையில் அதிகக் கவனம் செலுத்த வில்லை போலும். நினைவு தூய்மையாக இருக்கும்போது சிந்தையும் அப்படித்தானே இருக்க வேண்டும்.

திருமந்திரத்தில் 'உள்ளத்'தைப் போலவே 'சிந்தை'யையும் மிகுதியாகக் கையாண்டுள்ளார் நூலாசிரியர். இது ஓர் தத்துவ நூலாகையால் சிந்தையைப் பற்றிய பல நுட்பங்கள் இங்குப் பேசப்படுகின்றன.

''சிவனே என்று சிந்தை செய்வண்ணம்'' தமக்கு அருள் புரியுமாறு இறைவனை வேண்டும் இவர், சிந்தையையே சிவனாகக் காண்கிறார்.

''சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை''

என்று இவர் கூறும் தத்துவம் நுட்பம் வாய்ந்தது. சிந்தை, இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயம் மட்டுமல்ல; அதுவே இறைவன் தான் என்று இவர் குறிப்பிடுவது, மனம் தெளிவாக ஒருவருக்கு அமையுமென்றால் அவரும் கூட இறைவனின் அவதாரம் தான் என்ற உண்மையை உணர்த்தும். மனிதர்களை 'நடமாடும் கோயில்'கள் என்று இவர் வேறு இடத்தில் குறிப்பிட்டிருப்பதும் நினைத்தற்குரியது.

''அன்பாற் சிந்தை நைந்துருகும் வண்ணம்''

அருள் புரியுமாறு இறைவனை வேண்டும் தாயுமானவர் 'சிந்தை' யை அதிக இடங்களில் பயன்படுத்தி இருப்பதோடு, அதன் தன்மைகள், தொழிற்படும் நிலைகள், சொல்லமைப்பு ஆகியன பற்றிய விளக்கங்களையும் விரிவாகத் தந்துள்ளார். எனவேதான் 'உள்ளத்தைக் காட்டிலும் சிந்தையை இவர் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

எது தியானம்? இக்கேள்விக்கு இவர் தரும் பதில் நுட்பம் வாய்ந்தது. தத்துவச் சிறப்புடையது.

''மெய்யடியார் சிந்தை இறப்போ நின் தியானம்''

என்பது அப்பதில். சிந்தை ஒடுங்கிச் செயலொடுங்கி இறைவனோடு ஒன்றிவிடுதலே தியானம் என்று அரிய விளக்கம் தருகிறார்.

''சந்ததமும் நின்கருணை சாற்றுவதல்லால் வேறு
சிந்தை அறியேன்''

என்ற இவர் சிந்தையைப் பற்றி அதிகம் சிந்தித்தது சரிதானே!

''தொழுமவர்ச் சிந்தை பிரியாத நாராயணா''

என்று நாரணனைப் பற்றிப் பாடினாலும் ஆழ்வார்கள் தம் அருள்வாக்கில் 'சிந்தை' என்ற சொல் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. திருவாசகத்தைப் போலவே நாலாயிரத் திவ்ய பிரபந்தமும் இறைவன் அருள் வேண்டி நைந்து உருகிப் பாடப்பட்டதால் அங்கு மன நெகிழ்ச்சியையே மிகுதியாகக் காண முடிகிறது. இறைவனை நாயகனாகப் பாவனை செய்து பேரின்பம் கருதிய காதல் வெளிப்பாடாகவே பெரும்பாலும் அப்பாடல்கள் அமைவதால் சிந்தையைப் பற்றிய சிந்தனை குறைவாகி விட்டிருக்கலாம்.

ஆய்விற் கெடுத்துக் கொண்ட நூல்களிலேயே அதிக இடங்களில் சிந்தை என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருப்பது கம்பராமாயணமே. அதுவேயன்றி, நெஞ்சம், உள்ளம் என்ற சொற்களைக் காட்டிலும் இச்சொல்லையே இந்நூலாசிரியர் அதிக இடங்களில் பயன்படுத்தி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கமபர், சிந்தை என்ற சொல்லை 'இறைவனைப் பற்றிய சிந்தனைகள்' என்ற அளவோடு நிறுத்தி விடவில்லை. பல்வேறு வகையான மனிதர், தேவர், அரக்கர், குரக்கினம் போன்ற

அனைத்து உயிர்களுடனும் இணைத்துப் பேசியுள்ளார். அதுவேயன்றி, சிந்தையின் பல்வேறு தன்மைகள், தொழில்கள் ஆகியன பற்றியும் விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

"தீது தீர்ப்ப தென் சிந்தைக் கருத்தாரோ"

என்றும்

"சிந்தை நல்லறத்தின் வழிச்சேறலால்"

என்றும் இதுபோன்று பல இடங்களில் சிந்தையின் சிறப்பியல்புகளை விளக்கியுள்ளார்.

பாடல்களின் எண்ணிக்கையளவில் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவாக இச்சொல்லைப் பயன்படுத்தி யிருப்பது திருவருட்பாவில்தான். 'நெஞ்சம்', 'உள்ளம்' போன்ற சொற்களை 400 இடங்களுக்கு மேல் பயன்படுத்திய வள்ளலார் இச்சொல்லை 67 இடங்களில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார். திருவாசகம் போன்ற அமைப்பிலேயே அமைந்தது திருவருட்பா. எனவே அன்புப் பெருக்கான அந்நூலில் மனநெகிழ்ச்சி தான் மிகுதியும் உண்டு.

"என் சிந்தையே கோயில் கொண்ட தீர்த்தனே"

என்று தம் சிந்தையில் இறைவன் கோயில் கொண்டுள்ள தன்மையை உணர்ந்து பாடியுள்ளார் வள்ளலார்.

"தின்னவரும் புலியையும்—அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்"

என்று உரைக்கும் பாரதியாரும் கூடத் தம் பாடல்களில் இச்சொல்லைக் குறைவாகவே பயன்படுத்தியுள்ளார். நாட்டுநிலை பற்றி நெஞ்சு பொறுக்காமல் பாடியதாலும், தீமையை எதிர்க்கும் உள்ளஉறுதி பெற்றிருந்ததாலும் அச்சொற்களை அதிகம் பயன்படுத்தியுள்ளார். இவர் பாடிய பக்திப்பாடல்களும் குறைவே! எனவே சிந்தையை அதிகம் பயன்படுத்த இவருக்கு வாய்ப்பில்லை.

இனிச் சொற்களின் அடைமொழிகளைக் கொண்டு சிந்தையின் தன்மை, தொழிற்படும் நிலைகள் ஆகியன எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்று காண்போம்.

திருநாவுக்கரசர் தேவாரம்

1. உண்மெலி சிந்தை
2. மால்கொள் சிந்தை
3. கரப்புறு சிந்தை
4. தளக்கும் சிந்தை
5. திருகு சிந்தை
6. துளங்காத சிந்தை
7. மருளியலும் சிந்தை
8. தெருளாத சிந்தை
9. மருவு சிந்தை
10. செறிகொண்ட சிந்தை

திருவாசகம்

1. நினைக்கும் சிந்தை
2. சிந்தியாத சிந்தை
3. பரந்தெழு சிந்தை
4. தேன் புரையும் சிந்தை
5. சீருறு சிந்தை
6. முருடொக்கும் சிந்தை
7. சேற்றிலழுந்தாச் சிந்தை
8. சீலமேதும் அறியாச் சிந்தை
9. மூங்கிற் சிந்தை
10. நம்புமென் சிந்தை

திருமந்திரம்

1. அன்பிலாச் சிந்தை
2. திரையற்ற சிந்தை
3. மருள்கொண்ட சிந்தை
4. அன்புறு சிந்தை
5. நண்புறு சிந்தை
6. தெளிவுறு ஞானச் சிந்தை
7. சிதைக்கின்ற சிந்தை
8. திண்ணிய சிந்தை
9. திருவொத்த சிந்தை
10. களிக்கும் சிந்தை
11. பொறிந்திடும் சிந்தை
12. தேறாத சிந்தை
13. தூய்தான சிந்தை
14. அருளார்ந்த சிந்தை
15. செறிப்புறு சிந்தை
16. தண்டறு சிந்தை
17. படர்கின்ற சிந்தை
18. குறிக்கொண்ட சிந்தை
19. திகைக்கின்ற சிந்தை
20. சிதறி எழுந்திடும் சிந்தை
21. திறப்பட்ட சிந்தை
22. இருளற்ற சிந்தை
23. தேட்டருஞ் சிந்தை
24. மின்னுற்ற சிந்தை
25. திரையற்ற நீர்போல் சிந்தை
26. தவம் வரும் சிந்தை

நாலாயிரத் திவ்யபிரபந்தம்

1. ஆசைவாய்ச் சென்றசிந்தை
2. மால்கொள் சிந்தை
3. பரந்த சிந்தை
4. துளக்கமில் சிந்தை
5. இன்புருகு சிந்தை
6. மகிழ்ந்த சிந்தை
7. துணிந்த சிந்தை
8. அருள் புரிந்த சிந்தை
9. இருளாத சிந்தை
10. கோட்பட்ட சிந்தை
11. தெளிவுற்ற சிந்தை

கம்பராமாயணம்

1. மகிழும் சிந்தை
2. இனிய சிந்தை
3. அவ்வியம் அவித்தசிந்தை
4. அழுங்கலில் சிந்தை
5. சலித்த சிந்தை
6. எரிந்த சிந்தை
7. மால்உள சிந்தை
8. பதைக்கும் சிந்தை
9. கோதுஇல் சிந்தை
10. மடம்படு சிந்தை
11. பரிவறு சிந்தை
12. நொந்த சிந்தை
13. களிக்கின்ற சிந்தை
14. செருக்கில் சிந்தை
15. அயிர்க்கும் சிந்தை
16. கைத்த சிந்தை
17. ஊற்றம் இலாச் சிந்தை
18. அவாமுதலறுத்த சிந்தை
19. அறங்கருது சிந்தை
20. மையல் சிந்தை
21. தெளிந்த சிந்தை
22. அன்பழி சிந்தை
23. நாணும் சிந்தை
24. பிணக்கும் சிந்தை
25. அன்புறு சிந்தை
26. மறந்தரு சிந்தை
27. தெருளுறு சிந்தை
28. கறுத்த சிந்தை
29. மம்மரச் சிந்தை
30. பொய்த்த சிந்தை
31. செயிர்த்த சிந்தை

தாயுமானவர் பாடல்கள்

1. தெளியாது சுழலும் சிந்தை
2. சிந்திக்கும் சிந்தை
3. பாழ்த்த சிந்தை
4. நைந்துருகு சிந்தை
5. நேசிக்கும் சிந்தை
6. கல்லாத சிந்தை
7. கற்புறு சிந்தை
8. பாதகச் சிந்தை
9. மால் வைத்த சிந்தை
10. வெந்து வெடிக்கின்ற சிந்தை
11. உருகுஞ் சிந்தை

திருவருட்பா

1. தகைசான்ற சிந்தை
2. தெருளுடைய சிந்தை
3. வெருவுஞ் சிந்தை
4. காமச் சிந்தை
5. திண்ணம் பழுத்த சிந்தை

பாரதியார் கவிதைகள்

1. அறமிக்க சிந்தை
2. நொய்ம்மையற்ற சிந்தை
3. துய்ய சிந்தை

மேலே கண்ட அடைமொழிகளை மையமாகக் கொண்டு சிந்தையின் தன்மைகளை நோக்கினால், அவைகளை இரண்டு நிலைகளுக்குள் அடக்கலாம்.

1. **நல்ல தன்மைகள் :** அதாவது, இயல்பாகச் சிந்தையில் இருக்கவேண்டிய தன்மைகள்.

2. **தீய தன்மைகள் :** அதாவது, இயல்பிற்கு மாறுபட்ட தன்மைகள்.

நல்ல தன்மைகள்

இறைவன் பெருங்கருணையைப் பெற்று மானுடராகப் பிறந்த பயன்பெற வேண்டுமென்றால், நம் சிந்தையில் நல்ல தன்மைகள் இருக்க வேண்டும்; இல்லையேல் வாழ்வு பயனற்றுப் போய்விடும். இவ்வுண்மையை உணர்த்துகிறது திருமந்திரம்.

''அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி''

''நண்புறு சிந்தையை நாடுமின் நீரே''

என்ற வரிகளிலிருந்து இறைவன் அன்புடைய சிந்தையில் மட்டுமே தோன்றுவான் என்பதனையும், அதனால் அத்தகைய நல்ல சிந்தையைப் பெற நாம் முயல வேண்டும் என்பதனையும் உணர்கிறோம். அந்த நல்ல சிந்தைக்குரிய தன்மைகள் மேற்கண்ட அடைசொற்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன:

1. நினைத்தல்
2. தேன்புரைதல்
3. சேற்றிலழுந்தாமை
4. அன்புறுதல்
5. நண்புறுதல்
6. தெளிவுறுஞானம்உடைமை
7. தூய்மை
8. அருளுடைமை
9. இருளில்லாமை
10. திரையற்ற நீர்போன்ற தன்மை
11. சிந்தித்தல்
12. நைந்துருகுதல்
13. நேசித்தல்
14. கற்புறுதல்
15. மகிழ்தல்
16. துணிதல்
17. அவ்வியம் அவித்தல்
18. கோது இல்லாமை
19. அவாமுதலறுத்தல்
20. அறங்கருதுதல்
21. தெளிதல்
22. மறந்தருதல்

மேற்கண்ட நல்ல தன்மைகளையும் கூட இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். நினைத்தல், அன்புறுதல், நண்புறுதல், சிந்தித்தல், நேசித்தல், மகிழ்தல், துணிதல், தெளிதல் இவைகளை முதற் பிரிவில் அடக்கலாம். இந்தத் தன்மைகளும் நல்ல தன்மைகளே யெனினும் நடுத்தர மனிதராக வாழ்வதற்குத் துணை புரியும் தன்மைகளே இவைகள். உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதும், பிறரை நேசிப்பதும், நல்லன நடக்கும் போது மகிழ்வதும், தீயன வற்றை எதிர்க்கத் துணிவதும், நன்மை தீமைகளைத் தெளிந்தறி வதும் சிந்தையைப் பெற்ற ஒரு மனிதன் பெற்றிருக்க வேண்டிய இயல்பான நல்ல தன்மைகளே! தீய நினைவுகளிலும், தீய செய லிலுமே வாழ்வை நடத்தும் மனிதர்கள் நிறைந்துள்ள இன்றைய உலகில் இந்தத் தன்மைகளையும் கூடக் காண்பது அரிதாகி வரு வதைக் காண்கிறோம்.

"வந்ததையும் போனவையும் வைத்து வைத்துப்
பார்த்திருந்தால் சிந்தை இதமகிதம் சேரும்"

என்கிறார் தாயுமானவர்.

"இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறம்"

என்று அவர் உணர்த்தும் நுட்பத்தை உணர்ந்து நடந்தால் எல்லோரது சிந்தையுமே நல்ல தன்மைகளைப் பெற்றுச் சிறக் குமே!

"மகிழ்வுகொள் சிந்தை, சொல், செய்கை கொண்டென்றும்
மகிழ்வுற்று"

என்கிறது நாலாயிரத் திவ்ய பிரபந்தம். நம்முடைய சொல்லும், செயலும் மகிழ்ச்சியைத் தரத்தக்கதாக அமைய வேண்டு மானால் நம்முடைய சிந்தையும் 'மகிழ்வுகொள் சிந்தை'யாக அமைய வேண்டும்.

நற்சிந்தையில் துணிவும், தெளிவும் இயல்பாகவே அமைந்தி ருக்கும். அது தமிழர் மனத்தின் தனித்தன்மைகளில் ஒன்று. புறநானூற்றில் ஒரே இடத்தில் மட்டுமே சிந்தை என்ற சொல் வருவதைக் கண்டோம். அதுவும் கூட ஒரு வீரத்தாயின் மன நிலையைக் காட்டும் பாடலே. ஏற்கெனவே நடந்த போர்களில்

தனது தந்தை, கணவன் அனைவரையும் இழந்த பெண்ணொருத்தி, பால்குடிக்கும் தன் மகனின் கையில் வேல் கொடுத்துப் போருக்கனுப்புகிறாள். அந்தமன நிலையை விளக்கும் இடத்தில்,

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே"

என்று புலவர் பாடுகிறார். எனவே துணிவு என்பது மகளிர்க்கும் அமையும் நல்ல தன்மையாம்.

"சிந்தை தெளிந்தார் சிவமாயி னார்களே"

என்கிறார் திருமூலர். எனவே சிந்தைத் தெளிவு அமையப் பெறின் சிவனின் பெருங்கருணை வெள்ளத்தில் நீந்தித் திளைக்கலாம் என்பது பெற்றாம்.

உயர்ந்த நிலைக்கு, அதாவது ஞானநிலைக்குத் தகுதியாக்கும் நல்ல தன்மைகளும் அடைசொற்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றை இரண்டாவது பிரிவில் அடக்கலாம். தீயகுணங்களாகிய சேற்றில் அழுந்தாமை, தெளிவுறு ஞானம் உடைமை அருளுடைமை, திரையற்ற நீர்போன்ற தன்மை, நைந்துருகுதல், அவ்வியம் அவித்தல், அவா முதலறுத்தல், அறங்கருதுதல் போன்ற நல்ல தன்மைகளை இப்பகுதியில் அடக்கலாம்.

இப்பகுதியில் குறிப்பிட்ட தன்மைகள் அனைத்தும் பண்பட்ட நிலையில் வைத்து எண்ணப்பட வேண்டியவை.

புலன்களின் போக்கிலே மனத்தைச் செலுத்திப் பாவங்களாகிய சேற்றில் நாமே நம்மை ஆழ்த்திக்கொள்கிறோம். இது பொதுவான மனிதர்களின் நிலை. ஆனால் தெளிந்த ஞானமுடையவர்கள் அச்சேற்றில் கால் வைப்பதில்லை; வினையின் ஊக்குவிப்பால் கால் வைத்தாலும்கூட அதில் அவர்கள் அழுந்தி விடுவதில்லை என்பதையே 'சேற்றில் அழுந்தாமை' என்ற சொற்கள் உணர்த்துகின்றன.

"புலனைந்தும் தானே பொரமயங்கிச் சிந்தை
அலமந் துழலும் அடிமை"

என்பார் தாயுமானவர். ஐம்புலன்களும் தங்களுக்குள்ளேயே போரிட்டுக்கொள்ளும் நிலை உருவாகும்போது என்செய்வது என்று புரியாமல் இடையில் சிக்கிக்கொண்டு சிந்தை உழலும் என்பதையே 'அலமந் துழலும்' என்ற சொற்கள் எடுத்துக்

காட்டுகின்றன. ஆனால் திரையற்ற நீர்போன்று அமைதியும் தெளிவுமுடைய சிந்தையில் புலன்கள் போரிடமுடியாது என்பது புலப்படும்.

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என்றார் திருவள்ளுவர். பொறாமை, பேராசை, சினம், தீய சொற்கள் ஆகியனவற்றைக் களைந்து வாழ்வதுவே அறமாகும். அப்படி அறவாழ்வு வாழ்வோர் உத்தமர்களாகத்தானே இருக்க முடியும்! 'அவ்வியம் அவித்தல்', 'அவாமுதலறுத்தல்' போன்ற சொற்கள் அத்தன்மைகளை நன்கு விளக்கும். 'அவித்தல்' 'முதலறுத்தல்' போன்ற சொற்கள் நுட்பம் வாய்ந்தவை. "நோய் நாடி, நோய் முதல் நாடி" என்று குறள் கூறுவதுபோல அவாவை அறுப்பதுமட்டுமன்றி, அவா முதலையே அறுத்தல்வேணடும் என்ற உண்மை இங்கு உணரக்கிடக்கிறது. தூயசிந்தையின் தன்மையும் தொழிலும் இதன் மூலம் அறியப்படுகிறது:

சிறப்புக்களையும், சீர்சான்ற கேள்வி நுட்பத்தையும், மெய்ந் நிலையறியும் ஞானவொழுக்கத்தினையும் நம் சிந்தை உணர வேண்டும்; அப்படி உணரும் நிலையை நாம் அடையும்போது தான் இறைவன் அருள்கிட்டும் என்பதை,

"விழுப்பமும் கேள்வியும், மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது"

என்று கூறும் திருமந்திரம்.

மேற்கண்ட நல்ல தன்மைகளை நம் சிந்தை பெறுமென்றால் அத்தகைய 'உணர்கின்ற' நிலையும் தானே வந்தெய்தும்!

தீய தன்மைகள்

நல்ல தன்மைகளையும், அத்தன்மைகளைப் பெற்ற சிந்தை எவ்வாறு சிறப்படைகிறது என்பதையும் கண்டோம். அதே சிந்தை தீய தன்மைகளால் அடையும் கேட்டினையும், அத்தீய தன்மைகளையும் மேற்குறிப்பிட்ட நூல்களில் காட்டப்பட்ட அடைமொழிகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வோம். தீய தன்மைகளைக் குறிக்கும் அடைமொழிகளாவன:

1. உள்மெலிதல்	13. பாதகத் தன்மை
2. மால்கொள்ளுதல்	14. ஆசைவாய்ச் செல்லுதல்
3. கரப்புறுதல்	15. கோட்படுதல்
4. மருளடைதல்	16. சலித்தல்
5. திருகுதல்	17. மடம்படுதல்
6. முருடொக்கும் தன்மை	18. பரிவற்ற தன்மை
7. சீலமேதும் அறியாத்தன்மை	19. அயிர்த்தல்
8. மூங்கில்போன்ற நிலை	20. பொய்த்தல்
9. அன்பிலா நிலை	21. காமவயப்படுதல்
10. தேறாத நிலை	22. வெருவுதல்
11. தெளியாது சுழலுதல்	23. களித்தல்
12. கல்லாத தன்மை	24. கைத்தல்

மேற்கண்ட தீய தன்மைகளையும்கூட இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். உண்மெலிதல், மருளடைதல், சீலமேதும் அறியாத் தன்மை, தேறாதநிலை, தெளியாத நிலை, கல்லாமை, சலித்தல், அயிர்த்தல், களித்தல் போன்ற தீய தன்மைகளால் சிந்தை பாதிக்கப்படினும்அதனால் விளையும் தீங்குகளின் அளவு குறைவு. காரணம், உண்மை எதுவென்று தெரியாத நிலையில் தோன்றும் குற்றங்கள் அவை. உண்மை உணர்ந்தால் திருந்துவதற்கு இங்கு வாய்ப்புண்டு. மேலும் இத்தீய தன்மைகளால் அச்சிந்தையை உடையவனே பெரும்பாலும் பாதிக்கப்படுகிறான்; பிறருக்கு நேரும் தீங்குகள் குறைவு.

(எ-டு)

"சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை" திருவருட்பா
"சிந்தை திறை கொடுத்தேன்" பாரதி
"சீலமேதும் அறிந்திலாத என்சிந்தை" திருவாசகம்

என்றெல்லாம் தம்மை உளப்படுத்திப் பேசும் தன்மைகள் இப் பகுதியில் அடங்கும்.

கரப்புறுதல், வன்பராய் முருடொக்கும் தன்மை, மூங்கில் போன்ற மனநிலை, அன்பிலாமை, பாதகம், ஆசைவாய்ச் செல்லுதல், மடம்படுதல், பரிவற்ற தன்மை, பொய்த்தல், காம வயப்படுதல் போன்ற தீய தன்மைகளை இரண்டாவது பிரிவில் அடக்கலாம். இத்தகைய தன்மை உடையோரே கொடியவர் களாகவும், சமுதாயக் குற்றவாளிகளாகவும் மாறிவருவதைக்

காண்கிறோம். இத்தீய தன்மைகளால், அச்சிந்தையைப் பெற்றவரும் துன்புறுவர்; மற்றவர்களையும் துன்புறுத்துவர்; தீமைகள் அனைத்திற்குமே காரணம் இத்தீய தன்மைகளே!

"கரப்புறு சிந்தை காண்டற் கரியவன்"

என்பார் திருநாவுக்கரசர். வஞ்சக எண்ணங்களை உடைய சிந்தையால் இறைவனைக் காணமுடியாது; இறைவனையே காணத் தகுதியில்லாத பாவியாக மனிதரை ஆக்கும் தன்மை அது.

"வன்பராய் முருடொக்குமென் சிந்தை"

என்கிறார் மணிவாசகர்.வலிய தன்மையுடைய கல்லாக ஒருவரின் சிந்தை இருக்குமென்றால் அங்கு அன்பு, அருள், பரிவு, பிறர் துன்பம் கண்டு உருகுதல் போன்ற தன்மைகளுக்கே இடமேது! தன்னை உளப்படுத்தி மணிவாசகர் சொல்வது உலகில் பலரின் நிலையைத் தன் மேல் ஏற்றியேயாம்.

உலகில் நாம் அடையும் துன்பங்களுக்கெல்லாம் காரணமாய் இருப்பது ஆசையே. அந்த ஆசைகளை. அடக்கியாளக்கூடிய சிந்தை உடையவரே துன்பமில்லாத இன்ப வாழ்வு வாழத்தகுதியுடையவர். ஆசைகளின் போக்கிலேயே நம் சிந்தையும் சென்று கொண்டிருந்தால், ஓயாத துன்பங்களே உருவாகிக் கொண்டிருக்கும்.

"ஆசை வாய்ச் சென்ற சிந்தையராகிச்"

சிலர் அல்லற்படும் நிலையை எடுத்துக்காட்டுகிறது பெரியாழ்வார் பாசுரம்.

மடமையின் காரணமாக உண்மை நிலையை உணராமல் பொய்ம்மைகளை நம்பித்திரியும் சிந்தைகளையும் காண்கிறோம். அப்படிப்பட்ட மால்கொள் சிந்தையின் இழிவைப் பல நூல்களும் எடுத்துக் காட்டும் திறத்தையும் இங்குக் காண்கிறோம்.

"மால்கொள் சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார்"

என்கிறார் திருநாவுக்கரசர். நம் சிந்தையிலுள்ள மயக்கத்தைப் போக்குவதற்கு இறைவன் அருள்புரிவார் என்பது இதன் கருத்து. இங்கு, "சிந்தை செய்வார்" என்ற சொற்களில் சிந்தை என்பது அருள் என்ற பொருள்படும்படி அமைந்துள்ளது.

சிந்தையைக் காமத்தின் விளைவிடமாக்கித்திரிகின்ற மனிதர்களும் உண்டு; அவர்களால் நேரும் கேடுகளும் பல்கிப் பெருகி வருவதை இன்றைய உலகில் எங்குமே காண்கிறோம். அப்படிப் பட்டவர்களைப் பார்த்து,

''காமச்சிந்தையராகித் திரிகின்றார்''

என்று வேதனையோடு கூறுகின்றார் இராமலிங்க அடிகளார். காமத்தைப்போன்ற வேறு ஓர் தீய தன்மையே பொய்த்து உயிர் வாழும் புன்மை. இவைகளெல்லாம் சிந்தையில் குடிகொள்ளும் தீய தன்மைகளாகும்.

''தீதெலாம் ஒன்றாய் வன்மை செறிந்திருட்படலம் போர்த்த
பாதகச் சிந்தை''

என்று தீயதன்மைகளைப் பெற்ற சிந்தையை ஆத்திரமாகச் சாடுகின்றார் தாயுமானவர்.

''சிந்தைத் துயரென் றொரு பாவி
சினந்து சினந்து போர் முயங்கி''

அவரை வருத்தியதாகவும் வேதனைப்படுகின்றார். எனவே சிந்தைத் துயரமெல்லாம் தீரவேண்டுமென்றால் அதற்குரிய ஒரே வழி, துயர்நோயைத் தீர்க்கும் தூயமருத்துவனாகிய இறைவன் திருவடியை அடைதலே என்பது சமயச் சான்றோர்களின் முடிந்த முடிபாகும்.

''பொய்யனேன் சிந்தைப் பொய்கெட''

அருள் புரியுமாறு அவரே இறைவனை வேண்டுகிறார்.

''பரந்தெழு சிந்தையை ஆண்டன்பு செய்வரால்''

என்று இறைவன்மீது தமக்குள்ள நம்பிக்கையைப் புலப்படுத்துகிறார் மணிவாசகர்.

''தெருளாத சிந்தைதனைத் தெருட்டி''

ஆட்கொண்டதாகக் கூறுகிறார் நாவுக்கரசர்.

''சிந்தை நைந்துலகிடை மயங்குமருள் அற வேண்டும்''

என்று வேண்டுகிறார் இராமலிங்க அடிகளார். சிந்தையிலுள்ள தீயதன்மைகள் அனைத்தையும் நீக்கி நன்னிலையடைய

இறைவன் திருவருளை எண்ணித் தொழவேண்டும் என்பதையே பக்தி இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சிந்தையின் வடிவம்

மனம் ஒரு நுண்பொருள்; அதற்கென்று வடிவம் ஏதும் கிடையாது; இருக்கமுடியாது. இருப்பினும் சிந்தனைச் சிறப்புடைய சான்றோர்கள் அதன் தன்மை, தொழிற்படும் நிலைகள் முதலியனவற்றைச் சிந்தித்து விளக்கியுள்ளார்கள். அதே போன்றுதான் மனத்தின் வேறு நிலைகளான உள்ளம், நெஞ்சம், சிந்தைபோல்வனவும், சில கற்பனையாளர்கள் தங்கள் கற்பனைக்கேற்ப சில வடிவங்களையும் இவைகளுக்குத் தந்துள்ளார்கள்.

நெஞ்சத்தை 'உட்கண்' என்றார் ஒருவர் 'கையளவு உள்ளம்' என்றார் வேறு ஒருவர் அதே போன்று சிந்தைக்கும் ஒரு வடிவம் தர முயன்றுள்ளார் தாயுமானவர்.

"பார்க்கின் அணுப்போற் கிடந்த பாழ்ஞ்சிந்தை"

என்பது அவர்தம் திருவாக்கு.

அணுவும்கூட சிறிய, நுட்பமான பொருளேயெனினும் அதற்கு ஓர் வடிவம் உண்டு. வடிவத்தினைமட்டுமே கருதிச் சிந்தையை அணுவென்று கூறினாரா, அல்லது அணுவின் தன்மை தொழிற்படும் நிலைகள் ஆகியனவும் சிந்தைக்கும் பொருந்தும் என்று கூறினாரா என்பது சிந்தனைக்குரியது.

சிந்தையின்மீது தமக்குள்ள வெறுப்புப் புலப்படுமாறு 'பாழ்ஞ்சிந்தை' என்று கூறினும், அதே காரணம் அணுவிற்கும் பொருந்துமென்பதில்லை. எனவே வடிவ ஒப்புமை எண்ணியே அப்படிக் கூறியுள்ளார் என்பதே பொருந்தும்.

அவரே வேறு ஓர் இடத்தில் 'சிந்தை செவியாகவே' என்றும் கூறியுள்ளார். அது தொழிற்படும் நிலைமட்டும் கருதியேயாம். புறஉலகில் புலப்படும் ஒலியை நாம் உணரத் துணைசெய்வன நம் செவிகளே. அதே போன்று அகஉலகின் உணர்வொலிகளை நாம்

அறியத்துணை செய்வது நம் சிந்தை என்பது கருதியே அப்படிக் கூறினார் என்பதே பொருந்தும்.

சிந்தையும் அன்பும்

மனித வாழ்க்கைக்கே அடிப்படையானது அன்பு; அந்த அன்பு அகத்தில் இல்லாதவர்கள் வாழும் வாழ்வானது பாலை வனத்தில் பட்ட மரத்தை நட்டு வைத்ததைப் போலாகும் என்றல்லவா வள்ளுவர் கூறுகிறார்! எனவே சிந்தையின் சிறப்பிற்கே முதற் காரணமாய் இருப்பது அன்பாம். அந்த அன்பு எவருக்கு இல்லையோ அவர்கள் சிந்தையைப் பற்றியே அறிய மாட்டார்கள் என்பதை,

"அன்பிலார் சிந்தை அறம் அறியாரே"

என்பார் திருமூலர். 'சிந்தை அறம்' என்று அவர் குறிப்பிடுவது சிந்தையின் சிறப்பை என்பது பொருந்தும்.

சிந்தையில் அன்புடையவர்கள், அந்த அன்பின் ஆழத்தைத் தம் பார்வையிலேயே புலப்படுத்தி விடுவர். இந்த நுட்பத்தை,

"அன்புறு சிந்தையன்; அமைய நோக்கினான்"

என்பார் கம்பர். சிந்தையின் அன்பு பார்வையில் வெளிப்பட்டது என்பதை 'அமைய நோக்கி' என்று அழகாகக் காட்டுகிறார் கவிஞர். இவரே பின்போர் இடத்தில் "அன்பழி சிந்தை தன்னால்" நேர்ந்த விளைவினையும் விளக்கிப் பேசுவார். சிந்தையில் அன்பானது உருக வேண்டும்; அப்போது தான் அச்சிந்தை அருளுடைய சிந்தையாக, தூய சிந்தையாக அமையும் என்பதை,

"அன்புருகு சிந்தை"

என்ற சொற்களால் வடித்துக் காட்டுகிறார் கம்பர்.

சிந்தையும் அறிவும்

நம்முடைய அறியாமை இருளகலத் துணை செய்வது அறிவு; அதுபோல நம்முடைய மனத்தில், வாழ்வில் சூழ்ந்துள்ள அனைத்து இருளையும் அகற்றும் பேரறிவாக விளங்குபவன் இறைவன். அது கருதியே "அறிவே தெய்வம்" என்றும் கூறலாயினர். எனவே, அறிவு வடிவான தெய்வத்தை அறிவதற்கும்,

அடைவதற்கும் நமக்குத் தேவை தெளிந்த அறிவே. அத்தகைய தெளிந்த அறிவுடையோர் சிந்தையில்தான் இறைவன் விரும்பி எழுந்தருளுவான் என்ற உண்மையை,

"தெளியறிவாளர் தம் சிந்தையுளானே"

என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

இதே உண்மையை வேறு விதமாகக் குறிப்பிடுகிறார் இராமலிங்க அடிகளார். உண்மையான உணர்வோடு வழிபடும் தொண்டர்கள் சிந்தையில் இறைவன் இருப்பான். எந்த வடிவோடு எனில் அறிவு வடிவில் என்கிறார் அவர். அறிவு வடிவாக இறைவன் தொண்டர்கள் சிந்தையில் உள்ளான் என்றால், தொண்டர்கள் சிந்தையில் அறிவு உள்ளது. அதனால் இறைவனும் உள்ளான் என்பதுதானே பொருள்!

"தொண்டர் சிந்தை தனிலோங்கும் அறிவே"

என்பது திருவருட்பா.

பாரதியாரும் கூட, மஹாசக்தி, தன்னுடைய சிந்தையில் அறிவு வடிவாய்க் குலவிடுவதாகவே கூறுகின்றார்.

"அறிவாய்ச் சிந்தையிற் குலவிடு திறத்தாள்"

என்பது அவர்தம் பாடல் வரி. எனவே, சிந்தையில் தெளிந்த அறிவு வேண்டும் என்ற உண்மை புலப்படுகிறது.

சிந்தையும் அறமும்

அன்பு, அறிவு முதலியன சிந்தையில் அமையப்பெறினும் அச்சிந்தை இயங்கும் வழி நல்வழியாக, அறவழியாக இருத்தல் அவசியம். அது இல்லையேல், அச்சிந்தை எவ்வளவு சிறப்பியல்பு களைப் பெறினும் பயனற்றுப் போய்விடும். அதைப் பயன்படுத்து பவர் தீயவராக இருப்பின் தீய விளைவுகளைத் தானே தரும்! அது போலத்தான் சிந்தைக்கு அறமும்! இந்த உண்மையைப் பல இடங்களில் தம் காப்பியத்தில் காட்டியுள்ளார் கம்பர். அக் காப் பியமே, 'அறம் வெல்லும்' என்ற உண்மையை நிலை நாட்டத் தோன்றியது தானே!

"சிந்தை நல்லறத்தின் வழிச் சேறலால்"

என்று கூறுவர் கம்பர்.

நல்லறத்தின் வழிச் சிந்தை சென்றால் சொல்லும் செயலும் கூட நன்மை பயப்பதாகத்தானே அமையும்?

சிந்தை செல்லும் வழிமட்டுமல்ல; அது கருதுவதும் கூட அறத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்; அப்போது தான் அதற்குப் பெருமையுண்டு என்பதை,

"அறங்கருது சிந்தை முனி அந்தணர்"

என்று கூறுமுகத்தான் விளக்குகிறார் அவர். அறவோர்கள் தானே அந்தணர் எனப்படுபவர். அவர்கள்தம் சிந்தை எப்போதுமே அறத்தைப் பற்றியே நினைப்பதாக அமைய வேண்டும்; அப்போது தான் அவர்களால் உலகம் உய்வடையும் என்ற உண்மை இங்கு உணரத்தக்கது. "அறங்கொள் சிந்தையர்" "அறந்தரு சிந்தையன்" என்றெல்லாம் கம்பர் அறத்திற்கும் சிந்தைக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பேசுவது இவ்வுண்மையை உறுதிப்படுத்தும்.

சிந்தையும் வினையும்

முற்பிறவியில் நாம் செய்த வினைப்பயன் தப்பாது இப்பிறவி யிலும் தொடர்ந்து வந்து ஏற்ற பலனைத் தரும் என்பது சமயச் சான்றோர் கொள்கை. அப்படி வினைப்பயனால் நாம் வருந்த நேரிடினும், அவ்வருத்தம் மாற்றுவதற்கும் வழியுண்டு; அவ்வழி எவ்வழி என்று உணர்த்துகிறார் நாவுக்கரசர்.

"சிந்தையால் நினைவார் வினை தேயுமே"
"தீவினைகள் தீர்த்திடுமென் சிந்தையான் காண்"

என்பது அவரது தேவாரப் பாசுரம். சிந்தையினால் இறைவனை நினைந்து வாழ்த்தினால் வந்தவினை தானாகவே விலகிச் சென்று விடும் என்பது அவர் கூறும் அரிய உண்மையாகும்.

சிந்தையில் மூண்ட வினைகள் வரும் நெறியையே மாற்ற முடியும் என்கிறார் கம்பர். அப்படி மாற்றுவதற்கு மெய்யுணர்வு வாய்த்தல் அவசியம். அவ்வுணர்வின் மூலமாக வினைகள் நம்மை வந்து அடைந்து வருத்தாமல் செய்து விடமுடியும் என்பது அவரது கருத்து.

"சிந்தை மூண்ட வினை வருநெறியை மாற்று
மெய்யுணர் வோரும்"

என்பது அவர் தரும் தத்துவ விளக்கம்,

என்னுடைய அழகு, நிறை, சிந்தை ஆகியனவற்றை எடுத்துக் கொண்டதோடு என்னுடைய வினைகளையும் இறைவன் எடுத்துக் கொண்டான் என்கிறது ஆழ்வார் ஒருவரின் அனுபவத்தைக் கூறும் பிரபந்தப் பாடல்.

''என்னலனும், என்னிறையும் என்சிந்தையும்
என்வினையும் கொண்டென்னை யாளும்...''

என்று செல்கிறது அப்பாடல். எனவே தூய சிந்தையால் இறைவனைத் தொழுதால் தொடர்ந்து வரும் வினைகளும் நீங்கி விடும் என்பது புலப்படுகிறது.

சிந்தையை அடக்குதல்

மயக்கத்தின் காரணமாகப் புலன்கள் வழி சென்று சிந்தை அலைமோதித் தவிப்பதுண்டு. அதன் விளைவாகத் துன்பங்களே மென்மேலும் பெருகக் காண்போம். ''மால் வைத்த சிந்தை மயக்கற''ச் செய்யும் இறைவனிடத்தில் பணிந்து அவனருள் பெறும்போது சிந்தையின் அலைமோதும் தன்மை மாறுபடுகிறது. ஆனால், அது மட்டுமே சிந்தையின் செயலை முழுமையாக அடக்கி விடாது; உலகத்தில் நமக்குள்ள பற்றுகள் ஒழிக்கப்பட வேண்டும்; அப்போது தான் அது முழுமையாக அடங்கும் என்பதை,

''படிப்பற்றுக் கேள்வியற்று, பற்றற்று, சிந்தைத்
துடிப்பற்றோர்க் கன்றோ சுகங்காண் பராபரமே''

என்றும்,

''சிந்தையும் என்போலச் செயலற் றடங்கிவிட்டால்''

என்றும்,

''பற்றொழிந்து சிந்தைப் பதைப் பொழிந்து''

என்றும் கூறுவதன் மூலம் தெளிவாக விளக்கியுள்ளார் தாயு மானவர். அப்படிப் பல அரிய வழிகளை அவர் கூறிடினும், அது எவ்வளவு எளிய செயல் அல்ல என்பதை,

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது''

என்றும் அவரே கூறிப் போந்துள்ளார். எனினும் முயற்சி நற்பயனை முடிவில் தருமே!

சிந்தைத் தெளிவு

சிந்தையினையே ஆலயமாகக் கொண்டு இறைவன் எழுந்தருளுவான் என்ற உண்மையை எல்லாப் புலவர்களுமே ஏற்றுக் கொண்டு பாடியுள்ளார்கள். அப்படிப்பட்ட சிந்தை தெளிவானதாக இருந்தால்தானே இறைவன் எழுந்தருளுவான்!

"தெளிவுறு ஞானத்துச் சிந்தையினுள்ளே"

அவன் எழுந்தருளுவான் என்றல்லவா திருமந்திரம் கூறுகிறது! ஆனால் தெளிவடையாது சுழல்கின்ற நிலையில் தானே சிந்தைகளை உலகில் பெரும்பாலும் காண்கிறோம். இதனையே தாயுமானவரும்,

"சிந்தை தான் தெளியாது சுழலும்"

என்பார். உறுதியான பற்றுக்கோடு எதையும் அடையாத நிலையிலேயே ஒரு பொருள் சுழன்று கொண்டிருக்கும்; பற்றுக் கோட்டைப் பெற்றுவிட்டால் அவ்விடத்திலேயே அமைதியடைந்து விடும். இறையுணர்வாகிய பற்றுக் கோட்டால் சிந்தையும் அமைதியடைகிறது.

அப்படிச் சிந்தை திரிந்துழலும் தீய மனிதர்களைக் கண்டார் வள்ளலார். தங்கள் நிலைகளை எண்ணி அம் மனிதர்கள் வருந்த வில்லையாம்; அவர்களுக்காகத் தம் சிந்தை நசிந்து வருந்தியுள்ளார் இவர். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி"யவரல்லவா இவர்.

"சிந்தை திரிந்துழலும் தீயரால் சிந்தை நசிந்தேன்"

என்பது அவரது அருட்பா.

சுழலும் நிலையின்றித் தெளிந்த நிலையை அடைந்து விட்டால் அவர்கள் இறைமைத் தன்மையைப் பெற்று விடுகிறார்கள் என்பதை,

"சிந்தை தெளிந்தார் சிவமாயி னார்களே"

என்று கூறுகிறது திருமந்திரம்.

சிந்தையும் உவமையும்

உவமைகளைப் பயன்படுத்தியதன் மூலம் சிந்தையின் தன்மை தொழிற்படும் நிலை ஆகியவைகளைப் புலவர்கள் எவ்வாறு விளக்கியுள்ளார்கள் என்று காண்போம்.

திருவாசகம்

1. தேன்புரையும் சிந்தை
2. வன்பராய் முருடொக்குமென் சிந்தை
3. திணியார் மூங்கிற் சிந்தை

திருமந்திரம்

1. திருவொத்த சிந்தை
2. திரையற்ற நீர்போல் சிந்தை

நாலாயிரத் திவ்யபிரபந்தம்

தொழுமலர்ச் சிந்தை

கம்பராமாயணம்

1. தேனினும் களிப்புச் செய் சிந்தை
2. தீயுறு மெழுகிற் சிந்தை

தாயுமானவர்

தீயின் மெழு கொத்துருகும் சிந்தை

திருவருட்பா

1. செக்குற்ற எள்ளெனவே சிந்தை
2. தீயின் மெழுகாச் சிந்தை

உவமைகளால் உணரப்படுவன

சங்க இலக்கியங்களான நற்றிணை புறநானூறு ஆகிய இரண்டுடன் திருநாவுக்கரசர் தேவாரம், பாரதியார் கவிதைகள் ஆகிய நூல்களில் சிந்தையை உவமித்துக் கூறிய திறத்தைக் காண முடியவில்லை ஏனைய நூல்களிலும் கூட சிறு வழக்காகவே அமைந்துள்ளன. அவ்வுவமைகள் உணர்த்தும் செய்திகளாவன:

1. சிந்தையின் மென்மைத் தன்மையைக் காட்டுகின்ற விதத்தில், மலருடன் அதை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

2. அதற்கு வன்மைத் தன்மையும் உண்டு என்பதை வன்பபராய் முரடு, திணியார் மூங்கில் போன்ற உவமைகள் உணர்த்துகின்றன.

3. வன்மையான சிந்தையே இறைவன் அருள் ஒளியால் உருகும் நிலையை அடையும் என்ற உண்மையை 'தீயின்மெழுகு' என்ற உவமையின் மூலம் பலரும் உணர்த்தியுள்ளார்கள்.

4. சிந்தையின் அலைமோதித் தவித்து நையும் தன்மையைச் 'செக்குற்ற எள்' என்ற உவமை எடுத்துக் காட்டும்.

5. சலனமற்ற தெளிவான தன்மையும் சிந்தைக்குண்டு என்பதை, 'திரையற்ற நீர்' என்ற உவமை உணர்த்தும்.

மேற்கண்ட தன்மைகள் சிந்தைக்குண்டு என்பதை உவமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிந்தையும் உருவகமும்

உருவகங்களின் வாயிலாகச் சிந்தையின் தன்மைகள், அது தொழிற்படும் நிலைகள் ஆகியனவற்றை எவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்கள் என்பதை இனிக் காண்போம்.

திருவாசகம்

1. சிந்தையே கோயில்
2. சிந்தையே ஊர்

திருமந்திரம்

சிந்தைக் கமலம்

நாலாயிரத் திவ்யபிரபந்தம்

சிந்தை இடுதிரியா

தாயுமானவர்

சிந்தையே கோயில்

திருவருட்பா

சிந்தையே கோயில்

உருவகங்களால் உணரப்படுவன

1. சிந்தையைக் கோயிலாகப் பலரும் உருவகப்படுத்தியுள்ளனர். அதன் மூலம் சிந்தையின் பெருமை மட்டுமன்றி

அதன் தூய்மைத் தன்மையும் புலப்படுகிறது; இறைவனோடு இதற்குள்ள தொடர்பும் தெரிய வருகிறது.

2. சிந்தையில் பல்வேறு குணங்களும் உள்ளமையால், பல தரப்பட்ட மக்களும் சேர்ந்து வாழும் ஊருடன் சிந்தையை உருவ கப்படுத்திக் கூறியுள்ளனர். ஊரிலுள்ள மக்களிடையே உள்ள வேற்றுமைகள், ஆரவாரம் போன்ற தன்மைகள் சிந்தைக்கும் உண்டு என்ற வகையிலும் எண்ண இடமுண்டு.

3. சிந்தையைக் கமலமாக உருவகப்படுத்தி யுள்ளதிலிருந்து அதன் மென்மைத் தன்மையும், தூய்மைத் தன்மையும் புலப் படும். இறைவன் அருள் ஒளியால் இது மலரும் என்ற நுட்பமும் உணரத்தக்கது.

4. சிந்தையில் இறைவன் அருள் ஒளிபடும்போது நம் உயிர் உய்வடைகிறது; பிறப்பின் பயன் கைவரப் பெறுகிறது. இறை யொளியைக் காண நாம் ஏற்றி வைக்கும் தீபத்தில் இடும் திரி யாகவும் நம் சிந்தை அமைந்துள்ளது. திரியின்றேல் தீபம் இல்லை; ஒளியில்லை; எனவே திரி நன்முறையில் அமைந்து, அதை ஒழுங்காக ஏற்றி வைத்துப் போற்றும்போதுதான் ஒளி யைப் பெற முடியும். அதுபோலவே சிந்தையையும் தூய்மை யாகப் பேணி என்றும் அது சிறக்கும் வகைசெய்ய வேண்டும் என்ற உண்மையும் உருவகத்தால் உணரக்கிடக்கிறது.

விளித்தொடராகச் சிந்தை

நெஞ்சம், உள்ளம் போன்ற சொற்களை விளித்து முன்னி லைப் படுத்திப் பேசியது போலவே சிந்தையையும் முன்னிலைப் படுத்திப் பேசும் பழக்கம் இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆய்விற் கெடுத்துக் கொள்ளப்பட்ட பத்து நூல்களில், பாரதி யார் கவிதையில் மட்டும், அதுவும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் விளித்துப் பேசப்பட்டுள்ளது.

"சிந்தையே இம்மூன்றும் செய்"[2]

என்று தம் சிந்தைக்குக் கட்டளையிடுகிறார் பாரதியார். சிந்தை யின் தன்மைகள், தொழிற்படும் நிலைகள் ஆகியனவற்றை விரி வாக விளக்கிய பக்தி இலக்கியங்கள் கூடச் சிந்தையை விளித்துப் பேசவில்லை. காரணம், சிந்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயம். இறைவனை விளித்துப் பேசும்போது அவன் இருக்கும்

இடத்தை விளித்துப் பேசுதல் வேண்டியதில்லை என்று கருதியிருக்கலாம். மேலும் சிந்திக்கும் தன்மையைத் தருவதே சிந்தைதான். எனவே, அதையே விளிக்க அவசியமில்லை என்பதும் காரணமாயிருக்கலாம்.

நிறைவுரை

சிந்தையின் சொல்லமைப்பு, அதன் தன்மைகள், தொழிற்படும் நிலைகள் ஆகியன விளக்கப்பட்டன. உவமை, உருவகங்களின் மூலம் சிந்தையைப் பற்றிக் கூறப்பட்ட உண்மைகளும் ஆய்ந்துரைக்கப்பட்டது. சிந்தைக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பும் ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டது.

சித்தம்

சொல்லமைப்பு

மனத்தின் தன்மையை உணர்த்தும் சொற்களில் இதுவும் ஒன்று. இச்சொல் பக்தி இலக்கியங்களில் மட்டுமே பயன்படுத் தப்பட்டுள்ளது. அதுவும் சிறு வழக்கிற்றாகவே காணப்படு கிறது. சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய வற்றில் இச்சொல் காணப்படவில்லை. எனவே பிற்காலத்தில் தான் இது இலக்கிய வழக்கிற்கு வந்திருக்க வேண்டும் என்பது புரி கிறது. சில சொற்கள் சில கருத்துக்களை விளக்குவதற்கென்றே தனி உரிமை பெற்றுள்ளமையை இலக்கியங்களில் காண்கிறோம். அதே கருத்தை விளக்குவதற்கு வேறு சொற்களும் இருப்பினும் குறிப்பிட்ட அந்தச் சொல்லைப் பயன்படுத்தும் போதுதான் நாம் எண்ணியதை அப்படியே உணர்த்தி விட்ட மன நிறைவைப் பெறுகிறோம். அந்த வகையில் குறிப்பிடப்பட வேண்டிய சொற்களில் சித்தமும் ஒன்று. ஏனெனில் பக்தி இலக்கியங்களில் பயன்படுத்தப் படுவதற்கென்றே உள்ள சில சொற்களில் இதுவும் ஒன்றாக வழங்கப்பட்டுள்ளதை அறிகிறோம். இச்சொல் கையாளப்பட்ட முறையில் காணப்படும் வளர்ச்சி, தமிழ்நாட் டின் பக்தி உணர்வு பெற்ற வளர்ச்சியைக் காட்டக்கூடியதாக உள்ளது.

'சித்து' என்ற சொல்லின் அடியில் இச்சொல் பிறந்திருக்க வேண்டும். சித்து என்பது அறிவைக் குறிக்கும். அறிவுடைய சான்றோர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டதையும் அறிகி றோம். ஆனால் பெரும்பாலும் இச்சொல் மனத்தைக் குறிப்ப தாகவே பக்தி இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனத்

திற்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அறிவு நலம் பெறுவதே மனத்தின் மாட்சியைப் பொறுத்துத்தான். மனத்தைப் பெற்றதனால்தான் மனிதன் தனது அறிவால் மற்ற உயிரினங்களையெல்லாம் அடக்கியாள்கிறான்; அற்புதங்கள் பலவற்றை ஆக்கி வருகிறான்; அந்த மனம் என்ற ஒன்று இல்லாமையினால் தான் மற்ற உயிரினங்களுக்கு அறிவிருந்தும் வலிமையிருந்தும் அதை உணர்ந்து பயன்படுத்தும் பாங்கு இல்லாமற்போய் விட்டது. எனவேதான் தொல்காப்பியர் ஆறாவது அறிவென்றே மனத்தைக் குறிப்பிட்டார். ஆனால் பிற்றை நாளில் மனம் வேறு; அறிவு வேறு; ஆனால் நெருங்கிய தொடர்புடையன அவைகள் என்ற உண்மை உணரப்பட்டது. தொல்காப்பியர் கருதியது போலவே மனத்தையும், அறிவையும் ஒன்றாகக் குறிக்கும் சொல்லாகவே சித்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே சித்தம் என்றால் அறிவு என்ற நிலையினின்று மாறி மனம் என்ற நிலையில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்விற் கெடுத்துக் கொண்ட இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்ட முறைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. மனிதரது மனத்தைக் குறிக்கும் நிலையில் பயன்படுத்தப் பட்டது.

2. இறைவனை, இறைவனது மனத்தை உணர்த்தும் நிலையில் பயன்படுத்தப்பட்டது.

3. மனிதரது எண்ணம், விருப்பம் முதலியனவற்றை உணர்த்தும் நிலையில் பயன்படுத்தப்பட்டது.

இவற்றினுக்குச் சான்றுகளைக் கீழே காணலாம்.

"நஞ்சமுண்டபிரான் அடியிணக்கே சித்தம் வைத்து" நாவுக்கரசர்

"சித்தமே புகுந்தெம்மை யாட்கொண்டு" மணிவாசகர்

"சித்தந் தெளிந்தேன்; செயலொழிந்தேனே" திருமூலர்

"சித்தம் நின்பால தறிதி யன்றே" திவ்யபிரபந்தம்

"சித்தம் உறும் களியோடு சிறந்தே" கம்பர்

திரையிலா நீர்போல் சித்தம் தெளிவனோ" தாயுமானவர்

"சித்தம் தெளிவிக்கும் தேசிகன்" வள்ளலார்

"சித்தம் வருந்துகையில்" பாரதி

மேற்கண்ட சான்றுகளிலெல்லாம் மனிதரது மனத்தை உணர்த்தும் நிலையில் சித்தம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

"சித்தம் இறையே சிவ குருவாமே" திருமூலர்

"சித்தம் வைத்துரைப்பார்" திவ்யபிரபந்தம்

"உன்சித்தம் இரங்கிலதென்? தாயுமானவர்

"முக்கண்ணுடைத் தேவே, நின் சித்தம் தெரிந்திலனே" வள்ளலார்

மேற்கண்ட சான்றுகளில் சித்தம் என்ற சொல்,இறைவனை, அவனது மனத்தை உணர்த்தும் ஒரு சொல்லாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறிகிறோம். ஆனால் இம்முறையை எல்லோரும் பின்பற்றவில்லை; சில இலக்கியங்களில் மட்டுமே காண முடிகிறது.

"சித்த மாகிற் சிவகதி சேர்திரே" நாவுக்கரசர்

"உனது சித்தமின்றி நான் செய்வதொன்றிலையே" வள்ளலார்

"சித்தம் நான் கொண்டேன்"

"கொன்று விடச் சித்தமோ" பாரதியார்

மேற்கண்ட சான்றுகளில் எண்ணம், விருப்பம் என்ற பொருள் தரும் நிலையில் சித்தம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இம்முறையும் கூட பக்தி இலக்கியங்களிலேயே பின்புதான் அதிகமாகப் பின்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் பிற்கால இலக்கியங்களான திருவருட்பா, பாரதியார் கவிதைகள் போன்றவற்றில் அதிக இடங்களில் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

மேற்காட்டிய முறைகளன்றி, அரசன், சான்றோர் போன்றோரின் கட்டளையை உணர்த்தும் நிலையிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருவதை உலக வழக்கில் காண்கிறோம். அரசன், தனக்குக்கீழ் உள்ளவரிடம் ஒன்றைச்செய்து முடிக்குமாறு ஆணையிடும் போது 'தங்கள் சித்தப்படி செய்கிறேன்' என்று பதில் கூறுபவர் சொல்வது நாடக வழக்கிலும் காணப்படும் முறை. இங்கு அச்சொல் விருப்பம் என்ற நிலையினின்றும் வேறுபட்டுக் கட்டளை என்ற நிலையிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளது.

அப்போதும் கூட தகுதியால் உயர்ந்த ஒருவரோடு தொடர்பு கொண்ட நிலையில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாரதியார் தம் கவிதையில் சித்தம் என்பதை அறிவு என்ற நிலையிலும் பயன்டடுத்தியுள்ளார்.

"சித்தமய மிவ்வுலகம்"

என்று அவர் குறிப்பிடுவது, உலகம் அறிவு மயமானது என்ற பொருளையே தந்து நிற்கின்றது. ஆனால் அவரே பின்பு வேறு ஓர் இடத்தில்,

"செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்
நின்றிடும் தாயே"

என்று இறைவியைப் பற்றிப் பாடும்போது சித்தம் வேறு, அறிவு வேறு என்பதை விளக்கிவிடுகிறார். சித்தம் என்பது மனத்தையே குறிக்கும் என்பதைத் தாயுமானவர் தம் பாடலாலும் அறிய முடிகிறது.

"சித்தமும் வாக்கும் தேகமும் நினவே"

என்று தன்னைப்பற்றி இறைவனிடம் குறிப்பிடுகின்றார். இங்கு சித்தம், வாக்கு, தேகம் என்று அவர் குறிப்பிடும் முறை மனம், வாக்கு, காயம் என்ற தன்மையிலேயே அமைந்துள்ளமை புலப்படும். எனவே, சித்தம் என்று அவர் குறிப்பிடுவது மனமே என்பது ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகிறது.

'சித்தம்' என்ற சொல்லை மனித நிலையிலும்கூட பக்தர் களோடு தொடர்புபடுத்தியே பலரும் பேசியுள்ளார்கள். திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் பல இடங்களில் இம் முறையையே பின்பற்றியுள்ளார். ஒருவேளை பக்தர்களது மனத் திற்கு மட்டுமே மனிதநிலையில் இச்சொல் பொருந்தும் என்றும் கூட எண்ணியிருக்கலாம்.

இறைவனது மனத்தை இச்சொல் உணர்த்துகின்ற நிலையில் அதிகமாகப் பாடியவர் இராமலிங்க அடிகளாரே. அவர் தம் பாடல்களில் ஓரிரு இடங்களைத்தவிர ஏனைய இடங்களெல்லாம் சித்தம் என்றால் இறைவனது மனம் என்ற முறையிலேயே பாடி யுள்ளார். அம்முறையைப் பின்பற்றியே பாரதியாரும் பாடி யுள்ளார்.

இலக்கியங்களில் 'சித்தம்' என்ற சொல்

பக்தி இலக்கியங்களில் இச்சொல் எந்த அளவிற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டு அதன்மூலம் இச்சொல் பெற்ற செல்வாக்கினை உணரலாம்.

	இலக்கியம்	பயன்படுத்தப்பட்ட இடங்கள்
1.	திருநாவுக்கரசர் தேவாரம்	11
2.	திருவாசகம்	13
3.	திருமந்திரம்	18
4.	நாலாயிரத்திவ்ய பிரபந்தம்	10
5.	கம்பராமாயணம்	3
6.	தாயுமானவர் பாடல்கள்	11
7.	திருவருட்பா	17
8.	பாரதியார் கவிதைகள்	22

நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டு நூல்களிலும் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. கம்பராமாயணத்தைத் தவிர ஏனைய இலக்கியங்களிலெல்லாம் சராசரி பத்து இடங்களுக்குமேல் பயன் படுத்தப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் மனத்தின் பல்வேறு நிலைகளும் விளக்கப்பட்டிருப்பதற்கேற்ப நெஞ்சம், உள்ளம், சிந்தை, மனம் போன்ற சொற்களையும் அதிக இடங்களில் அவற்றின் நிலை கருதிக் கையாண்டுள்ளார் கம்பர். சித்தம் என்ற சொல்லை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. காரணம், பக்தி இலக்கிய வரிசையில் அதுவும் இடம்பெறினும் அது ஓர் காப்பியமாகையால், பாத்திரப் படைப்புகளுக்கேற்ற சொற்களையே அவரால் பயன் படுத்த முடிந்தது.

திருமந்திரம் ஓர் தத்துவ விளக்க நூல் இறைத்தத்துவத்தைப் பற்றிய விளக்கங்களையும் அந்நூலில் காணமுடிவதால், சித்தம் பற்றியும், இறைவனோடு சித்தத்திற்குள்ள தொடர்புபற்றியும் அந்நூல் தெளிவுபடுத்துகிறது.

"சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டவால்"

என்பது திருமந்திரம். சித்தத்தையே சிவமாக்கிவிட்டால், கடுமை யான தவங்கள் ஏதும்செய்ய வேண்டுவதில்லை என்பது அத் தத்துவ விளக்கம். சித்தத்தைச் சிவமாக்குதல் என்பது அச்சித்தம் இறைவன் எழுந்தருளும் இடமாக ஆக்குதல் என்பதே பொருள்.

நான் அறியாமையினால் பல பிழைகள் செய்யக்கூடும்; அப்பிழைகளையெல்லாம் நீ உன் சித்தத்தில் வைத்திருப்பா யெனில் யான் எப்படிப் பிழைக்கமுடியும் என்பதை வேதனை யோடு குறிப்பிடுகின்றார் வள்ளலார்.

"தீதுசெய்வேன் றன் பிழையைச் சித்தம் குறித்திடில்யான்
யாது செய்வேன்?"

என்பது அவரது அருட்பாடல். பக்தியானது எப்போதும் சித்தத்தில் திகழவேண்டும். அப்போதுதான் அதனால் பயன் உண்டு; இறைவன் அருளும் உண்டு என்பதை,

"சித்தம் நீங்காதுறு பக்தி"

என்கிறார் பாரதியார். எனவே, நெஞ்சில் குழைவும், உள்ளத்தில் உறுதியும், சிந்தையில் தெளிவும், மனத்தில் ஆழமான உணர்வும் நிறைந்திருப்பதுபோல சித்தத்தில் பக்தி நிறைந்திருக்கும் என்ற உண்மையும் இங்கு உணரக்கிடக்கிறது. எனவே தான் பக்தர் களின் மனத்தைமட்டும் சித்தம் என்ற சொல்லால் குறித்தனர் போலும்!

சித்தமும் ஐம்புலன்களும்

சித்தம் தூய்மையானது; பக்தி மணம் கமழக்கூடியது; இறைவன் எழுந்தருளக்கூடியது. ஆனால் அந்தச் சித்தமும்கூட கலங்கி விடுவதுண்டு; திரிந்து மயங்கிவிடுவதுண்டு; தெளிவின்றிக் குழம்பி விடுவதுண்டு; அப்படி ஏற்படக்காரணமாக இருப்பனவே நம்முடைய ஐம்புலன்களும். அவற்றின் செயல்களால்தான் சித்தம் தவிக்கும் நிலைமை உருவாகிறது. இந்நுட்பத்தை,

"சித்தத்துள் ஐவர் தீய செய்வினை பலவும் செய்ய"

என்கிறார் திருநாவுக்கரசர் ஐம்புலன்கள் செய்யும் தீவினை யினின்றும் நாம் உய்திபெறவேண்டுமென்றால் நம் சித்தமானது இறைவனோடு ஒன்றிவிடவேண்டும்; பிரிக்கமுடியாத தன்மையில் இரண்டறக் கலந்துவிடவேண்டும்; இத்தன்மையை,

"சித்தத்தை யொன்ற வைத்தார்;
சிவடதே நினைய வைத்தார்"

என்று கூறுகிறார் அவர்.

சித்தம் தெளிதல்

"என்னுடைய சித்தமானது அலைமோதும் ஆழ்கடலிடையே அகப்பட்ட துரும்புபோல அங்குமிங்கும் மோதிக்கொண்டிருக்கிறது" என்று நொந்து கூறுகிறார் தாயுமானவர். ஆழ்கடல் ஆழமும், விரிந்த பரப்புமுடையது; அதில் அகப்பட்ட பெரும் பொருள்கள் எல்லாம் அங்குமிங்குமாகத் தூக்கி வீசப்படும்; மூழ்கடிக்கப்படும்; அத்தகைய தன்மையுடைய பெருங்கடலில் சாதாரணத் துரும்பு சிக்கினால் என்னாகும்? அதுபோலத் தானாம் நம்முடைய சித்தத்தின் நிலையும்!

"சித்தமெனும் பௌவத் திரைகடலில் வாழ்துரும்பாய்"

என்பது அவரது பாடல். இது தெளிவில்லாத, குழப்பமான நிலையில் சித்தம் தவிப்பதை உணர்த்துவதாகும். இந்நிலையினின்றும் மாறி, அலைகள் மோதாத குளத்தில் எவ்வாறு அமைதியாகத் தண்ணீர் இருக்குமோ அதுபோன்ற தெளிவான நிலையைச் சித்தம் அடையவேண்டும் என்று விரும்புகிறார் அவர்.

"திரையிலா நீர்போல் சித்தம் தெளிவனோ"

என்று அவர் குறிப்பிடுவது, எவ்வித ஆர்ப்பரிப்பும் இன்றி அமைதியடைந்த நிலையில் சித்தம் இருக்கவேண்டும் என்பதையே உணர்த்தும். அப்படிச் சித்தம் தெளிந்துவிடுமென்றால் இறைவனோடு கலந்துவிடலாம் என்பதை,

"சித்தம் தெளிந்து சிவமா னோர்"

என்று குறிப்பிடுகிறார் அவர். அப்படிச் சித்தம் தெளிவதற்கு நாம் முயலலாம்; ஆனால் முடிவு நம் கையில் இல்லையே! இறைவனல்லவா அதைச் செய்யவேண்டும்? இவ்வுண்மையை,

"சித்தம் தெளிவிக்கும் தேசிகன்"

என்று இறைவனைக் குறிப்பிடுமுகத்தான் உணர்த்துகிறார் இராமலிங்க அடிகளார்.

உவமை உருவகங்களும் சித்தமும்

சித்தத்தின் தன்மையை விளக்குகின்ற வகையில் அடைமொழிகளைப் பெரும்பாலும் யாரும் குறிப்பிடவில்லை. பாரதியார்மட்டும் ஓர் இடத்தில் 'மூடச்சித்தம்' என்று குறிப்பிட்டுள்ளார். அது சித்தம் தெளிவடையாத நிலையை

உணர்த்தும். இனி, உவமை உருவகங்களின் மூலம் சித்தத்தின் தன்மை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

சித்தமும் உவமையும்

1. திரையிலா நீர்போல் சித்தம் — தாயுமானவர்

சித்தமும் உருவகமும்

1. சித்தமெனும் திண்கயிறு — மணிவாசகர்
2. சித்தக்குகை — திருமூலர்
3. சிலையாய சித்தம்
4. சித்தமெனும் பௌவத்திரை கடலில் வாழ்துரும்பு — தாயுமானவர்
5. சித்தசாகரம் — பாரதியார்

திரையிலா நீர் என்ற உவமை சித்தம் தெளிவடைந்த நிலைமையினை உணர்த்தும். சித்தத்தை வலிமையான கயிறாக உருவகம் செய்துள்ளார். மணிவாசகர் கயிற்றின் பயன் எதையேனும் கட்டுவதே சித்தமாகிய கயிற்றால் எதைக்கட்டவேண்டும்? மணிவாசகரே குறிப்பிடுகிறார், "திருப்பாதம் கட்ட" என்று. நம் சித்தத்தின் மூலம் இறைவனை அடையவேண்டும் என்ற உண்மையினையே சித்தமாகிய வலிமையான கயிற்றால் இறைவனின் திருப்பாதத்தைக் கட்டவேண்டும் என்று கூறுகிறார். குழப்பமடைந்த சித்தமானது இருள்படிந்திருக்கும் என்ற உண்மையை 'சித்தக்குகை' என்ற உருவகமும், தீய தன்மைகள் நிறைந்த சித்தமானது வலிமையுடன் உருகும் தன்மையற்றுக் காணப்படும் என்பதை "சிலையாய சித்தம்" என்ற உருவகமும், அமைதியின்றி, ஆரவாரம் நிறைந்த நிலையில் சித்தம் இருப்பதை 'கடலில் துரும்பு' 'சித்தசாகரம்' போன்ற உருவகங்களும் உணர்த்துகின்றன.

சித்தத்தை முன்னிலைப்படுத்தி விளித்துப்பேசும் பாங்கு இல்லை என்பதையே எல்லா இலக்கியங்களும் காட்டுகின்றன.

நிறைவுரை

சித்தம் என்ற சொல்லின் அமைப்பு, மனத்திற்கும் இச் சொல்லிற்கும் உள்ள தொடர்பு, அறிவுக்கும் சித்தத்திற்கும் உள்ள பொருத்தங்கள், வேறுபாடுகள் முதலியன விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இச்சொல்லின் தனித் தன்மைகள், உவமை, உருவகங்களால் சித்தம்பற்றி அறியப்படுவன ஆகிய செய்திகளும் ஆராயப்பட்டன.

அகம்

சொல்லமைப்பு

மனத்தின் தன்மையை உணர்த்தும் சொற்களுள் இதுவும் ஒன்று. 'மனம்' என்ற சொல்லைக் காட்டிலும் முன்பே இது வழக்கில் இடம் பெற்றிருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்தில் மூன்று இடத்தில்தான் மனம் என்ற சொல்லைக் காணமுடிகிறது. ஆனால் அகத்திணை என்ற ஓர் இயலையே தொல்காப்பியம் காட்டுகிறது. மேலும் அகநானூறு என்ற இலக்கியத்தின் பெயரும் இச்சொல்லின் தொன்மையை உணர்த்தும். பண்டைத் தமிழர் தம் வாழ்வினை அகம், புறம் என்ற அடிப்படையிலேயே அமைத்திருந்தனர். அகம் என்ற சொல் மனம், வீடு, உள்ளே போன்ற பொருளைத் தந்து நிற்கும். அகவாழ்வு என்பது மனமொன்றிய காதல் வாழ்வினையும், அதன் தொடர்பான நிகழ்ச்சிகளையுமே விளக்கும். அம்மன மொன்றிய காதல் வாழ்வு நடக்கும் இடம் வீடு ஆகையால் மனத்தை உணர்த்திய அச்சொல் வீட்டையும் சேர்த்து உணர்த்திற்று. மனம் என்பது நுண்பொருளாயினும் அது நம் உடம்பின் உள்ளே இருப்பதாக நாம் உணர்வதால் அகம் என்ற சொல் உள், உள்ளே என்ற நிலையிலும் வழங்கலாகியது. நூலின் அகத்தை உணர வேண்டும் என்பது நூலுக்கு உள்ளே உள்ள நுட்பத்தை உணர வேண்டும் என்ற பொருளையே தரும்.

இந்நிலையில் இச்சொல்லின் தொடர்பான சில சிந்தனை களும் எழுகின்றன. அகம் என்பது 'உள்' என்ற பொருளைத் தருவது. 'உள்' என்ற சொல்லுடன் 'அம்' சாரியை சேர்ந்தே

'உளம்' என்ற சொல் தோன்றியிருக்க வேண்டும். அதுவே பின்னர் உள்ளம் என்றாகியிருக்கும். அகம் என்ற சொல்லின் தன்மையைக் குறிப்பிடும்போது பலரும் 'நெகிழ்தல்' என்பதையே குறிப்பிடு கின்றார்கள். மணிவாசகர் தம் திருவாசகத்தில் ஐந்து இடங்களில் அகம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். அதில் நான்கு இடங்களில் அதன் தன்மையைக் குறிப்பிடுகின்றார்.

"பொய்யனேன் அகம் நெகப் புகுந்து"
"அந்த மின்றி அகம் நெகவும்"
"அகநெகா தவரைக் கண்டால்"
"ஆடுவித்தெனது அகம் புகுந்தாண்ட"
"அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி"

அகம், நெகிழும் தன்மை பெற்றிருப்பதனையே நான்கு இடங் களிலும் வலியுறுத்தியுள்ளார். நெகிழும் தன்மை உடையதையே நெஞ்சு என்று குறிப்பிடுகின்றோம். நெகிழ்தல் என்பது நைதல் என்றாகி, நைதல் தன்மையுடையது நைஞ்சு, நெஞ்சு என்றாகி யிருத்தல் வேண்டும். இதற்குரிய சான்றினையும் ஏற்கெனவே 'நெஞ்சம்' என்ற பகுதியில் விளக்கியுள்ளோம்.

மேற்கண்ட இரு சொற்களையும் வைத்து நாம் ஒரு முடிபுக்கு வரஇயலும். இன்று நாம் உள்ளம், நெஞ்சம் என்ற இரு நிலைகளில் தனித்துப் பார்க்கும் தன்மைகள் ஒன்று சேர்ந்த சொல்லையே 'அகம்' என்று அன்று வழங்கியுள்ளார்கள் சங்க இலக்கியங்களில் காதல் வாழ்வினை மட்டுமே இச்சொல் உணர்த்தி நின்றது. பிற்காலத்தில் பக்தியுணர்வு ஓங்கியபோது பக்தியினையும் இச்சொல் குறிக்கும் நிலைமை ஏற்பட்டது. இல்லறத்தில் அகம் ஒன்றிய வாழ்வினைக் காதல் வாழ்வு என்றார்கள்; பக்தியுலகிலும் 'அகத்தை'ப் பயன்படுத்தும் நிலை உருவான பின்னர் அதைப் பேரின்பக் காதலென்றும், இல்லறம் குறிப்பது சிற்றின்பக் காதலென்றும் பேசும் நிலை உருவாகியது.

இலக்கியங்களில் அகம் என்ற சொல்

சங்க காலத்திலிருந்தே இலக்கிய வாழ்வு பெற்றுவரும் இச்சொல் காலப்போக்கில் பெற்ற மாற்றங்களையும், வளர்ச்சி களையும் அறிவதற்கு இலக்கியங்களில் அவை பயன்படுத்தப் பட்டுள்ள முறைகளைக் காண்போம்.

இலக்கியம்	பயன்படுத்தப்பட்ட இடங்கள்
நற்றிணை	—
புறநானூறு	1
திருநாவுக்கரசர் தேவாரம்	3
திருவாசகம்	5
திருமந்திரம்	18
நாலாயிரத் திவ்ய பிரபந்தம்	9
கம்பராமாயணம்	25
தாயுமானவர்	12
திருவருட்பா	38
பாரதியார் கவிதைகள்	16

நற்றிணை, அகவாழ்வு பற்றிப் பேசும் இலக்கியமாயினும் அகத்தின் தன்மைகள் உள்ளம், நெஞ்சம் என்ற சொற்களின் மூலமாகவே விளக்கப்பட்டுள்ளன. புறநானூறு, புற வாழ்வு பற்றிப் பேசும் இலக்கியம். அதனால் அதில் அகம் என்ற சொல் மிகுதியும் இடம் பெற வாய்ப்பில்லை.

"குறியாது ஆதல் நின் அகத்து அடக்கி"

என்ற ஓர் இடத்தில் மட்டும் அகம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இறைவன் எழுந்தருளும் கோயில் வேறெங்கும் இல்லை; உண்மையான தொண்டர்கள் தம்முடைய அகமே யென்கிறார் திருநாவுக்கரசர்.

"தொண்டர் அகமலாற் கோயிலில்லை"

என்ற பாடலில் அகம் என்று அவர் குறிப்பிடுவது நெஞ்சம், அல்லது உள்ளம் என்று கருதினும் வேறோர் இடத்தில் "தொண்டர் அழுத அகம் புகுந்து நின்றார்" என்று அவரே குறிப்பிடுவதால் நெஞ்சத்தையே நினைக்க வேண்டியுள்ளது. மனம் நைந்த நிலையில்தான் அழுகை யெழும்; அப்படி நைந்த நிலையை நெஞ்சம் என்று தானே கருத வேண்டியுள்ளது!

திருவாசகத்தில் அகம் என்ற சொல்லை நெஞ்சம் என்ற பொருளில் தான் கையாண்டுள்ளார் என்பது ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. இச்சொல், ஆய்விற்கெடுத்துக் கொண்ட பத்து நூல்களில் தேவாரம், திருவாசகத்தில் தான் குறைந்த

எண்ணிக்கையில் காணப்படுகிறது. மிகுதியும் இச்சொல்லை அவர்கள் பயன்படுத்தாமைக்கு இரண்டு காரணங்களைக் கருதலாம்.

1. அக்காலத்தில் அகம் என்ற சொல் இல்வாழ்வு பற்றிய இலக்கியங்களிலேயே பயன்படுத்து தற்குரியது என்று கருதிப் பக்தி இலக்கியத்தில் மிகுதியும் பயன்படுத்தாதிருந்திருக்கலாம்.

2. அகம் என்ற சொல்லால் உணர்த்த விரும்பியதை உள்ளம், நெஞ்சம் போன்ற சொற்களாலேயே உணர்த்தியிருக்கலாம்.

இறைவன் அருளை நாம் எய்த வேண்டுமென்றால் நம் அகம் குழைய வேண்டுமாம்; அகம் குழையாதவர்களுக்கு இறைவன் அருள் கிட்டாது என்று கூறுகிறது திருமந்திரம். அகம் எப்போது குழையும்? அன்போடு இறைவனை நினைந்து உருக வேண்டுமாம்!

"அன்போடுருகி அகம் குழைவார்க்கன்றி"

என்பது திருமந்திரம். அகம் குழைதல் என்று இங்குக் குறிப்பிடப் படுவது மனம் நெகிழும் நிலையாகிய நெஞ்சத்தையே குறிக்கும். அறிவில்லாதவர்கள்தாம் இறைவனை அங்கு மிங்கும் தேடிக் கொண்டிருப்பார்கள்; அவர்களால் இறைவனைப் பற்றி அறியவும் முடியாது; அவனை அடையவும் முடியாது; ஆனால் அறிவுடையோர் தங்கள் அகத்திற்குள்ளாகவே இறைவனைக் காண முயல்வர்; இறைவனும் அத்தகையோர் அகத்தில் அடங்கி நிற்பான் என்பதை,

"அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே"

என்று கூறுகிறது திருமந்திரம்.

பக்தி உலகில் எதை அகமென்பர்? அந்த அகம் எப்படி இருக்கும்? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுகிறது தாயுமானவர் பாடல்கள்.

"நினைவொன்று நினையாமல் நிற்கின் அகமென்பர்"

என்ற பாடலில், எவ்வித நினைவுகளுமே இல்லாத மௌன நிலையில் மனம் இருக்கும்போது அதை அகமென்று குறிப்பிடு கின்றார். அந்த நிலையில் தானே இறைவன் எழுந்தருளுகின்றான்! எனவே, இறைவன் எழுந்தருளும்போது மௌன நிலையில் மனம்

இருக்கும்; அந்த நிலையே அகம் எனப்படும். அந்த அகம் எப்படிப்பட்டது என்பதை,

"அந்தகாரத்தையோர் அகமாக்கி"

என்று குறிப்பிடுகிறார் அவர். அந்தகாரத்தையே அகமாக இறைவன் படைத்துள்ளான் என்பது அவரது கருத்து. அந்தகாரமாகிய அகம் பொற்கோயிலாக மாறச் செய்பவனும் அந்த இறைவனே! அவன் அகத்திலும், அதனுள் உள்ள அணுவிலும் கலந்துள்ளான்; அதுமட்டுமல்ல; அண்டமெலாம் தானாக நிற்பவனும் அவனே! அவன் அகத்தில் திகழும்போது அகமெலாம் குழைந்து ஆனந்த மயமாக விளங்கும் என்றெல்லாம் அகத்தைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் குறிப்பிடுகிறார் தாயுமானவர்.

"தொண்டர் தங்கள் அகமேபொற் கோயில்"

"அகத் தூடணு வணுவாய் அண்டமெலாம் தானாய்"

"அகமெலாம் குழைந்தானந்த மாயினை"

என்பது அவர் தம் திருப் பாடல்கள்.

நம் அகத்திற்குள்ளே உள்ளான் இறைவன்; ஆனால் அவன் அகத்திற்குள்ளே இப்பூமியும் விரிந்த வானமும் அடங்கியுள்ளது என்கிறது நாலாயிரத் திவ்ய பிரபந்தம்.

"புவியும் இரு விசும்பும் நின்னகத்த"

என்ற இப்பாடலில் அகம் என்ற சொல் இறைவனது மனத்தையும் குறிக்கும் நிலையில் பயன் படுத்தப்பட்டுள்ளது. அகத்தின் தன்மைகளாக மகிழ்தல், குளிர்தல், குழைதல், கரைதல் போன்ற நிலைகளைத் திவ்ய பிரபந்தப் பாடல்கள் உணர்த்துகின்றன.

'அகமகிழும் தொண்டர்'

"அகங்குளிர உண்ணென்றாள்"

"அகங் குழைந்தார்க்கு"

"ஆடியாடி அகங்கரைந்து"

இத்தன்மைகளெல்லாம் நெஞ்சத்தின் தன்மைகளே. எனவே நெஞ்சம் என்ற பொருளில்தான் அகம் என்ற சொல்லைத் திவ்ய பிரபந்தம் பயன்படுத்தியுள்ளது.

தூய அன்பாகிய காதலும், தொல்லைகளைத் தோற்றுவிக்கும் ஆசைகளும் தோன்றும் இடம் அகமே என்று கூறுகிறார் கம்பர்.

"அகனமர் காதல் ஐய"

"ஆசைநோய் அகத்துப் பொங்க"

என்பது அவரது பாடல்கள். காதல், தூய தன்மை; எனவே, 'அகன் அமர் காதல்' என்கிறார். ஆசை தீய தன்மை; அது மென் மேலும் பொங்கும் தன்மையுடையது; விளைவும் மோசமான தாகவே இருக்கும்; எனவேதான், 'அகத்துப் பொங்க' என்று அதனைக் குறிப்பிடுகிறார். அகத்தின் பல்வேறு தன்மைகளாகிய வருந்தல், மலர்தல், நினைதல், திகைத்தல், கரிதல், மகிழ்தல், மெலிதல், குளிர்தல் போன்றனவற்றையும் கம்பர் காட்டி யுள்ளார்.

'அருந்துயர் வருத்தும் என் அகம்'

'அகம் மலர்ந்து பொலிந்தன'

'அகத்துள் உன்னினாள்'

'அகம் திகைத்து நின்றாள்'

'அகம் கரிந்தாய்'

'கேட்டலாகு மென்றக மகிழ்ந்து'

'அகம் மெலிந்தான்'

'அகம் குளிர்ந்தான்'

என்பன அத்தன்மைகளை உணர்த்தும் பாடல் வரிகள்.

'அகம் உறத் தழுவினான்'

என்று ஓரிடத்தில் குறிப்பிடும் இவர், அகம் என்பது மார்பைக் குறிக்குமாறும் அமைத்துள்ளார்.

இறைவன் நம் அகத்திலே மட்டும் நின்று நம்மை ஆட் கொள்ளவில்லை; புறத்திலும் நின்று காத்து வருகின்றான். இந்த இருநிலைகளுக்கும் அப்பாற்பட்ட மூன்றாம் நிலையாகிய 'அகப்புறத்'திலும் நின்றருள்புரிந்து வருகின்றான்.

"அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் விளங்கும் புண்ணியனே"

என்று பாடுகின்றார். இராமலிங்க அடிகளார். அறவுணர்வுடைய

சான்றோர்களது அகம்தான் கரைந்துருகும்; நெஞ்சில் அறவுணர்வு இன்றேல் நாவில் வரும் சொற்களிலும் அறமிருக்க மாட்டாதே! இந்நுட்பத்தை,

''அறங்கரைந்த நாவினர்க ளகம்கரைந்து''

என்கின்றார் அவர். அகத்தின் தன்மைகளாக, கருணை நிறைதல், மகிழ்தல், குளிர்தல், கரைதல், வஞ்சகமுடைத்தல், களித்தல் போன்ற தன்மைகளைக் குறிப்பிடுகின்றார் வள்ளலார்.

''கருணை நிறைந்தகம் புறமும் துளும்பிவழிந்து''
''இருவர்க்கு அகமகிழ்வான்''
''அன்னை யப்பனு நீயென மகிழ்ந்தே அகங்குளிர்ந்தே''
''அறங்கரைந்த நாவினர்களகம் கரைந்து''
''அகத்திலே வஞ்சம் வைத்திருக்கின்றார்''
''திருநடனங் கண்டகங் களிக்கும்போது''

என்பன அத்தன்மைகளை எடுத்துக் காட்டும் அருட்பா வரிகள். வஞ்சமுடைய அகம் இறைவன் அருளால் நல்லகமாக ஆகும் என்பது அவர்தம் முடிபு.

நம்மைச் சோதிப்பதற்காக இறைவன் நம் அகத்தில் பற்றுக்களை உண்டாக்குவான்; அதன் விளைவால் ஏற்படும் ஆசைகளின் வாய்ப்பட்டோமென்றால் நாம் ஆராத்துயரில் மூழ்க வேண்டிவரும்; அப்பற்றுக்களை நாம் வென்று விட்டோமென்றால் நிலைத்த இன்பமாகிய இறைவன் திருவடிப்பேற்றைப் பெறலாம். தம்மையும் கண்ணனாகிய தெய்வம் அப்படிச் செய்தது என்பதை,

''பல்வகையால் அகப்பற்றுறச் செய்தான்''

என்கிறார் பாரதியார். பற்றுக்கள் தோன்றும் இடமே அகம் தான்; எனவே தான் அகப்பற்று என்று கூறுகிறோம். தொல்லைகளைத் தந்து கொண்டிருக்கும் அகத்தைப் பேய் என்று உருவகப் படுத்துகிறார் பாரதியார். பேய் ஆட்டிப் படைப்பது போலத் தீய அகமும் ஆட்டிப் படைக்கும் என்ற உண்மையை "தொல்லை தரும் அகப்பேய்" என்ற அவர் பாடல் உணர்த்தும். அப்பேயின் தொல்லைகளிலிருந்து மீட்சி பெற்றுச் சிறப்படைய வேண்டுமென்றால் நம் அகத்தைச் சக்திக்கே உடைமையாக்கிவிட வேண்

டுப்; இறைவிக்கே அது உடைமையாகி விட்டால் தீய சக்திகள் எதுவுமே அதை நெருங்க முடியாதல்லவா!

"அகம் சக்தி தனக்கே உடைமையாக்கு"

என்ற அவர் கட்டளை எல்லோர்க்கும் சேர்த்தேயாகும். புறத்திலுள்ள செவிகளை, கண்களைத்தான் நாம் அறிவோம்; ஆனால் பாரதியார் 'உட்செவி', 'அகக்கண்' ஆகியனவற்றையும் குறிப்பிட்டுள்ளார். புறஉலகில் நிகழ்வனவற்றைக் கேட்கவும் காணவும் நமது புறத்துறுப்புக்களாகிய காதுகள், கண்கள் பயன்படுகின்றன. அதுபோல நம் பார்வைக்குப் புலப்படாத, பருப்பொருள் தன்மையற்ற ஓர் உலகம் உண்டு. அவ்வுலகின் சிறப்பைக் கொண்டே புறவுலகின் சிறப்பு அமைகிறது. அவ்வுலகம் நம் மனத்தோடும், இறைவனோடும் தொடர்புடைய உலகம். அவ்வுலகில் நிகழ்வனவற்றை மனத்திற்குத் தெரிவிக்கும் அகத்துறுப்புக்களையே 'அகக்கண்','உட்செவி' என்று குறிப்பிடுகிறார் பாரதியார். 'அகக்கண்' என்று அவர் குறிப்பது, அகத்தையே கண்ணாக உருவகம் செய்தார் என்பது சிந்தனைக் குரியது. அப்படி யென்றால் 'உட்செவி' என்பது எது என்ற ஐயம் எழும். மனம் எப்படி ஒரு நுண்பொருளோ, அதே போன்றுதான் அகக்கண்ணும் உட்செவியும். அதன் தன்மை, செயற்பாடுகள் நுண்ணறிவுடையோரால் உணரப்படுமே தவிர அதற்கு வடிவம் கொடுத்து விளக்க இயலாது.

பதைக்கும் தன்மையும் அகத்திற்கு உண்டென்பதை "அகம் பதைத்துரைக்கும்" என்ற அவர் பாடலால் அறிய முடிகிறது.

நிறைவுரை

அகம் என்ற சொல்லின் அமைப்பு, நெஞ்சம், உள்ளம் போன்ற சொற்களுக்கும் இதற்கும் உள்ள பொருத்தம், பக்தி இலக்கியங்களில் இச்சொல் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் பட்டமைக்கான காரணங்கள் ஆகியன ஆராயப்பட்டன. இலக்கியங்களில் அகத்தின் தன்மைகளைப் புலவர்கள் எவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார்கள் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. 'உட்செவி' 'அகக்கண்' என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இதயம்

சொல்லமைப்பு

மனத்தின் தன்மையை உணர்த்தும் சொற்களில் இதுவும் ஒன்று. மனம் என்ற சொல்லையே நேரடியாக இது குறிப்ப தாகக் கொள்ள முடியாது. மனத்தின் மென்மையான, இதமான தன்மைய இச்சொல் உணர்த்துவதாகக் கொள்ள இடமுண்டு. இதம் என்ற சொல்லிலிருந்தே இதயம் என்ற சொல் பிறந்திருக்க இடமுண்டு. ஏனெனில் இதயத்தைப் பற்றிப் பக்தி இலக்கியங் களிலும், ஏனைய நவீனம், சிறுகதைகளிலும் குறிப்பிடும் போதெல்லாம் மென்மையான, இதமான தன்மையை அது பெற் றிருப்பதாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

அதன் தன்மையைப் புலப்படுத்தும் வகையில் கவிஞர்கள் அதை உருவகம் செய்துள்ள போதும்கூட மென்மைத் தன்மை யோடுதான் உருவகப் படுத்தியுள்ளனர்.

"என் னிதய மலர்மிசை நின்றெழுந்தருளி"

"என்னிதயக் கமலத்தே இருந்தருளும் தெய்வம்"

என்று இதயத்தை மலராகவும், கமலமாகவும் உருவகம் செய்துள் ளார் இராமலிங்க அடிகளார். அவை இதயத்தின் மென்மைத் தன்மயினையே உணர்த்தும்.

"என்னுடைய இதயமானது இரும்போ, கல்லோ மரமோ" என்று வியப்படையும் விதத்தில் பாடியுள்ளார் தாயுமானவர்.

"இரும்போ, கல்லோ, மரமோ என் இதயம்"

என்று வன்மையான பொருட்களை இதயத்தோடு இணைத்து அவர் பேசியிருப்பது, இயல்பான நிலையில் அவர் குறிப்பிட்ட

தாகக் கொள்ள முடியாது. இயல்பிற்கு மாறுபட்ட நிலையில் அவர் இதயம் இருப்பதாக நினைந்து வருந்தியபோது மென்மைக்கு மாறுபட்ட பொருட்களின் தன்மையோடு தம் இதயத்தையும் இணைத்துப் பேசியுள்ளார். அந்த நிலையிலும் கூட வியப்புக் குறியோடுதான் நிறுத்தியுள்ளார். எனவே இயல்பான நிலையில் இதயம் மென்மைத் தன்மையுடையதே என்பது தெளிவாகிறது.

பக்தி இலக்கியங்களில் இதயம்

இதயம் என்ற சொல் காலத்தால் பிந்திய நிலையில்தான் இலக்கிய வழக்கைப் பெற்றுள்ளதை அறிகிறோம். சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் இச்சொல் இடம் பெறவில்லை. அடுத்த நிலையில் நாம் காணும் திருநாவுக்கரசர் தேவாரம், திருவாசகம் ஆகிய பக்தி இலக்கியங்களிலும் கூட இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. அவைகளுக்குப் பின் வந்த திருமந்திரத்தில்தான் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து எல்லா இலக்கியங்களிலும் இச்சொல் காணப்படுகிறது. அதிலும் கூடக் குறிப்பாக, மனத்தில் இறைவன் இருக்கும் நிலையைப்பற்றிப் பேசுமிடங்களில் தான் தொடக்கத்தில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'சித்தம்' என்ற சொல்லைப் போன்ற தனித்தன்மையினையே இதுவும் முன்பு பெற்றிருந்தது. ஆனால் பின்பு அந்நிலை மாறி மனத்தின் மென்மைத் தன்மையினை உணர்த்தும் இடங்களிலெல்லாம் இச்சொல்லைப் பயன்படுத்தும் நிலை உருவாகியது. அதனால் பக்தி இலக்கியத்திற்கு மட்டும் இச்சொல் என்ற நிலை மாறி எல்லா இலக்கியத்திற்கும், எல்லா வகையான உரைநடைப் படைப்புகளுக்கும் பொதுவான ஒரு சொல்லாகப் பின்பு ஆகியது.

இலக்கியங்களில் இச்சொல் எந்த அளவிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதைக் கொண்டு அதற்கான காரணங்களையும், அது தொடர்பான பிற செய்திகளையும் காணலாம்.

இலக்கியம்	பயன்படுத்தப்பட்ட இடங்கள்
திருமந்திரம்	12
நாலாயிரத் திவ்யபிரபந்தம்	1
கம்பராமாயணம்	4
தாயுமானவர் பாடல்கள்	10
திருவருட்பா	8
பாரதியார் கவிதைகள்	11

ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் திருமந்திரத்திலேயே இச்சொல் அதிக இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவேயன்றி இச்சொல் தொடர்பான பல தத்துவ விளக்கங்களையும் இந்நூலில் காணமுடிகிறது. 'இதயம்' என்பது வேறு; 'இருதயம்' என்பது வேறு; நம்முடைய உயிரானது இருதயத்திலிருந்துதான் எழுகின்றது என்ற உண்மையை,

"இருதயம் தன்னில் எழுந்த பிராணன்"

என்று திருமந்திரம் உணர்த்துகிறது. இதயம் என்ற சொல் மனத்தின் மென்மைத் தன்மையைக் குறிப்பதோடன்றி நாம் உயிர்வாழத் துணைசெய்யும் இருதயத்தையும் குறிக்கும் என்று சிலரும் உணர்ந்து அப்படியே பயன்படுத்தியும் உள்ளனர். கம்பரும் கூடத் தமது இராமாயணத்தில்,

"ஏற்றவள் இருதயத்திருக்கவே கொலாம்?"

என்று பாடியுள்ளார். இங்கு இதயத்தையே இருதயம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் திருமந்திரத்தில் இரண்டிற்குமுள்ள வேறுபாடு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இருள், வெளி என்ற இரண்டு நிலைகள் இருப்பதைப் போன்று இதயத்திலும் இரண்டு நிலைகள் உள்ளனவாம். அவைகள் மருள், அறியாமை என்று குறிப்பிடுகிறது திருமந்திரம்.

"இருளும் வெளியும்போல் இரண்டாம்; இதய
மருள், அறியாமை"

என்பது அம்மந்திரம். இறையடியார்களை இறைவனைப் போலவே எண்ணிப் போற்றுதல் மரபு. அவர்கள் மனம் கலங்கும் நிலையை எவரும் உருவாக்க மாட்டார். அப்படி உருவாக்கினால் தேசமும், நாடும் அதற்குள்ள சிறப்பும் சேர்ந்து அழிந்துவிடும் என்ற எச்சரிக்கையை,

"ஈசனடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்"

என்று கூறுகிறது திருமந்திரம்.

தன்னுடைய இதயம் களிப்பில் மூழ்கி, ஒடுங்காது செயல்பட்டுக் கொண்டிருப்பதால் "என்னிதயம் எனை வாட்டுதே" என்று வருந்துகின்றார் தாயுமானவர். அதனால்தான் அவர் தம் இதயத்தை இரும்போ, கல்லோ, மரமோ என்று கேட்கின்

றார். "என் இதயத்துள்ளே தங்குந்துயரம்" என்றும் வேதனைப் படுகின்றார். அந்நிலையை மாற்றி இறைவன் அருள்புரிய வேண்டும் என்றும் வேண்டுகிறார் அவர்.

திவ்யமான நாலாயிரம் அருட்பாக்களைப் பாடிய ஆழ்வார்கள் தம் பாடலில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே இதயம் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

"கண்ணா நின்பேரே இதயம் இருந்தலையே யேத்தில்"

என்பது அப்பாடல் வரி.

ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாடிய காலத்தில் இச்சொல் அதிக அளவு வழக்கில் இல்லாமல் இருந்திருக்கலாம்; அல்லது இச்சொல்லாலேயே உணர்த்தியாக வேண்டும் என்ற அவசியம் இல்லாதிருந்திருக்கலாம். ஏனெனில் திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள் ஆகிய இரு நூல்களும் தத்துவ நூல்கள். அதனால் இதயத்தைப் பற்றியும் அதன் தன்மைகளைப் பற்றியும் பேச வேண்டிய அவசியம் அவைகளுக்குண்டு; திவ்ய பிரபந்தத்திற்கோ ஏனைய நூல்களுக்கோ அந்த நிலை இல்லை.

கண்ணால் காணப்படும் ஒரு பொருள் நம் இதயம் கவரும் நிலையையும் அடையுமென்றால் அதை நாம் என்றுமே மறக்க முடியாதவாறு இதயத்தில் பதிந்து விடுகிறதே! இத்தன்மையை,

"என் கண் துணை கொண்டு இதயத்து எழுதி"

என்று குறிப்பிடுகின்றார் கம்பர். இதயம் விரும்புமாறு நாம் காணக்கூடிய பொருள் என்றுமே அகலாதவாறு இதயத்தில் பதிந்து விடுவது உண்மையே! ஆனால் அதிலும் இரண்டு முறை உண்டே! நாம் யாரை இதயத்தில் இடம் பெறச் செய்கின்றோமே அவர்களும் நம்மை விரும்பினால் அது 'இதயத்து எழுதி' என்ற தன்மையில் அடங்கும்; விரும்பாத நிலை ஏற்படுமென்றால், "இதயமாம் சிறை" என்று அருமையாகக் குறிப்பிடுகின்றார் கம்பர். சிறையில் தள்ளுபவர் வேண்டுமானால் விரும்பலாம்; தள்ளப்படுபவர் விரும்பமாட்டார் அல்லவா! 'எண்ணுதல்' என்ற தன்மையும் இதயத்திற்குண்டு என்பதை, "இதயத்தால் எண்ணி" என்று குறிப்பிடுகின்றார் கம்பர். இறைவன் தன் இதயத்தே எழுந்தருளியுள்ளமையை உணர்ந்து பன்முறையும் அதை உறுதிப்படுத்துகின்றார் இராமலிங்க அடிகளார்.

"என்னிதயத்திலிருக்கின்ற குருவே"

என்று குறிப்பிடும் அவர், இறைவனை, 'துய்யனே' என்றும் 'பெரு வாழ்வே' என்றும் 'தெய்வம்' என்றும் குறிப்பிடுகின்றார். இறைவன் எழுந்தருளியுள்ளமையால்தான் தமது இதயம் மலராக இருப்பதாகக் கூறுகிறார் அவர். தொண்டர்தம் இதயத்தில் கற்கண்டாக இறைவன் இனித்திருப்பான் என்றும் குறிப்பிடுகின்றார் வள்ளலார்.

இதயம் என்ற சொல்லைத் தெய்வ நிலையோடன்றி மனித நிலைக்கும் பயன்படுத்தியுள்ளார் பாரதியார்.

"எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கி"

"பாரத நாட்டிற் கிரங்கி இதயம் நைவான்"

என்ற இடங்களில் மனித மனநிலையினையே குறிப்பிட்டுள்ளார். எனினும் இவரும் இதயத்தை இறைவன் உறைவிடமாக்க வேண்டும் என்று விருப்பியவர் என்பதையும் இவர் பாடல்களால் அறிய முடிகிறது.

"இதயத்துள்ளே இலங்கு மஹாசக்தி"
"இதயத்தினிலே அமர்வாய் கண்ணா"

என்பன அக்கருத்தை உணர்த்தும் பாடல்கள்.

நிறைவுரை

இதயம் என்ற சொல்லின் அமைப்பு, பக்தி இலக்கியங்களில் மட்டுமே அச்சொல் இடம்பெற்றமைக்குரிய காரணங்கள், இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்ட முறைகள் ஆகியன ஆராயப்பட்டன. இதயத்தை உணர்த்தும் உருவகங்கள் பற்றியும் அதன் தன்மைகளைப் பற்றியும் விளக்கப்பட்டன. காலப் போக்கில் இச்சொல் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற செய்தியும் ஆராயப்பட்டுள்ளது.

மனம்

சொல்லமைப்பு

மனித வாழ்விற்கு அடிப்படையாக இருப்பதோடன்றி, மனிதனையே இயக்கிக்கொண்டிருக்கும் பேராற்றலே மனம். இச்சொல் நிலைபேறுடைய மனிதப் பிறவியின் தன்மையை உணர்த்தும் பெருமைமிக்க சொல்லாகும். மனம் என்பதைப் பிரித்தால் மன்+அம் என்று அமையும். 'மன்' என்பது 'நிலை பேறு' என்ற பொருளைத் தரும். இக்கருத்தைப் பல இலக்கியச் சான்றுகள் கொண்டு நிறுவமுடியும்.

"மன்னா உலகத்து மன்னுதல் வேண்டி"

என்ற புறநானூற்றுப் பாடல் 'மன்னுதல்' என்றால் நிலை பெறுதல் என்ற பொருளையே உணர்த்துகிறது.

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்ற திருக்குறளில் 'மன்னுயிர்' என்ற சொல் 'நிலைபெற்ற உயிர்' என்ற தன்மையினையே உணர்த்தி நிற்கிறது.

உலகில் தோன்றும் உயிரினங்கள் அனைத்திலும் நிலை பேற்றை அடையும் தகுதிபெற்றது மனித உயிர் ஒன்றுமட்டுமே என்பது அறிஞர்க்கெல்லாம் ஒப்பமுடிந்த கருத்தாகும். மனிதன் மட்டுமே எப்படி அத்தகுதியைப் பெறுகிறான்? இக்கேள்விக்குரிய பதிலை நாம் தரத்துணை செய்வதும் மனமே மனத்தின் மாண்பினால்தான் அந்தப் பெருமையை நாம் பெறுகிறோம். 'நினைத்தல்'

'சிந்தித்தல்' போன்ற செயல்களெல்லாம் மனத்தில் நிகழ்வனவே. நம்மைப்பற்றியும், நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும், அனைத்திற்கும் மேலாக நின்று நம்மை இயக்கும் இறைவனைப் பற்றியும் நாம் நினைத்துப் பார்க்கும்போதுதானே நம் வாழ்வின் தன்மையே நமக்குப் புரிகிறது. நம் உடம்பிற்குள்ளே காற்றாக நின்று நம்மை இயக்கும் உயிர், சக்தியாக நின்று இயக்கும் ஆற்றல், நம்மை ஆட்டிவைக்கும் மாயைகள், வினைகள் இவை களைப் பற்றியெல்லாம் சிந்திக்கும்போதுதானே நம் வாழ்வின் நோக்கம், பிறவிப்பயன் புரிகிறது. இவற்றுக்கெல்லாம் காரண மாக இருப்பதுதான் நம் மனம். இது மனிதப் பிறவிக்குமட்டுமே தரப்பட்ட தனிச்சொத்து. அதனால்தான் உருவத்தில் சிறிய மனிதன், தன்னைக்காட்டிலும் உருவத்தாலும், வலிமையாலும் மிகுந்த விலங்கினங்களையெல்லாம் ஆட்டிப்படைக்கின்றான்; ஆற்றல் மிகுந்த சக்திகளான நீர், நெருப்பு இவைகளைக்கூடக் கட்டுப்படுத்தக் கற்றுள்ளான்.

"மனத்தால் நினைந்துருகி"

என்கிறது திருவாசகம்

"சிந்தித் தெழு மனமே"

என்று கட்டளை இடுகிறார் திருநாவுக்கரசர். எனவே, நினைதல், சிந்தித்தல் போன்ற செயல்கள் மனத்தில் நிகழ்வனவே என்பது விளங்கும். அப்படி இறைவனையும் யார் நினைக்கின்றார்களோ அவர்கள் மனத்தையே கோயிலாகக் கொண்டு இறைவன் குடியிருப்பான் என்ற உண்மையை,

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

என்கிறார் திருநாவுக்கரசர். மணிவாசகரும்,

"சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனை"

என்று, நினைப்பவர் மனத்தில் அமுதமாக இறைவன் இனிக்கும் தன்மையை விளக்குகிறார். இச்சொல் ஈறுதிரிந்து 'மனன்' என்றும் வழங்கப்படும்.

இனி, 'மனம்' என்ற சொல்லை எந்த அளவிற்கு இலக்கியங் களில் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைக்கொண்டு, அதற்கான காரணங்களை ஆய்வோம்.

இலக்கியம்	கையாளப்பெற்ற இடங்கள்
1. நற்றிணை	4
2. புறநானூறு	1
3. திருநாவுக்கரசர் தேவாரம்	132
4. திருவாசகம்	44
5. திருமந்திரம்	107
6. நாலாயிரத்திவ்ய பிரபந்தம்	236
7. கம்பராமாயணம்	314
8. தாயுமானவர் பாடல்கள்	132
9. திருவருட்பா	542
10. பாரதியார் கவிதைகள்	138

சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு ஆகிய இரண்டிலும் 'மனம்' என்ற சொல் சிறு வழக்காகவே காணப்படுகிறது. புறநானூற்றில் ஒரே இடத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது.

"உயவொடு வருந்தும் மனனே"

என்பதே அப்பாடல்வரி மிகுந்த வருத்தம் மனத்தினால் நிகழக் கூடியது என்பதை அப்பாடல் உணர்த்துகிறது. அதேபோன்று 'துனிகூர் மனம்','புன்புனம்' போன்ற நிலைகளையே நற்றிணைப் பாடல்களும் உணர்த்துகின்றன. ஒரு வேளை மிகுந்த துன்பமான நிலைகளைக் குறிப்பதற்கு மட்டுமே மனத்தைப் பயன்படுத்துவது என்று நினைத்தார்களோ என்னவோ! மேலும் மனத்தைப் பற்றிய தெளிவை அவர்கள் பெற்றிருந்தாலும் வளமோடும் சிறப்போடும் வாழ்ந்த அக்கால மக்கள் வாழ்வு உணர்ச்சி மயமானதாகவே பெரும்பாலும் அமைந்திருந்ததால் 'நெஞ்சம்', 'உள்ளம்' போன்ற சொற்களே அவர்கள் நிலைகளை விளக்க வல்லனவைகளாகக் காணப்படுகின்றன. 'மனம்' உடலால் மட்டுமன்றி ஆன்மீக அடிப்படையிலும் நிறைவாக அமையும் வாழ்வைப் பற்றிப் பேசும் நிலையில் பயன்படுத்தப்படவேண்டிய ஒரு சொல். எனவே தத்துவ உலகோடு தொடர்புடைய இச் சொல், தத்துவங்கள் சமய உணர்வுகள் விரிவாக வளர்ச்சிபெற்ற பிற்கால இலக்கியங்களிலேயே பெரிதும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

"மனத்தினுள் விளக் கொன்றேற்றி உன்னுவார்
உள்ளத்துள்ளார்"

என்று கூறும் திருநாவுக்கரசர் உள்ளத்திலே இறைவன் உறைய வேண்டுமானால் மனத்திலே விளக்கேற்றி அவனை நினைந்து தொழவேண்டும் என்று கூறுகிறார். 'நெஞ்சம்' என்ற சொல்லிற்கு அடுத்த நிலையில் அதிகமான இடங்களில் 'மனம்' என்ற சொல்லை இவர் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்.

"காலையும் மாலையும் கை தொழுவார் மனம் ஆலயம்"

என்று கூறும் இவர்,

"பெருமானை என் மனத்தே வைத்தேனே"

என்று தன் நிலையைத் தெளிவுபடுத்துகிறார்.

"கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை"

என்று தன்னை இழிந்த நிலையில் வைத்துப்பேசி இறைவன் அருள்வேண்டித் தொழுத மணிவாசகர், தம் திருவாசகத்தில் 'உள்ளம்' என்ற சொல்லிற்கு அடுத்த நிலையில் 'மனம்' என்ற சொல்லையே மிகுதியும் பயன்படுத்தியுள்ளார். வறியவன் ஒருவன் தன் துயரைப் போக்குதற்குப் பொருள் உள்ளவர்களிடம் சென்று இரந்து நிற்பதுபோல இறைவன் அருள்வேண்டி அவனிடம் நாமும் இரந்து நிற்கவேண்டுமாம்; அப்போது தான் அவன் அருளைப் பெறமுடியுமாம்.

"இரந்திரந் துருக என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே"

என்பது திருவாசகம். பன்முறையும் தொடர்ந்து அவனை நாம் இரந்து நிற்கவேண்டும் என்ற குறிப்பை "இரந்திரந்துருக" என்ற சொற்கள் எடுத்துக் காட்டும்.

தத்துவ விளக்கங்களின் சாரமாக அமைந்த நூல் திருமந்திரம். மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற அனைத்தையும் நுட்பமான விளக்கங்களோடு தெளிவுபடுத்தியிருப்பதை அதில் காணலாம்.

"கோணலில்லாத குணத்தடியார் மனத்து"

இறைவன் கோயில் கொண்டிருப்பானாம்; குணங்கள் நேரியன வாக அமையவேண்டும்; கோணல்களாக மாறிவிடுமென்றால்

அவர்கள் கொடியவர்களாகி விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் மனத்தில் இறைவன் குடிபுகமாட்டான் என்பதை அருமையாகக் காட்டியுள்ளார் திருமூலர்.

கோணலில்லாத மனம் அமையவேண்டுமென்றால் மெய்ந் நெறியைப் புகட்டும் கல்வியை நாம் கற்பது அவசியம். அத்தகைய கல்வியால் நம் மனம் சிறப்படையவில்லையென்றால் தூய, தெளிந்த நீரோடையில் இறங்குவதற்குப் பதிலாகப் பாசி படிந்த குளத்தில் வீழ்ந்ததைப்போலவே நம் வாழ்வு அமையும். தெளிந்த நீரில் மூழ்கினால் நம் உடல் அழுக்கு மாறும்; வெம்மை தீரும்; புத்துணர்ச்சியும் உடம்பில் சேரும். பாசி படிந்த குளத்தில் வீழ்ந்தால், கைகால்கள் முறிவதுடன் மேலும் அழுக்கையே அடைய நேரும். இச்செய்தியை,

"பாசிக் குளத்தில் வீழ் கல்லாமனம்"

என்று உணர்த்துகிறார் திருமூலர். அவர் நெஞ்சம், உள்ளம், சிந்தை ஆகிய சொற்களைக் காட்டிலும் 'மனம்' என்ற சொல்லையே தம் பாடல்களில் அதிக இடங்களில் கையாண்டுள்ளார்.

திருமூலரைப் போலவே தாயுமானவரும் தாம் பாடிய பாடல் களில் 'மனம்' என்ற சொல்லையே அதிகம் கையாண்டுள்ளார்.

"வாக்கற்று மனமுமற்று மன்னுபரி பூரண
சுகவாரி தன்னிலே வாய்மடுத்து"

இன்பம் காணவேண்டும் என்று எண்ணிப் பாடியவர் இவர். திருமந்திரத்தைப் போலவே இவரது பாடல்களும் பெரும்பாலும் தத்துவ விளக்கங்களாகவே அமைந்துள்ளன. மனத்தின் தன்மை, அது தொழிற்படும் நிலைகள், மனத்திற்கும் புலன்களுக்கும் உள்ள தொடர்பு ஆகிய அனைத்தையும் பற்றிய விரிவான தத்துவ விளக்கங்களை இவரது பாடல்களில் காணமுடிகிறது.

"என் மனக் கல்லை அனல் மெழுகாக்கி"

இறைவன் ஆட்கொண்டான் என்கிறார் இவர். கல்லும், மெழுகும் காண்பதற்கு வடிவ அமைப்பில் ஒன்று போலத் தோன்றிடினும் இரண்டும் தன்மையால் முரண்பாடுடையன எந்நிலையிலும் இளகாத தன்மையுடையது கல்; அனலின் வெம்மை தாக்கினாலே உருகிவிடும் தன்மையுடையது மெழுகு. நல்ல மனம் மெழுகு

போன்றது; தீய மனம் கல் போன்றது! எளிய உதாரணம்; உயர்ந்த தத்துவம்!

"ஆவலன் புடையார் தம் மனத்தன்றி மேவலன்"

என்கிறது நாச்சியார் திருமொழி. இறைவனிடத்து அன்பிருந்தால் மட்டுமே போதாதாம்; அந்த அன்புடன், அவனை எப்போது அடைவோம் என்ற ஆவலும் இருக்கவேண்டுமாம்; அப்படிப் பட்டவர்கள் இருக்குமிடம் தேடி இறைவன் வருவான் என்ற உண்மை இப்பாடல் வரியில் உணர்த்தப்பட்டுள்ளது. நெஞ்சம் நெகிழ ஆழ்வார்கள் பாடிய பிரபந்தப் பாடல்களில் 'நெஞ்சம்' என்ற சொல்லிற்கு அடுத்த நிலையில் 'மனம்' என்ற சொல்லையே அவர்கள் அதிகம் கையாண்டுள்ளனர். தத்துவ அடிப்படையில் இறைவனைக் கண்டு வழிபட்ட அவர்களது அணுகுமுறையை அறிந்து கொள்வதற்கு இதுவும் ஓர் சான்று,

கண்ணனை மும்முதற்பொருள் என்று உணர்ந்து அவ்வுணர்ச்சியைச் சொல்லோவியங்களாகத் தீட்டியவர்கள் ஆழ்வார்கள். எனவேதான்,

"கண்ணனுக் கன்றி என்மனம் தாழ்ந்து கில்லாவே"

என்று உறுதியோடு கூறிய திறத்தை அவர்களது பக்திப்பாடல் களில் காண்கிறோம்.

காப்பியமாக இருந்தாலும், கம்பராமாயணமும் ஒரு சிறந்த தத்துவ விளக்கம் கூறும் நூலே. காதல், பாசம், நட்பு, பகை போன்ற பல்வேறு வகையான உணர்வுகளை வெளிப்படுத்திய கம்பர், மனத்தின் தன்மை, செயல்கள் ஆகியனவற்றைத் தாம் படைத்த பாத்திரங்களின் மூலமாக வெளிப்படுத்தியுள்ள நுட்பம் பாராட்டற்குரியது. மனத்தின் எந்தத் தன்மையால் என்ன விளையும் என்பதை 'உண்மைகளாக'வே மற்ற நூல்கள் காட்டிச் செல்கின்றன; ஆனால் கம்பரோ, அந்த 'உண்மைகளைத்' தாம் படைத்த பாத்திரங்களாகிய உதாரணங்களின் மூலம் விளக்கி நம் மனங்களில் ஆழப்பதித்து விடுகிறார். நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற சொற்களைக் காட்டிலும் 'மனம்' என்ற சொல்லையே இவர் அதிகமாகக் கையாண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

"பொறையொடும் தொடர் மனத்தான்"

"மனத்துறை காதலே வாகை கொண்டதே"

"துரிசிலாத் திருமனத்தான்"

"மைக்கரு மனத்து ஒரு வஞ்சன்"
"அன்பின் முன்செலு மனத்திற்கு"

என்று இவர் கூறும் முறைகள் நினைந்து இன்புறத்தக்கன.

ஆய்விற்கெடுத்துக்கொண்ட இலக்கியங்களிலேயே அதிக மான இடங்களில் 'மனம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருப்பதுடன், மனத்தின் பல்வேறு தன்மைகள், செயல்கள் ஆகியனவற்றை நேரிடையாகவும் உவமைகள், உருவகங்கள் வாயிலாகவும் உணர்த்தியுள்ள பெருமை இராமலிங்க அடி களாரையே சாரும். அவர் பயன்படுத்தியுள்ள நிலையில் நோக் கினும், நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற சொற்களைக் காட்டிலும் மனம் என்ற சொல்லையே அதிக இடங்களில் கையாண்டுள்ளார். மனத்தைப் பற்றி வேறு எவரும் கூறாத அளவிற்குச் சிந்தித்துக் கூறியுள்ளார் என்றும் கூறலாம்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த வராதலாலும், பல சமயச் சான்றோர்கள் தோன்றியபின் தோன்றியவராதலாலும் முந்தை யோரின் அடிச்சுவடுகளை இவர் தத்துவங்களிலும் காணமுடி கிறது; அதே சமயம் பல புதிய உண்மைகளையும் இவரிடமிருந்து அறிய முடிகிறது. சமுதாயத்தில் இவர் கண்ட முரண்பாடு களுக்குத் தீர்வுகளை சமயக் கண்ணோட்டத்தோடு காணமுற் பட்ட திறத்தையும் இவர் பாடல்களில் காண முடிகிறது.

"மம்பரத்தி னாடி யலைப் படுத்து மிந்தப் பாவிமனம்
எனக்கு வயப்படுவதில்லை"

"மருளுடைய மனப் பேதை நாயினேன்"

"புண்படா உடம்பும் புரைபடாமனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்தி"

என்று அமையும் இவர்தம் அருட்பாடல்கள் அனைத்துமே தத்துவகனிச் சாறாகும்.

"சொன்ன படிக்கு நடந்திடுவால் — மனமே
தொழில் வேறில்லை"

என்று துணிவோடு தன் மனத்திற்கும் கட்டளையிட்டவர் பாரதியார். மனம், தன் போக்கில் சென்று நம்மை ஆட்டிப் படைப்பது பற்றித்தான் மற்றவர்கள் கவலைப்பட்டுப் பாடி யுள்ளார்கள்; ஆனால் பாரதியாரோ, தான் சொன்னபடி தான்

நடக்க வேண்டும் என்று தன் மனத்திற்கே கட்டளையிடுகிறார்.

"சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத
பெருஞ் சோதி"

என்கிறார் அல்லாவை.

"மனத்திற் பெயர்ந்திடா உறுதி மேற் கொண்டு"

வாழ வேண்டும் என்று உணர்த்துகிறார். இவரும் கூடத் தம் பாடல்களில் அதிகமான இடங்களில் நெஞ்சம், மனம் என்ற சொற்களையே பயன்படுத்தியுள்ளார். பக்தி இலக்கியங்களைப் போலவே இவரது பாடல்களும் தத்துவ விளக்கங்களுடன் அமைந்துள்ள நுட்பத்தைக் காண்கிறோம்.

அடைச்சொற்களுடன் மனம்

நற்றிணை

1. செயல்படு மனம்
2. அவவுக் கொள் மனம்
3. முனிகூர் மனம்
4. புன் மனம்

புறநானூறு

வருந்து மனம்

திருநாவுக்கரசர் தேவாரம்

1. வஞ்சமனம்
2. திருந்தா மனம்
3. புல்லிய மனம்
4. மையல் கொள் மனம்
5. மெய் விரா மனம்
6. கரவிலா மனம்
7. மதம்படு மனம்
8. மையறு மனம்
9. கடி மனம்
10. கல் மனம்
11. மாய மனம்
12. செதுகறா மனம்
13. இரங்கா வன்மனம்
14. கனி மனம்
15. கள்ளமுள்ள மனம்
16. கரிய மனம்
17. சிறுமனம்
18. அன்பு கலந்த மனம்
19. உருகும் மனம்
20. களித்த மனம்

திருவாசகம்

1. விலங்கு மனம்
2. கற்றா மனம்
3. மத்த மனம்
4. கல்வகை மனம்
5. கல்லா மனம்
6. வினையேன் மனம்
7. மருளார் மனம்
8. வணங்கா மனம்
9. பழுத்த மனம்
10. அழுக்கு மனம்
11. உள்குவார் மனம்
12. அறவையேன் மனம்
13. இரும்புதரு மனம்
14. பிறியும் மனம்
15. செம்மை மனம்
16. காதல் செய் மனம்

திருமந்திரம்

1. மாயங்கலந்த மனம்
2. கள்ள மனம்
3. கோணா மனம்
4. மன் மனம்
5. விடாத மனம்
6. கல்லா மனம்
7. ஈரு மனம்
8. அவிழு மனம்
9. ஆர்வ மனம்
10. நல்ல மனம்
11. குறையா மனம்
12. நீள் மனம்
13. கன்றா மனம்
14. உருகும் மனம்
15. கல் மனம்

தாயுமானவர் பாடல்கள்

1. யோசிக்கும் மனம்
2. சஞ்சலப்படும் மனம்
3. பாழான மனம்
4. பரந்த மனம்
5. துள்ளு மனம்
6. அடிமை மனம்
7. கள்ள மனம்
8. உழலு மனம்
9. மூட மனம்
10 கல்லா மனம்
11. பேய் மனம்
12. வஞ்சனை, பொறாமை, லோபம் வைத்த மனம்
13. துன்புறு மனம்
14. துன்று மனம்
15. கருங்கல் மனம்
16. மாயை தரும் மனம்
17. மாமர்க்கட மனம்
18. அற்ப மனம்
19. மயக்குறு மனம்
20. விரிந்த மனம்
21. பாழ்த்த மனம்
22. சுன்று மனம்
23. நினைக்கு மனம்
24. உன்னு மனம்
25. வன்பொன்று நீங்கா மனம்

நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

1. பரவு மனம்
2. மறந்திகழு மனம்
3. அறந்திகழு மனம்
4. தொடக்கறா மனம்
5. மருவிய மனம்
6. கோடிய மனம்
7. வலங்கொள் மனம்
8. தீ மனம்
9. மாசறு மனம்
10. கள்ள மனம்
11. துளக்கமில் மனம்
12. பற்றா மனம்
13. ஓர்ந்த மனம்
14. கதவு மனம்
15. அறிவில் சிறுமனம்
16. தூய மனம்
17. கறுத்த மனம்
18. மையலுற்ற மனம்

கம்பராமாயணம்

1. கறுப்புறு மனம்
2. அறன் ஒன்றும் திருமனம்
3. கவர் மனம்
4. வெப்புறு மனம்
5. கன்றிய மனம்
6. குளிர் மனம்
7. உவக்கின்ற மனம்
8. கொடு மனம்
9. தெருளுடை மனம்
10. அன்பிழைத்த மனம்
11. கொதிக்கும மனம்
12. இரும்பு மனம்
13. பரிவிகந்த மனம்
14. கல் மனம்
15. வஞ்சமிலா மனம்
16. அற்றம் நீத்த மனம்
17. கையறு மனம்
18. களிப்புறு மனம்
19. ஐயுறு மனம்
20. ஆய்வுறு மனம்
21. செற்ற மனம்
22. உருகிய மனம்
23. களிப்படா மனம்
24. அவியுறு மனம்
25. வெங்கதம் வீசிய மனம்
26. மறுவிலா மனம்
27. மருளுறு மனம்
28. மையல்கூர் மனம்
29. வேகின்ற மனம்
30. கள்ள மனம்
31. உளைவுறு மனம்

திருவருட்பா

1. மயலூர் மனம்
2. மலஞ்சுழிகின்ற மனம்
3. கொடிய மனம்
4. நேய மனம்
5. ஓடுகின்ற மனம்
6. வீண்செல்லு மனம்
7. பேதை மனம்
8. தெய்வ மனம்
9. இருளுறு மனம்
10. மடம் பொழி மனம்
11. மாயா மனம்
12. முரட்டுக் கடை மனம்

13. மருணிறைந்த மனம்
14. வன்பு கலந்தறியா மனம்
15. பித்தேறி யுழல்கின்ற மனம்
16. மருள் வலையிலகப்பட்ட மனம்
17. கொடுமை செயு மனம்
18. கள்ள மனம்
19. பாவி மனம்
20. வஞ்ச மனம்
21. சாந்த மனம்
22. சோக மனம்
23. கல் மனம்
24. இயங்கா மனம்
25. மோகங்கலந்த மனம்
26. இரும்பேய் மனம்
27. மயங்கு மனம்
28. மையல் கொள் மனம்
29. தேட்டுக் கடங்காத் தீ மனம்
30. மும்மல மடஞ் செறி மனம்
31. புலையே புரி மனம்
32. எழுவினும் வலிய மனம்
33. பொய்யறிவிற் புலை மனம்
34. வஞ்சமற்ற மனம்
35. புரைசேர் மனம்
36. மால் கொளு மனம்
37. வாது நினைக்கு மனம்
38. துனியுறு மனம்
39. மலங்கிய மனம்
40. புரைபடா மனம்
41. சவலை மனம்
42. கட்டுக் கடங்கா மனம்
43. புழுங்கு மனம்
44. துள்ளிய மனம்
45. ஈனம் பழுத்த மனம்
46. பித்து மனம்
47. தோன்றி விரியு மனம்
48. கொதித்த மனம்

பாரதியார் கதைகள்

1. காழ்த்த மனம்
2. கல்லினை யொத்த வலிய மனம்
3. நசையறு மனம்
4. வெள்ளை மனம்
5. பேயா யுழலும் சிறு மனம்
6. வேகாத மனம்
7. பாவி மனம்

அடைச் சொற்களால் அறியப்படுவன

மனத்தின் பல்வேறு வகையான தன்மைகளையும் அடைச் சொற்களின் மூலம் உணர்த்தியுள்ள திறத்தை அறிய முடிகிறது. நல்ல மனமாகவும், தெய்வமனமாகவும் மனத்தைக் கூறிய புலவர்களே கல் மனம், கல்லாமனம், விலங்குமனம் என்றெல்லாம் கூறியிருப்பதையும் உணரமுடிகிறது. ஏனைய நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற நிலைகளைக் காட்டிலும் மனத்தின் தன்மை

களை விளக்குவதற்கே அதிகமான அடைச் சொற்கள் கையாளப் பட்டுள்ளன. இதிலிருந்து மனத்தின் தலைமைத் தன்மையும் விளங்கும். சில அடைச் சொற்கள் ஏற்கெனவே நெஞ்சம்,உள்ளம் போன்ற நிலைகளை விளக்குவதற்குக் கையாளப்பட்டன வென்றும் அவைகளே மனத்திற்கும் கூறப்பட்டுள்ளன என்றும் அறிகிறோம். மனத்தின் பல்வேறு நிலைகளே அவைகள்; அதுவேயன்றி, மனம் தலைமைத் தன்மையுடன் இயங்குவதால் சிலபோது இதன் தன்மைகள் இதைச் சார்ந்தவைகளுக்கும் இருப்பது இயல்புதானே! அந்த வகையில் தான் நாம் அதனை எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக மனத்திற்குத் தரப்பட்டுள்ள அடைச்சொற்களை வைத்து நோக்கினால் மனத்தின் தீயதன்மைகளே மிகுதியும் காட்டப்பட்டுள்ளன. அத்தன்மைகளை விளக்குவதற்கேற்ற சொற்களையே தேர்ந் தெடுத்து அடைச் சொற்களாகப் பயன் படுத்தியுள்ளனர். இயல்பாக நன்னிலையில் இருக்கும் மனம், எப்படியெல்லாம் தீய சக்திகளால் மாற்றப்படுகிறது என்பதை விளக்குவதோடு, அப்படி மாற்றும் சக்திகள் எவை என்பதையும் அடைச்சொற்களே எடுத்துக் காட்டுகின்றன. அடைச் சொற்களை வைத்து ஆய்வு செய்யின், இரண்டு தன்மைகளுக்குள் மனத்தின் தன்மைகள் அனைத்தையும் அடக்கி விடலாம். அவையாவன:

1. நல்ல தன்மைகள்
2. தீய தன்மைகள்

நல்ல தன்மைகள்

"அன்பு கலந்தார் மனங் கவரும் காதலானே"

என்கிறார் நாவுக்கரசர். மனத்தில் அன்புடையவர்களைக் கண்டால், அத்தகைய நல்ல மனத்தை இறைவன் தானே கவர்ந்து கொள்வானாம்; அன்பு நம் மனத்தில் இருந்து விட்டால் போதும்; இறைவனை நாம் தேடி அலைய வேண்டுவதில்லை; அவனே நம்மைத் தேடிவந்து நம்மனத்தை, நம்மைக் கேட்கா மலேயே எடுத்துக்கொண்டு விடுவானாம். அன்புடைய நல்ல மனத்தின் தன்மை இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. அவரே பின்போர் இடத்தில்,

"உருகும் மனத் தடியவர்கட் கூறுந்தேனே"

என்றும் இறைவனைக் குறிப்பிடுகின்றார். இறைவனை நினைந்து, அல்லது உலகின் அவல நிலை கண்டு இரங்கி உருகும் நல்ல தன்மை ஒருவர் மனத்திற்கு இருக்குமென்றால், அத்தகைய மனத்தில் இனிக்கும் தேனாக ஊறி மகிழ்விப்பான் இறைவன் என்ற நுட்பம் இங்குக் காட்டப்பட்டுள்ளது.

ஒளிகளுக் கெல்லாம் பேரொளியாக விளங்குபவன் இறைவன்; அறியாமை, மடமை போன்ற எத்தனையோ இருட் படலங்களில் மூழ்கித் தவிப்பது மனிதப்பிறவி; இந்த இருளெல்லாம் நம்மை விட்டு நீங்க வேண்டு மென்றால் இறைவனாக ஒளியை நினைந்து நாம் மனம் உருக வேண்டும்; அப்போது தான் அவனருள் கிட்டும் என்ற உண்மையை,

"ஒளியை யுன்னி உருகு மனத்தராய்"

என்று உணர்த்துகிறார் திருமூலர்.

மனிதப் பிறவிக்கே கதியாக இருப்பவன் இறைவன்; நாம் முடிவில் கதியை அடைய வேண்டுமெனில் அவனருளைப் பெறுவதன்றி வேறு வழியேயில்லை; ஆனால் மனிதராகப் பிறந்த அனைவருமே அக்கதியை அடைந்து விடுவதில்லை; சிலரால் தான் அடையமுடிகிறது. பலரால் ஏன் அடைய முடியவில்லை யெனில், அதற்குத் தடையாக இருப்பது அவர்கள் மனங்களே! மனத்தில் அறம் திகழுமெனில் அவர்கள் வாழ்வு அறவாழ்வாக மலர்ந்து மணம் கமழ்கிறது; அத்தகைய சான்றோரால் உலகமும் வாழ்கிறது. முடிவில் அவர்கள் இறைவன் திருவடி நிழலாகிய கதியை அடைந்து நீங்காத இன்பத்தில் நிலைத்து விடுகின்றனர். இதற்கு மாறுபட்ட நிலையில் வாழ்பவர்கள் பல்வேறு பாவங்களைப் புரிந்து தாங்களும் கெட்டு, பிறரையும் கெடுத்து முடிவில் அருநரகையடைகின்றனர். இந்த இருவேறுபட்ட நிலைகளை,

"அறந்திகழும் மனத்தவர் தம் கதியை"

என்றும்,

"மறந்திகழும் மனம் ஒழித்து வஞ்சம் மாற்றி"

என்றும் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எடுத்துக் காட்டுகிறது. இதே கருத்தை,

அறன் ஒன்றும் திரு மனத்தான்"

என்று கூறுகிறார் கம்பர். மனத்திற்கும் 'திரு' என்ற அடைச் சொல்லைப் பெய்திருப்பது புதுமையெனினும், அறமுடைய மனத்தின் சிறப்புநோக்கி அப்படிக் கூறினார் என்று அமைதல் கடன்,

''அன்பர் நேய மனத்தே விரைந்து சென்றான்''

இறைவன் என்று கூறுகிறார் இராமலிங்க அடிகளார். மனத்தில் நேயம் இருந்தால் இறைவன் நம்மைத் தேடிவருதவோடு, விரைந்து வருவான் என்று அவர் உரைப்பது நேய மனத்தின் சிறப்பைச் சித்தரிக்கும்.

''வெள்ளை மனது பறி கொடுத்தேனம்மா''

என்று அன்னை சரஸ்வதியிடம் முறையிடுகிறார் அமரகவி பாரதியார். நல்ல மனத்தின் நிறம் எது என்ற உண்மையினை யும் நாம் இங்கு உணர்கிறோம். இயல்பாகத் தூய வெள்ளை யாக உள்ள ஒரு துணி, பின்பு அதில் சேரும் அழுக்குகளுக்கேற்ப நிறமும் மாறுபடுதல் போலவே, நல்ல மனம் பின்பு கள்ள மன மாகி விடுகிறது என்ற உண்மையும் உணரக் கிடக்கிறது.

இதுவரை மனத்தின் நல்ல தன்மைகளைக் கண்டோம்; ஆயிரக் கணக்கான பாடல்களைப் பாடி,பல அடைச்சொற்களை யும் கையாண்ட புலவர்கள் ஓரிரு அடைச்சொற்களில் தான் மனத்தின் நல்ல தன்மைகளை விளக்கியுள்ளார்கள்.

நற்றிணை, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் 'மனம்' என்ற சொல்லையே குறைவான இடங்களில் பயன் படுத்தியிருப்பதோடு, அதன் நல்ல தன்மைகள் ஏதும் காட்டப் படவில்லை. திருநாவுக்கரசர் தம் பாடல்களில் இரண்டு இடங் களில் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். கருங்கல் மனமும் உருகுமாறு பாடிய மணிவாசகப் பெருந்தகையால், மனத்தின் நல்ல தன்மை களை கண்டு பாராட்டக் முடியவில்லை போலும். 'பழுத்தமனம்' என்ற ஒருசொல் தவிர வேறு அடைச்சொல் எதுவுமே அந்த வகையில் அமையவில்லை. இரண்டு அடைச்சொற்களைப் பயன் படுத்தி அதன் நல்ல தன்மையை விளக்கியுள்ளார் திருமூலர்.

மனத்தின் இயல்பான தன்மைகளை, 'நினைத்தல்', 'உன்னு தல்' என்று குறிப்பிட்ட தாயுமானவர் மறந்தும் ஒரு இடத்தில் கூட மனத்தின் நல்ல தன்மையைக் குறிப்பிடவில்லை. ஆனால்

தீய தன்மைகள் அனைத்தையும் பட்டியல் போட்டுப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இரண்டு அடைச்சொற்களையும், கம்பராமாயணத்தில் ஐந்தாறு அடைச்சொற்களையும் நல்ல தன்மைகளைக் குறிப்பனவாகக் காண்கிறோம்.

மேற்கண்ட எல்லா இலக்கியங்களையும் விட அதிகமான இடங்களில், மனத்தின் தீய தன்மைகளை விளக்கமாகக் கூறிய இராமலிங்க அடிகளார் இரண்டொரு இடங்களில் மட்டுமே நல்ல தன்மைகளைக் குறிப்பிட்டுள்ளார். பாரதியாரும் கூட 'வெள்ளை மனம்' என்ற ஒரே சொல்லைத்தான் நல்ல தன்மை உணர்த்தும் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளார். எனவே, மொத்தத்தில் அனைவருமே மனத்தின் தீய தன்மைகளையே மிகுதியும் கண்டு விளக்கிக் கூறியுள்ளார்கள் என்பது புலப்படும்.

தீய தன்மைகள்

தீய தன்மைகளைப் புலவர்கள் குறிப்பிடும் விதத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தீய குணங்களையே அடைச்சொற்களாகக் குறிப்பிடும் நிலை.

2. வினை, மாயை போன்றவற்றை அடைச்சொற்களாகக் குறிப்பிடும் நிலை.

3. அஃறிணைப் பொருட்களை அடைச்சொற்களாகக் குறிப்பிடும் நிலை.

1. தீய குணங்களையே அடைச்சொற்களாகக் குறிப்பிடல்

"திருந்தா மனமுடையார் திறத்து"
"மையல் கொள் மனத்தனாகி"

என்று குறிப்பிடுகிறார் நாவுக்கரசர்.

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை"
"மத்த மனத்தொடு மாலிவனென்ன"

என்கிறார் மணிவாசகப் பெருந்தகை.

"கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து"
"கள்ளமனம் விள்ளும் வகை"

என்கிறது நாலாயிரத் திவ்யபிரபந்தம்.

"பாதரசமாய் மனது சஞ்சலப் படுமலால்"
"தெருளாகி மருளாகி உழலு மனம்"

என்று கூறுகிறார் தாயுமானவர்.

"வஞ்சமனத்தர் மாட்டுறவை யடுத்தேன்"
"இருளேர் மனத்தேன் இழுக்குடையேன்"

என்கிறது திருவருட்பா.

மேற்கண்ட சான்றுகளில் மனத்தின் தீய குணங்களாகிய 'திருந்தாமை', மையல் கொள்ளுதல், கல்லாமை, மத்தநிலை, சஞ்சலப்படுதல், உழலுதல், கோடுதல், கள்ளம், வஞ்சம், இருள் நிறைந்த நிலை போன்றவைகளையே அடைச்சொற்களாகக் குறிப்பிட்டு மனத்தின் தீய தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

அவவுக் கொள்ளுதல், புன்மை, வருந்துதல், மதம் படுதல், இரங்காமை, அழுக்குடைமை, துள்ளுதல், பெறாமை, லோபம், கன்றுதல், அறிவில்லாமை, களித்தல், ஐயுறுதல், வேகுதல் உளைவுறுதல், சோகம், மயங்குதல், கொதித்தல் போன்ற தீய குணங்கள் அடைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. வினை, மாயை போன்றனவற்றை அடைச்சொற்களாகக் குறிப்பிடல்

"மாய மனத்தவர்கள் பன்னிய நூலின் பரிசரிவாய்"
"வல்வினையேன் மனத்தகத்து மன்னினானை"

திருநாவுக்கரசர்

"வினையேனுடைய மனத்துணையே" திருவாசகம்

"மனத்தில் எழுகின்ற மாயநன்னாடன்"
"மாயத்தே செல்வோர் மனத்தோடொழியுமே" திருமூலர்

"மனமாயை அம்மம்ம வெல்லலெளிதே"
"மனமாயைக் குடிகெடுக்க" தாயுமானவர்

"தீயவினை மாளாக் கொடிய மனச்செல்வர்"
"மலஞ்சுழிக்கின்ற மனத்தர்" திருவருட்பா

மேற்கண்ட சான்றுகளில் வினை, மாயை, மலம் போன்ற சொற்கள் வந்துள்ள மனத்தின் தீயதன்மைகளை விளக்குவதைக் கண்டோம். மதம்படுதல், மாயம், மயக்குதல், மருள்வலையில்

அகப்படல், பாவிச்செயல், பேய்த்தன்மை, மையல் கொள்ளுதல், பேதைமை, பித்துநிலை போன்ற தன்மைகள் இப்பிரிவில் அடங்கும்.

3. அஃறிணைப் பொருட்களை அடைச்சொற்களாகக் குறிப்பிடும் நிலை

"கல்மனவீர் கழியுங் கருத்தே சொல்லி"
"கல்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்"

திருநாவுக்கரசர்

"விலங்கு மனத்தால் விமலா உனக்கு"
"கற்றா மனமெனக் கதறியும் பதறியும்" திருவாசகம்

"கல்மனத்தைக் கரைக்கக் கடவதே"
"வஞ்சனை, பொறாமை, லோபம் வைத்த மனமாங்கிருமி

தாயுமானவர்

"மருணிறைந்த மனக்கருங்கற்பாறை"
"கருங்கல் மனக்குரங்காட்டி" திருவருட்பா

மேலே காட்டிய சான்றுகளில் கருங்கற்பாறை, கருங்கல், கிருமி, விலங்கு, கற்றா போன்ற அஃறிணைப் பொருட்கள் மனத்தின் தீய தன்மைகளை விளக்குவதற்கு அடைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவைகளேயன்றி, இரும்பு, மாமரக் கடம், கன்று, தீ, கதவு, இருள் போன்ற அஃறிணைப் பொருட்களும் அடைச்சொற்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இரும்பு, கல், கருங்கற்பாறை, குரங்கு போன்றவற்றைப் பல இடங்களில் பல புலவர்களும் அடைச்சொற்களாகப் பயன்படுத்தியுள்ளனர்.

மேற்கண்ட மூன்று நிலைகளில் மனத்தின் தீயதன்மைகளை அடைச்சொற்களால் விளக்கியிருப்பினும், எல்லா நிலைகளும் உணர்த்தும் உண்மை ஒன்றே. இயல்பாக நன்னிலையில் உள்ள மனம், புறச்சூழல்களாலும் வினை, மாயை, மும்மலங்கள் ஆகியனவற்றாலும் மாறி விடுகின்றன. அதனால் அம்மனத்தைப் பெற்றவனும் கெடுகிறான்; பிறரும் கெடுக்கப்படுகிறார்கள்; மொத்தத்தில் உலகமே கொடு நரகாகி விடுகிறது.

"வஞ்சக வினைக்கோர் கொள்கல மனைய மனத்தினேன்"

என்று குறிப்பிடுவார் வள்ளலார். தீய வினைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்தால் எப்படியிருக்குமோ, அதுபோல என்மனம் இருக்கின்றது என்கிறார் அவர்.

எது உண்மைப் பொருள்? எது பொய்ப் பொருள் என்பதை நம் மனம் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும்; நாம் கற்கும் கல்வி அந்த அறிவை நம் மனம் பெறத்துணை செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த மனம் நல்லனவற்றை மட்டுமே நினைந்து நல்லனவற்றை மட்டுமே செய்யும்; அந்நிலையில் அம்மனத்தைப் பெற்றவரும் உயர்ந்த நிலையை அடையமுடியும். உலகிலுள்ள உண்மை, பொய்மைகளைத் தெரிந்து தெளிந்தால் மட்டும் போதுமா? என்றும் நிலையான உண்மைப் பொருளாக உள்ள இறைவனைப் பற்றியறியும் கல்வியையும் நம் மனம் பெற்றிருக்க வேண்டும். கற்பதனால் பெறக்கூடிய பயனாக அதைத்தானே திருவள்ளுவரும் குறிப்பிடுகிறார்!

"கற்றதனா லாய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பதல்லவா தமிழ் மறை! அத்தகைய சிறப்புமிகும் கல்வியைக் கல்லாத மனத்தைப் பெற்றதனால் ஏற்படும் இழிவை மனம் நொந்து உரைக்கின்றார் மணிவாசகர்.

"கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை"

என்ற அவர் வாசகத்தில் கல்லா மனம் பெற்ற ஒருவன் கடைப்பட்டவனாகவும், நாய்க்குச் சமமானவனாகவும் ஆகும் இழிவை உணர்ந்து உரைக்கின்றார். உண்மைக்கல்வி இல்லை என்றபோது மனம் சஞ்சலப்படத்தானே செய்யும்! அது எப்படியென்றால் பாதரசம் போல என்று கூறுகிறார் தாயுமானவர். மனம் நேரியதாக இருக்கும்போது நல்லபண்புகள் அம்மனிதனிடத்தில் தோன்றும்; அதுவே கோணலாகி விடுமென்றால் கொடிய பண்புகள் தானே தோன்றும்! வஞ்சனை, பொறாமை, கோபம், ஆசை போன்ற தன்மைகளெல்லாம் மனம் கோணும் போது பிறப்பவைகள் தானே!

"கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து"

என்று கூறுகின்றது நாலாயிரத்திவ்யபிரபந்தம். வாழ்க்கையில் நாம் சில தொழில்களைச் செய்கிறோம். அதன் மூலம் வருவாய் பெற்று வாழ்வை நடத்திச் செல்கிறோம். அதேபோல கோண லாகிவிட்ட தீய மனமும் ஒரு தொழிலைச் செய்கிறது! அது தான் சினத்தொழில்! பிறரிடத்துக் கோபப்படுதலையே ஒரு தொழிலாகக் கொண்டுள்ள மனிதர்களை உலகில் காணத்தான் செய்கிறோம். அப்படிப்பட்ட மனிதர்களை அந்நிலைக்கு ஆக்கு வது அவர்களது மனம் தானே! தொழிலுக்கு வருமானம் உண்டே! அதுபோல சினத்தொழில் புரியும் போது அதன் விளை வால் ஏற்படுவனவைகள் தீய செயல்கள் அனைத்துமே! எனவே தான்,

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி"

என்று குறிப்பிட்டார் திருவள்ளுவர். பூச்சிக்கொல்லி மருந்து களைக் காண்கிறோம். அதுகூட நல்ல நோக்கத்திற்காகப் பயன் படுகிறது. ஆனால் சினமோ தீய செயல்களை விளைவிக்கிறது. "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்ற பழமொழியும் நினைத் தற்குரியது. சினத்திற்கு நாம் அடிமையாகும் போது நம் அறிவும் ஒழுங்கான நிலையில் செயல்படுவதில்லையே! எனவே, மனத்தின் கோணல் தன்மையைப் போக்கும் முயற்சியில் நாம் வெற்றி பெற்றால் தீய குணங்கள் ஏதுமின்றி, தானும் கெடா மல், பிறரையும் கெடுக்காமல் வாழ முடியும்.

"வாடினேன் பிழை மனங்கொள"

என்று வள்ளலார் அடைந்த வாட்டமும் அந்நிலையில் அவசிய மில்லாமல் போகும்.

"நம் மனவீட்டில் தீய எண்ணங்களாகிய இருட்படலம் சூழ்ந்துள்ளது. அறிந்தோ, அறியாமலோ வீட்டில் விளக்கை யேற்றுவதற்குப் பதிலாக இருள் சூழச் செய்துவிட்டோம். வீடெங்கும் இருளாய் இருக்கும்போது அங்கே நல்லவர்கள் எப்படி வாழமுடியும்? தீய செயல்களை, பிறருக்குத் தெரியாமல் செய்யவிரும்புபவர்கள் மட்டுமே இருட்டறையில் இருப்பார்கள். அதே போலத்தான் நம் இருளுடை மன வீட்டிலும் தீய எண்ணங் களே குடிகொண்டுள்ளன. அத்தகைய மனம் இருக்கும்போது புகழா நம்மைத் தேடிவரும்! இழுக்கன்றோ வந்தடையும்! இவ்வுண்மையினையே,

"இருளேர் மனத்தேன் இழுக்குடையேன்"
என்று குறிப்பிடுகின்றார் இராமலிங்க அடிகளார்.

மனத்தைப் பூட்டாகவும், வீடாகவும் உருவகப்படுத்திப் பேசினார் பாரதியார். மனப்பூட்டைத் திறக்கும் திறவுகோல் அறிவே என்பது அவரது கருத்து. அறிவு இன்றேல் மனம் சிறக்காது என்பது அவர் முடிபு. அதேபோல, மனமாகிய வீட்டில் மண்டியுள்ள அழுக்கைத் துடைக்கும் துடைப்பமாக 'மெய்'யைக் கருதுகின்றார். உண்மை பேசும் உணர்வு எவருக்கு உண்டோ அவர் மட்டுமே தம் மனத்தைச் சுத்தமாக வைத்துள்ளார். அதற்கு மாறாகப் புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்பவர் களெல்லாம் மென்மேலும் மனவீட்டில் அழுக்குகளைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே அதன் பொருள். நம்முடைய வாய் உண்மை பேசுமென்றால், மனமும் தூய்மையாக உள்ளது என்பது தானே பொருள்!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்று எச்சரிக்கையோடு இராமலிங்க அடிகளார் இறைவனை வேண்டுவது தம்முடைய மனவீடு அழுக்கடைந்து விடக்கூடாது என்ற கவலையினால் தானே!

"நல்ல மனம் திறப்பது மதியாலே"
"மனவீட்டைத் துடைப்பது மெய்யாலே"
என்பன பாரதியாரின் பாடல் வரிகள்.

மாயையும் வினையும்

நாம், மனம், அறிவு முதலியன மயங்கும் நிலையில்தானே தீய செயல்கள் செய்ய முற்படுகிறோம்! அவைகள் ஒழுங்கான நிலையில் செயல்படுமென்றால் ஒழுங்கான செயல்களையே செய்து கொண்டிருப்போமே! அப்படி நம் மனத்தையும், அறிவை யும் மயங்கச் செய்வன எவை? அந்தப் பேராற்றல்களே மாயை யும் வினையுமாகும். அவைகள் மனிதர்களை மட்டுமல்ல; தெய் வங்களையும் தேவர்களையும்கூட விட்டு வைப்பதில்லை. அத்தகைய ஆற்றல் அவைகளுக்கு உண்டு.

"மாயையால் வினையால் அரி பிரமாதி வானவர்
மனமதி மயங்கித்
தீய காரியங்கள் செய்திடில்..."
என்று கூறுகின்றார் வள்ளலார்.

எனவே, தீய காரியங்களை நாமாகச் செய்யாவிடினும், நம்மைச் செய்விக்கும் ஊக்கியாக இருப்பன மாயையும் வினையு மென்பது புலப்படும்.

வினைகள் நம்மை ஊக்குவிப்பதற்குரிய காரணகர்த்தா நாமே! ஒரு பிறவியில் நாம் செய்யும் செயல்களே நல்வினை களாகவும், தீவினைகளாக மாறி அடுத்த பிறவியிலும் நம்மைத் தொடர்ந்து வந்து உரிய பயன்களைத் தருகின்றன.

"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுதும்"

என்று சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மை இதுவே. ஆனால் மாயைகளின் நிலை என்ன? அவை யாரால், ஏன் அனுப்பப்படு கின்றன?

"சோதிக்க மனமாயை தனை ஏவி"

என்று கூறுகின்றார் தாயுமானவர். நாம் எப்படி வாழ்கிறோம்? தீய குணங்களாகிய வலைகளில் சிக்கித் தவிக்கும் பலவீனம் நமக்கு உண்டா என்பதைச் சோதிக்க விரும்புகின்றான் இறைவன். எனவேதான் மாயையை நம்மிடம் செல்லுமாறு ஏவு கின்றானாம். 'சோதிக்க', 'ஏவி' என்ற இரண்டு சொற்களும், மாயையின் வருகை வரச்செய்பவர் ஆகியனவற்றை உணர்த்தும்.

தன்மீது உண்மையான அன்புடைய அடியார்களையும்கூட இறைவன் சோதனை நடத்தியே தேர்ந்தெடுத்தான் என்ற உண்மையைத்தானே பெரியபுராணம் உணர்த்துகிறது! அடிய வர்கள் மாறாமன உறுதியினால் மாயையினையும் வெற்றி பெற்றார்கள். அந்த உறுதி இல்லாதவர்கள் தான் மாயையின் வலையில் சிக்கித் தங்கள் மனமும்மதியும் மயங்கித் தவறுசெய்யும் நிலைக்கு ஆளாகின்றார்கள். அவ்வளவு எளிதில் வெல்லமுடியாத ஆற்றல் அந்த மாயைக்கு உண்டு என்பதைப் பலரும் உணர்ந் துள்ளமையும் அவர் தம் பாடல்களால் உணரக்கிடக்கின்றன.

"எல்லாமும் வலதிந்த மனமாயை"

என்கிறார் தாயுமானவர்.

"ஆதிக்க மாயை மனத்தேன் கவலை யடுத்தடுத்து
வாதிக்க..."

என்கிறார் வள்ளலார். மாயெயின் வலிய செயல்களால்தான் மனக் கவலை வந்து வருத்துகிறது என்பது வள்ளலார்தம் கருத்து.

இந்நிலையில் நமக்கோர் விடை தெரிந்தாக வேண்டும். மாயையும், வினையும் வலிய சக்திகளாக இருப்பினும் அச்சக்திகளையும் வெல்லக்கூடிய ஆற்றலை நாம் பெறமுடியாதா? முடியும் என்பதே தமிழர் கண்ட முடிபு. அச்சக்தியை நாம் பெற, பேராற்றல் மிக்க இறைவனை எண்ணித் தொழவேண்டும். வினைகளை வேரறுக்கும் வல்லமை அவன் ஒருவனுக்கே உண்டு. அந்த அருட்பெருஞ்சோதி, தனிப் பெருங்கருணையிடம் மனம் வருந்தி முறையிடுகின்றார் வள்ளலார்.

''வினையடைந்தே, மனவீறுடைந்தே, நின்று வேற்றவர் தம்
மனையடைந்தே,மனம்வாடல் உன்தொண்டர் மரபல்லவே''

என்பது அருட்பா.

''நின் தொண்டர்களில் யானும் ஒருவன். இதுவரை நின் தொண்டர் எவரும் வினையடைந்து, மனவலிமையுடைந்து தடுமாறி நின்ற வரலாறில்லை; அப்படியிருக்கும்போது, மரபு மீறிய செயலாக என்னைமட்டும் ஏன் இப்படிச் சோதிக்கிறாய்'' என்று உரிமையோடு வள்ளலார் கேட்கும் பாங்கு நினைந்து மகிழத்தக்கது. ஆனால் அப்படி உரிமையோடு கேட்கும் தகுதி அவருக்கிருந்தது. அந்தத் தகுதியை நாமும் பெறுவோமென்றால் அதே உரிமைக்குரலை எழுப்பலாம்; மாயை வினைகளாகிய அடிமைத் தளைகளை அறுத்தெறியலாம்.

அஃறிணைப் பொருட்கள்

மனம் எவ்வளவு தீய தன்மைகளைக் கொண்டுள்ளது என்பதை அவ்வப்போது விளக்கியும்கூட புலவர்கள் அமைதியடையவில்லை; அந்தத் தீய தன்மைகளையே நேரடியாகக் கூறியதுடன், அவற்றின் இயல்புகளை விளக்குவதற்கு அஃறிணைப் பொருட்களையே அடைச்சொற்களாகவும் பயன் படுத்தியுள்ளார்கள். 'மனம்' என்ற ஒன்றைப் பெற்றதனால்தான் மனிதன் ஏனைய பிறப்புக்களைவிட உயர்ந்த நிலை பெற்றான்; அந்த மனமே தாழ்ந்த நிலையையடையும்போது அதை விளக்குவதற்கு அஃறிணைப் பொருட்களைத் தேடவேண்டிய நிலை

புலவர்கட்கு ஏற்பட்டுள்ளது. அதுவும் கருங்கற்பாறையையும், இரும்பையும், குரங்கையும் அதன் தீய தன்மைகளை விளக்குவதற்கு எடுத்துக் கொண்டவிதமே அம்மனத்தின் இழிவைப் புலப்படுத்தும்.

"மருள் நிறைந்த மனக்கருங்கற் பாறை"

என்று குறிப்பிடுகிறார் இராமலிங்க அடிகளார். பாறை எவ்வளவு உறுதியாக, உருகும் தன்மை சிறிதுமற்று இருக்குமோ அதுபோல அம்மனம் இருக்கிறதாம். பிறர் துன்பங்கண்டு இரங்கும் மனம் மெழுகுபோல் காணப்படும். சிறிது அனல்பட்டால்கூட அது உருகிவிடுமே! அதே போலப் பிறர்வாடும் போதெல்லாம் தானும் உருகி வாடும் நிலை அம்மனத்திற்கு இருக்கும். ஆனால் கருங்கற் பாறைக்கு? அதிலும் மருள்நிறைந்த கருங்கற் பாறையாக அது இருக்கும்போது உருகும் தன்மை எப்படி அதனிடம் இருக்க முடியும்?

அக்கருங்கல் மனம், கல்லாகவே இருந்துவிட்டாலும் பரவாயில்லை; மேலும் என்னென்ன மாயங்கள் செய்கின்றன! தெருவிலே குரங்கை ஆடவைத்து வேடிக்கை காட்டுபவன், தன் விருப்பப்படியெல்லாம் எப்படி அதை ஆட்டுவிப்பானோ அதே போல மனமென்ற குரங்காட்டியும் நம்மை ஆட்டுவிக்கிறதாம்.

"கருங்கல் மனக் குரங்காட்டி"

என்று குறிப்பிடுகிறார் இராமலிங்க அடிகளார்.

சில நோய்க் கிருமிகள் சாக்கடைகளிலும் அழுகிய பொருட்களிலும் காணப்படும். அந்நோய்க் கிருமிகள் நம்மைக் கடித்து விடுமென்றால் அக்கிருமிகளால் உண்டாகும் நோயும் நம் உடம்பில் பற்றிக்கொள்ளும். அதேபோல மனமாகிய நோய்க் கிருமியும் நம்மைக் கடித்து விடுமென்றால் அதனால் சில தொற்றுநோய்களும் நம்மைத் தொற்றிக் கொள்கின்றன. அவை என்னென்ன நோய்கள் தெரியுமா? வஞ்சனை, பொறாமை, லோபம் ஆகிய நோய்களாம்! இவைகளைக் காட்டிலும் கொடிய நோய்கள் வேறென்ன இருக்கமுடியும்? பிறரை வஞ்சிக்கும் தன்மையும், பிறரது ஆக்கம்கண்டு பொறாமைப்படும் இழிநிலையும். சேர்த்துவைத்த பெரும் பொருளைத் தானும் அனுபவிக்கா

மல், பிறருக்கும் கொடுக்காமல் இருக்கும் நிலையும் ஒரு மனத்தில் இருக்குமென்றால் அவனை மனிதன் என்று குறிப்பிடுவதே தவறு அன்றோ!

"வஞ்சனை, பொறாமை, லோபம் வைத்த மனமாங்கிருமி" என்பது தாயுமானவர் பாடல்.

கருங்கல்லாகவும், குரங்காட்டியாகவும், நோய்க்கிருமியாக வும் காணப்படும் மனம் பகுத்தறிவற்ற விலங்காகவும் காணப்படு கிறது. விலங்குகட்கு நாகரிகம் கிடையாது;பண்பாடு கிடையாது; கொண்டதே கோலம்; குறிக்கோளில்லாத வாழ்வு; உண்பதும் உறங்குவதுமே வாழ்க்கை இலட்சியங்கள்; உடையைப்பற்றியோ மானத்தைப் பற்றியோ கவலையில்லை! இந்த நிலையில் ஒரு மனிதனின் வாழ்வும் அமையுமென்றால் அவனை மனிதன் என்று எவர்தான் ஏற்பர்? இத்தகு நிலைக்கு அவனை ஆக்கும் ஆற்றலுடையது அவன் பெற்ற மனம்! அதனையே 'விலங்கு மனம்' என்று குறிப்பிடுகிறது திருவாசகம்.

கல்லைப் போலவே வலிய தன்மைகொண்டது இரும்பு; இரண்டிற்கும் இடையில் ஒரு சிறு வேறுபாடு, கல்லை எந்தச் சக்தியாலும் உருக்கமுடியாது; உடைக்கவே முடியும்; ஆனால் இரும்பை நெருப்பிலே காட்டினால் உருகும். அதுபோலவே மனித மனங்களும். கல்போன்ற மனமுடையாரைத் திருத்து வதென்பது இயலாத செயல்; கல் உடைவதுபோன்று அவர்கள் மனமுடையுமே தவிர மனம் திருந்தமாட்டாது. ஆனால் இரும்பு போன்ற மனமுடையார், இறைவன் அருளாகிய நெருப்புப் பட்டால் உருகிவிட வாய்ப்புண்டு; மனம் திருந்தி மாண்படைய வழியுண்டு. ஆனால் தாயுமானவரோ இறைவன் கல் மனத்தை யும் கரைப்பதற்குக் கடமைப்பட்டவன்; அவன் கருணை வைத் தால்மட்டுமே கல்லும் கரையும் என்ற கருத்தில்,

"கல் மனத்தைக் கரைக்கக் கடவதே"

என்று கூறுகின்றார். எனவே, கல் மனம் பெற்றவர்களும்கூட கசிந்துருகிக் கண்ணீர் வடித்தால் இறைவன் அருள்புரிவான் என்ற உண்மை புரிகிறது.

நெருப்பு, தன்னைச் சார்ந்த பொருட்களையெல்லாம் எரித்து அழித்துவிடும்; தீய மனத்திற்கும் அந்தத் தன்மை உண்டு என்பதை உணர்த்துகின்ற வகையில்,

"மனமெனும் காலச்செந்தீ"
என்று கூறுகிறார் கம்பர்.

மனத்திலே தீய தன்மைகளாகிய இருள் சூழ்ந்துள்ளதை உணர்ந்து, "இருளார் மனத்தினிட ருழந்தேன்" என்று வருந்துகிறார் வள்ளலார். இப்படிப் பலரும் மனத்தின் தீய தன்மைகளை விளக்கியிருந்தாலும் அனைவருமே அதற்குக் காணும் மருந்து ஒன்றுதான்.

"மாநிதியே எனக்கருள் வாய் மனக்கலக்கம் தவிர்த்தே"
என்று இராமலிங்க அடிகள் வேண்டுவது போல இறைவனிடம் வேண்டி நம் மன மாசுகளைத் தீர்ப்பதே பக்தி இலக்கியங்கள் காட்டும் முடிபாகும்.

மனமும் உவமையும்

மனத்தின் தன்மை, தொழிற்படும் நிலைகள் ஆகியனவற்றை அடை சொற்களின் மூலமாக விளக்கியுள்ள திறம் கண்டோம். இனி, உவமைகளின் மூலம் எவ்வாறு உணர்த்தப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

1. கல்மனம் — திருநாவுக்கரசர்

1. விலங்கு மனம்
2. கற்றா மனம்
3. கல்வகை மனம்
4. இரும்பு மனம் — மணிவாசகர்

1. இரும்பு மனம்
2. கல் மனம்
3. கறங்கு போல் மனம் — கம்பர்

1. பேய் மனம்
2. கல் மனம்
3. மா மர்க்கட மனம் — தாயுமானவர்

1. கல் மனம்
2. பேய் மனம்
3. இரும்பு மனம்
4. குரங்கு மனம் — வள்ளலார்

1. கல் மனம் — பாரதியார்

உவமைகளால் உணரப்படுவன

ஆய்விற் கெடுத்துக் கொள்ளப்பட்ட பத்து நூல்களில் நான்கு நூல்கள் மனத்தின் தன்மைகளை விளக்குவதற்கு உவமைகளைக் கையாளவே இல்லை; எஞ்சிய ஆறு நூல்களில் உவமைகள் காணப்படுகின்றன. அப்படிக் காட்டப்படும் உவமைகள் அனைத்துமே மனத்தின் தீய தன்மைகளை விளக்குவதற்கே கையாளப்பட்டுள்ளன. நல்ல தன்மைகளை உவமைகள் மூலம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதியிருக்கலாம்; அல்லது, பக்தி இலக்கியங்கள் படைத்த அனைவருமே தீய தன்மைகளால் கெட்டழியும் மனங்களை உய்வடையச் செய்ய வேண்டுமென்பது கருதியே பெரும்பாலும் பாடல்களைப் பாடியுள்ளார்களாதலால், அத்தீய மனத்தின் தன்மைகளை உலகோர்க்கு உணர்த்த வேண்டு மென்றெண்ணி அவைகளை மட்டும் உவமைகளின் வாயிலாக உணர்த்தியிருக்கலாம்.

மனத்தை, கல்லோடும், கருங்கற்பாறையோடும், இரும்போடுமே பல முறை உவமித்துக் கூறியுள்ளார்கள். ஓரிடத்து நிலைத்து நில்லாமல் அங்குமிங்கும் ஓடி நம்மை அது அலைக்கழிக்கும் நுட்பம் கருதிக் குரங்கு மனம் என்று கூறியுள்ள நுட்பம் போற்றற் குரியது.

"கள்ளக் குரங்காய் உழல்கின்ற மனத்தேன்"

என்று உருகுகின்றார் வள்ளலார். கள்ளம் நிறைந்த குரங்கானது உழன்று திரிவது போல தீயதன்மையுடைய மனமும் உழன்று தீராத் துன்பத்திற்குள்ளாக்கும். மனத்தின் தீய தன்மையை விளக்குவதற்கு அதைப் பேயுடன் உவமித்துப் பேசுகின்றார் வள்ளலார்.

"கல் மனமாந்திட் டுண்ட பேய்"
"இரும்பேய் மனத்தினர்பால் இசையாத இளங்கிளியே"

என்பன அவர் தம் அருட்பாக்கள். இதுவும் கூட மனத்தின் நிலையற்ற தன்மையை, அதாவது அமைதியின்றி அலையும் தன்மையினையே புலப்படுத்தும். 'கறங்கு போல் மனம்' என்று கம்பர் குறிப்பிடுவதும் சுழன்று கொண்டிருக்கும் மனத்தின் தன்மையைக் காட்டுவதேயாகும்.

மனமும் உருவகமும்

1. மனமெனுந் தோணி
2. மனமே கோயில் — திருநாவுக்கரசர்

1. மனவிளக்கு — திரு மூலர்

1. மனக்காம வேடன்
2. மனமெனும் இழுதை
3. மனமெனும் தீ
4. மனப் பேய் — கம்பர்

1. மனக்கல்
2. மனோரதம்
3. மனக் குரங்கு
4. மனப் பாம்பு — தாயுமானவர்

1. மன வஞ்சமாக் கடல்
2. மனக் கருங்கல்
3. மனக் குகை
4. மனக் குரங்கு
5. மனப் பம்பரம்
6. மனம்-பிள்ளைக் குரங்கு
7. மனக் கங்குல்
8. மனக் கோயில்
9. மனப்பாவி
10. மனமான சிறுவன்
11. மனப் பேய் — வள்ளலார்

1. மனக் கிலி
2. மனப் பேய்
3. மனப் பீடம்
4. மனச் சிறுபுள் — பாரதியார்

உருவகங்கள் உணர்த்துவன

மனத்தின் தீய தன்மைகளை மட்டுமே உவமைகள் உணர்த்தியதைக் கண்டோம். ஆனால் உருவகங்கள் நல்ல தன்மைகளை விளக்குவதற்கும் கையாளப்பட்டுள்ளன. எனினும் பெரும்பாலும் தீய தன்மைகளை விளக்குவதற்கே உருவகங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

மனப்பீடம், மனவிளக்கு, மனமெனும் தோணி, மனமே கோயில் போன்ற உருவகங்கள் நல்ல மனத்தின் தன்மையை நாமறிந்து கொள்ளத் துணை செய்கின்றன.

'பீடம்' என்ற சொல் இருக்கையை உணர்த்துமெனினும் சாதாரணப் பொருளைக் குறிக்கும் சொல் அல்ல அது; மனிதர்களின் இருக்கையைப் பீடம் என்று சொல்வதில்லை; இறைவன் எழுந்தருளும் இடம் ஒன்றினையே பீடம் என்று சொல்வது மரபு. அம்மரபின்படி பார்த்தால் மனத்தின் மாண்பு நன்கு விளங்கும். அது தீய தன்மைகள் குடியிருக்கும் இடம் அல்ல; இறைவன் கொலுவிருக்க வேண்டிய பீடம். அப்பீடத்தைத் தூய்மையோடு பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப் புணர்ச்சி இருக்குமென்றால், பீடம், பீடமாகவே என்றும் திகழும்.

மனத்தையே காரிருளாகவும் உவமித்துக் கூறியுள்ளார்கள்; தீய தன்மைகள் அதில் சேர்ந்திருக்கும் போது. அம்மனமே இருள் மாற்றும் விளக்காகவும் இருக்கும் சிறப்புடையது. இவ்விளக்கிற்கு இரண்டு தன்மைகள் உண்டு; தீய தன்மைகளாகிய இருளை அகற்றுகிறது; இறைவன் எழுந்தருளி இருப்பதை உணர்த்துகிறது. சோதி வடிவிலேயே இறைவனைக் காணும் மரபு தமிழ்நாட்டில் உண்டே! அருட் பெருஞ் சோதி யென்றுதானே இறைவனைக் குறிப்பிட்டார் இராமலிங்க அடிகளார். அதை உணர்த்தும் வகையில்தான் மனவிளக்கு என்ற உருவகம் திகழ்கிறது.

பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு முயன்று நீந்திக் கொண்டிருக்கிறோம்; முடியவில்லை, கடலுள் அழுந்தி விடுவோமோ என்ற அச்சம்! அந்நிலையில் நமக்கோர் தோணி கிடைக்கிறது! இப்போது அச்சம் அகலத் தொடங்குகிறது. கைக்கு எட்டிய தோணியை எப்படியாயினும் செலுத்திக் கடலைக் கடப்பதற்கு முயற்சி செய்கிறோம். சிலர் திறமையோடு ஓட்டிச் சீக்கிரமே கடந்து விடலாம்; சிலர் மெதுவாகச் செல்லலாம். கடலின் இடையிலே பாறைகள் உண்டு; பயங்கர மீன் வகைகளும் உண்டு; இவைகளையெல்லாம் தாண்டி, தப்பித்தான் தோணியைச் செலுத்த வேண்டும். தோணியாக நமக்குத் தரப்பட்டுள்ளதே நம்முடைய மனம். இந்த நுட்பத்தையே 'மனமெனுந் தோணி' என்ற உருவகம் உணர்த்துகிறது. தோணியை ஒழுங்காக ஓட்டிச் செல்லாவிட்டால் கரையேறுவதற்குப் பதில் கடலுள் மூழ்கி விடவும் கூடும் என்ற எச்சரிக்கையினையும் இவ்வுருவகம் உணர்த்தி நிற்கிறது.

மனத்தை இறைவன் எழுந்தருளும் பீடமாகக் குறிப்பிட்டது போலவே கோயிலாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். பக்தி இலக்கியங்கள் பலவற்றிலும் இத்தகைய பாங்கினைக் காண்கிறோம்.

"என்மனங் கோயில் கொள் ஈசன்"

என்பது திருமந்திரம்.

"நினைப்பவர் மனங்கோயிலாகக் கொண்டவன்"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

"நினைந்தவர் மனங் கொண்ட கோயில்"

என்பது திவ்ய பிரபந்தம். மேற்காட்டிய சான்றுகளிலிருந்து நமக்கோர் உண்மை புலப்படுகிறது. நாம் நினைந்து இறைவனை வணங்கும் போதுதான் அவன் வந்து மனத்தில் கோயில் கொள்ளுவான்; இல்லையேல் அவன் வருவதுமில்லை என்ற குறிப்பையே 'நினைப்பவர் மனம்' என்ற சொல் உணர்த்துகிறது. இவைகளெல்லாம் அதன் நல்ல தன்மைகள்!

அதிர்ச்சி தரக்கூடிய 'கிலி' யாகவும் மனத்தை உருவகம் செய்துள்ளார்கள். 'புலியடிக்கு முன்னே கிலியடிக்கும்' என்பது பழமொழி. தீய தன்மைகள் உடைய மனத்தைப்பற்றி நினைத்தாலே அச்சம் பிறக்குமாம்; அவ்வளவு கொடிய செயல்களை அம்மனம் விளைக்கும் தன்மையுடையது. மனத்தைப் பேயாகப் பலரும் உருவகம் செய்துள்ளார்கள். நிலையின்றி அங்குமிங்கும் அலைவதுடன் தான் பற்றியவரையும் ஆட்டிப் படைக்கும் தன்மை பேய்க்கு உண்டு; பேய் பிடித்த ஒருவரின் அறிவு நெறி வழிநில்லா; புலன்கள் முறையோடு செல்லா; உணவின்றி, உறக்கமின்றியும்கூட அவர்கள் உழல்வர். அத்தகைய செயல்களையெல்லாம் தீய மனம் செய்யும் தன்மையுடையது.

மனத்தைச் சிறியபறவையாகவும் உருவகப் படுத்தியுள்ளார்கள். பறவையைப் போல மனமும் பறந்து கொண்டிருக்கும் தன்மையினையே இவ்வுருவகம் உணர்த்துகிறது. பறக்கும் தன்மையிருப்பினும் அது சிறு பறவையாக இருப்பின், எங்கே உணவு கிடைக்கும்? எப்படிச் செல்ல வேண்டும் என்பதையெல்லாம் உணர்ந்து செல்லும் தகுதி அதனுக்கிருக்காது; விரும்பியவாறு பறந்து செல்லும்; வேடனுக்கோ, பிற பெரும்

பறவைக்கோ விருந்தாகவும் கூடும்; இந்த நுட்பமெல்லாம் விளங்கும் விதத்தில்தான் 'மனச்சிறுபுள்' என்ற உருவகம் அமைந்துள்ளது. மனமும் தான் விரும்பியபடி யெல்லாம் செல்லத் தொடங்கினால் விளைவு என்னாகும்? அதனால்தானே 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்று ஆரம்பக் கல்வியின் போதே எச்சரித்துள்ளார்கள்!

வஞ்சக எண்ணங்களாகிய அலைகள் மோத, அமைதியின்றி எப்போதுமே ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் கடலாகவும் மனத்தை உருவகம் செய்துள்ளார்கள். ஆரவாரம்மிக்க மனத்தால் எந்தநல்ல செயல் நடக்க முடியும்? அதிலும் வஞ்சக மாக்கடலாகவே அது ஆகிவிடுமென்றால், அம் மனத்தால் ஏற்படும்தீங்குகளை எடுத்துரைக்கவும் கூடுமோ! ஒளி உட்புக முடியா வண்ணம் எப்போதுமே இருள் சூழ்ந்து இருக்குமிடமே குகை. அது கொடிய விலங்குகள் அல்லது வேறு தீய எண்ணமுடைய மனிதர்கள் பதுங்கியிருப்பதற்கு மட்டுமே பயன்படக் கூடியது. அத்தகைய இருட்குகையாகவும் மனம் இருக்கும் என்பதையே 'மனக்குகை' என்ற உருவகம் உணர்த்துகிறது. ஓரிடத்தில் நிற்காது, அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருப்பது பம்பரம், ஆட்டுவிப்பவரின் விருப்பத்திற்கேற்ப ஆடும் இயல்புடையது அது. அதுபோலவே மனமும் இயங்கும் தன்மையுடையது என்பதை உணர்த்தவே மனத்தைப் பம்பரமாக உருவகப்படுத்தியுள்ளார்கள். பம்பரத்தை யாரோ ஆட்டு விக்கின்றார்கள்; மனத்தை மாயாசக்திகள் ஆட்டுவிக்கின்றன.

மனத்தைப் புதுமையான முறையில் சிறுவனாக உருவகப் படுத்தியுள்ளார் வள்ளலார். சிறு பறவை எவ்வாறு திசை மாறிச் சென்று அழிந்து படுகிறதோ அதுபோலவே அறிவிலாச் சிறுவனும் தவறுகள் பல புரிந்து தன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்கிறான். ஆனால் இந்தச் சிறுவனோ தனக்கு அறிவு தரும் ஆசிரியரையும் மதிக்காமல் அலட்சியப்படுத்திவிட்டுத் தீய வழிசென்று துன்புறுகின்றானாம்.

> "மனமான ஒருசிறுவன், மதியான குருவையும்
> மதித்திடான்"

என்பது திருவருட்பா. மனம் ஒரு சிறுவன் என்றும், அச்சிறுவனுக்கு அறிவு தரும் குருவாய் உள்ளது அறிவு என்றும் கூறியுள்ள

உருவகம், மனம், அறிவு இரண்டினுக்கும் உள்ள தொடர்பை நாம் அறிந்து கொள்ளத் துணைசெய்கின்றது.

காட்டிற்குச் சென்ற வேடன், எங்கே பறவை அகப்படும்? விலங்குகள் சிக்கும் என்று எண்ணியவனாக அலைவான். அவன் நோக்கம் நிறைவேற எந்த முறையினையும் பின்பற்ற அவன் தயங்குவதில்லை. அதுபோலவே மனமாகிய வேடனும் அலைகின்றானாம்; ஆனால் இந்த வேடனோ எல்லாவற்றினையும் வேட்டையாடுவதில்லை; காமம் ஒன்றே இவனது நோக்கம். 'மனக்காம வேடன்' என்று கம்பர் கூறும் உருவகம் கற்பனை நயமும் கருத்துச் செறிவும் கொண்டதாகும். மனத்தை, அதன் எரித்து அழிக்கும் தீய தன்மை நோக்கி தீயாகவே உருவகம் செய்துள்ளார்கள். விரைந்து செல்லும் தன்மையும் மனத்திற்கு உண்டு. காற்றினும் கடிது செல்லும் ஆற்றல் பெற்றது மனம்.

"மனவேக மென்னவே சென்றோடி யாடி வருவீர்"

என்று கூறுகிறார் தாயுமானவர்.

"மனத்திற் செல்லும் தலைத் தடந்தேரான்"

என்று கூறுகின்றார் கம்பர். நம் உடல் ஆயிரம் கற்களுக்கு அப்பால் இருக்க மனம் மட்டும் மலைகளையும், கடலையும் தாண்டிச் சில நொடிகளுக்குள் எங்கெங்கோ சென்று திரும்பி வந்து விடும். இத்தன்மையினையே 'மனோரதம்' என்ற உருவகம் உணர்த்துகிறது.

பாம்பிற்குப் பல்லில் விடமுண்டு; தீண்டுபவர்களை மாய்க்கும் தீய தன்மையும் உண்டு. சில பாம்புகளுக்கு அத்தன்மை இருக்க மாட்டாது; இருப்பினும் அதன் சீற்றம்,தோற்றம் யாவும் காண்பவருக்கு அச்சத்தை விளைவிக்கும். அதுபோன்ற தன்மைகள் மனத்திற்கும் உண்டு. நச்சு மனங்களும் உண்டு; நச்சுத் தன்மை இல்லாவிட்டாலும் இருப்பது போலத் தோற்றி, அதுவே தனக்கு நல்லது என்று எண்ணித் திரியும் மனங்களும் உண்டு. விடமற்ற பாம்புகள் கூட தங்களது போலிச் சீற்றத்தால், அடிபட்டு மாய்கின்றனவே, அது போல மாயும் மனங்களும் உண்டு.

இதுகாறும் காட்டிய பல்வேறு உருவகங்களும் மனத்தின் தீய தன்மைகளை எப்படியெல்லாம் சித்தரித்துக் காட்டுகின்றன என்பதைக் கண்டோம்.

மனமும் ஆசைகளும்

மனம் துன்ப மடைவதற்குக் காரணமாகவிருப்பது ஆசைகளே. எதைப் பார்த்தாலும் அதை அடைய வேண்டுமென்ற விருப்பு; பார்த்ததைப் பற்றிக் கொள்ளும் தன்மை; இவையெல்லாம் மனத்திற்கு இயல்பாக அமைந்தவைகள். நல்லனவற்றைப் பற்றிக் கொள்ளும்போது நலம் விளைகிறது; நல்லனவற்றை அடைவதற்கு முயலும் போது- ஆசைப்படும்போது இன்பம் பயக்கிறது. அதற்கு மாறான நிலை உருவாகும் போது தீராத துன்பங்களே உருவாகின்றன. பொதுவாகத் தீயனவற்றின் மீது தான் மனத்திற்கு ஆசைகளே உருவாகின்றன.

"ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம் பஞ்செனவும்
மனமது அலையும்"

என்கிறார் தாயுமானவர். பெருங்காற்றில், சாதாரண இலவம் பஞ்சுபட்டால் அது எவ்வளவு தூரம் அலைக்கழிக்கப்படும்! இரண்டும் இரண்டு துருவங்கள் அல்லவா! அந்த நிலையில் நம் மனம் தவிக்கும் போது அதற்கு அமைதி ஏது?

ஆசையால் மனம் தவிப்பதைக்கண்டோம். அந்த ஆசைகளுக்கு அளவுண்டா? முடிவு உண்டா? இல்லைஎன்கிறார் இராமலிங்க அடிகளார். ஆழம் காண முடியாத கடலைத்தான் மனத்து ஆசைக்கு அவர் உதாரணம் காட்டுகிறார்.

"மனத்தாசை யொரு கடலோ!"

என்று அவரும் வியப்பில் மூழ்கியே நிற்கின்றார்; அதற்கு மேலும் அதன் தன்மைக்குச் சான்று காட்டுவதற்கு எப்பொருளும் அகப்படவில்லை போலும்! இந்த ஆசைகள் இயல்பாகவே மனத்தில் தோன்றுகின்றனவா? இல்லை, நாம் சேர்த்துக் கொள்பவைகள் தானா? என்ற ஐயம் எழலாம். ஏனெனில் ஐயம் எழுதல், ஆய்ந்து முடிபு கூறல் எல்லாம் மனத்தின் செயல்களல்லவா? நம் மனமும் இப்போது செயல்படுகிறது. அந்த ஐயத்தை அகற்றி விடுகிறார் கம்பர். ஆசைகள் நாம் ஆக்கிக் கொள்பவைகள் என்று விளக்குகிறார் அவர்.

"ஆக்கினேன் மனத்து ஆசை"

என்பது அவரது விளக்கம். எனவே நாம் முயன்றால் ஆசைகளை மனத்தில் ஆக்காமல் இருக்கலாம்; துன்பங்களின் பிடியில் சிக்காமல் இருக்கலாம்.

மனமும் வாக்கும்

மனமும் வாக்கும் ஒரே நிலையில் அமைய வேண்டும்; அந்த நிலையில் பிறப்பவைகள்தான் உண்மைகள். மனம் ஒன்றை நினைத்திருக்கும் போது, வாய் வேறொன்றைப் பேசுமென்றால் பிறப்பது பொய்மைகளே. அப்படிப் பேசுமொருவற்கு அமைதியே இருக்க முடியாது; அது போலி வாழ்வே!

"வாயொருபாற் பேச மனமொருபாற் செல்ல"

என்கிறார் வள்ளலார், அத்தகைய இழிந்த நிலையில் உள்ளவர்களை நினைத்து.

பல நேரங்களில் நாம் செய்யும் செயல்களின் நன்மை தீமைகளை நம் மனம் அறியும்; அதனால் ஏற்படும் விளைவுகளையும் அது நன்கறியும். எனவே உண்மையைக் கூறிவிட வேண்டுமென்று அது துடிக்கும். ஆனால், அதையும் மீறிக்கொண்டு அதற்கு மாறான ஒன்றை நம் வாய் கூறிவிடும். தற்காலிகப் பயன் அப்போது விளையலாம். ஆனால் நிரந்தரத் துன்பத்திற் கல்லவா பின்பு ஆளாக வேண்டியதிருக்கும்! மனம் ஒய்ந்து விடமாட்டாதே! அது உறுத்திக் கொண்டே யல்லவா இருக்கும்! அதைத்தான் 'மனசாட்சி உறுத்துகிறது' என்று கூறுவர்.

"பிறர்க்கு மொழிந்திட என்மனமெழுந்தாலும்
வாயெழுமோ?"

என்று கேட்கிறார் வள்ளலார்! முரண்பட்ட நிலைகள் இவைகள்! எனவே, இம்முரண்பாடுகளைப் போக்கி வாக்காலும் மனத்தாலும் ஒன்றிய நிலையில் இறைவனை நினைக்கும் போதுதான் அவன் நமக்கு அருள்புரிவான். மனம் மட்டும் அவனை நினைக்க, வாய் மாறுபட்டுப் பேசினாலும் பயனில்லை;வாய் மட்டும் அவன் புகழ் பேச, மனம் வேறொன்றை நினைத்தாலும் பயனில்லை. ஆனால் இறைவனோ வாக்காலும், மனத்தாலும் மதிக்க முடியாத நிலையில் இருப்பதாகவே தாயுமானவர் கருதுகிறார்.

"வாக்கால் மனத்தால் மதிப்பரியாய்"

என்பது அவர் பாடல்.

மனமும் கண்ணும்

மனத்திற்கும் வாக்கிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் போலவே மனத்திற்கும் கண்ணிற்கும் நெருங்கிய தொடர்பு

உண்டு. 'கருணை மிக்க கண்கள்' என்பார்கள். கண்களுக்கென்று ஏது அந்தத் தனித்தன்மை? அவன் மனம் கருணைமிக்க மனமாக இருக்கிறது; அந்தத் தன்மை கண்ணில் வெளிப்படுகிறது. எனவே, மனத்தின் நிலையை நாம் அறியப் பெரிதும் துணையாக இருப்பது கண்களே! இரங்கும் தன்மையை 'கண்ணோட்டம்' என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பதும் இந்தத் தன்மை கருதியேயாம். இவ்வுண்மை உணர்ந்தே கண்ணையும் மனத்தையும் இணைத்துப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.

"கண்ணகத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன்"
திவ்யபிரபந்தம்

"தொழுதனன் மனமும் கண்ணும் துளங்கினன்"
"கண்ணொடு மனமவை சுழன்ற கற்பினாள்" கம்பர்
"கண்ணும் மனமும் களிக்கு மெழிற் கண்மூன்றுடையீர்"
"காமுகர் கண்ணைக் கட்டி மனங்கட்டி"
இராமலிங்கஅடிகள்

இதுபோன்று பல இடங்களில் காணமுடிகிறது. எனவே கண், மனத்தின் நிலையைப் புலப்படுத்துவதோடு நல்லனவற்றை மட்டுமே காணும் பயிற்சியும் பெற வேண்டும். அப்போதுதான் அதனால் மனத்திற்கும் நன்மை பயக்கும்.

மனத்தை அடக்குதல்

குரங்காகத் தாவியும், பறவையாகப் பறந்தும், பேயாக அலைந்தும், கடலாக ஆர்ப்பரித்தும் திரியும் மனத்தை அடக்குதலே வலிமைகளுக்கெல்லாம் வலிமையாகும்.

"மனத்தைக் கட்ட அறியாமலே வாடினேன்"

என்கிறார் தாயுமானவர். அப்படித் தாமும் கட்ட முயன்று அடைந்த தோல்வியை இராமலிங்க அடிகளாரும் ஏற்றுக் கொள்கிறார்.

"மனமோ என் வசப்படா"

என்றஅவரது சொற்கள் அவரதுஆற்றாமையைப் புலப்படுத்தும். அப்படி வசப்படா மனத்தின் போக்கில் அவரும் உடன்சென்று அடைந்த துன்பத்தையும் புலப்படுத்தியுள்ளார்.

"துள்ளற் கெழுந்த மனத்துடனே துள்ளியலைந்த
துட்டன் எனை"

என்று தன்னையும் ஒரு துட்டனாக அவர் குறிப்பிடுவது மனத்தின் கட்டுக்கடங்காத் தன்மையால் அவர் பட்ட துன்பத்தின் தன்மையைக் குறிப்பிடுதற்கே! அப்படியென்றால் கட்டுக்கடங்காத மனத்தை எப்படித்தான் கட்டுப்படுத்துவது? வள்ளலார் கடைசியாக இறைவனிடமே அக்குறை தீர்க்கும் பொறுப்பை விட்டு விடுகிறார்.

"இயங்கா மனமும் கயங்கா நிலையும் இகபரத்தே
மயங்கா அறிவும் தியங்காநெறியும் மகிழ்ந்தருள்வாய்"

என்று அவர் வேண்டுதல் போல நாமும்வேண்டுவதே நம் மனத்தைக் கட்டுப் படுத்தற்குரியநெறியாகும்.

விளித்தொடராக மனம்

நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற சொற்களைப் போல மனமும் விளித்தொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிகிறோம்.

1. கிற்றவா மனமே, கெடுவாய் — மணிவாசகர்
2. என்மனமே, உன்னை வாழத்தலைப் பெய்திட்டேன் — திவ்யபிரபந்தம்
3. மனமே, நம்மோல உண்டோ சுத்த மூடர் — தாயுமானவர்
4. மனனே, நின் வண்புகழை முற்றும் இவண் ஆர்தான் மொழிவாரே — வள்ளலார்
5. மனமே எனைநீ வாழ்வித்திடுவாய் — பாரதி

ஏனைய இலக்கியங்களில் இம்முறை பின்பற்றப்படவில்லை. மனத்தின் தீய தன்மைகளையே மிகுதியும் கண்டு, அவற்றை விளக்குவதற்குப் பல சான்றுகளைப் பலரும் காட்டியுள்ளதால் அதனை முன்னிலைப்படுத்திப் பேச வேண்டிய அவசியம் மிகுதியும் ஏற்படவில்லை போலும்.

நிறைவுரை

மனத்தின் சொல்லமைப்பு, அடைச்சொற்களால் விளக்கப்பட்ட அதன் தன்மைகள், வினை, மாயை ஆகியவற்றுடன் இதற்குள்ள தொடர்பு முதலியன ஆராயப்பட்டன. வாய், கண் போன்ற பொறிகளுக்கும் மனத்திற்கும் உள்ள உறவு நிலைகளும் விளக்கப்பட்டன. மனத்தின் தலைமைத் தன்மைகளும் எடுத்துக் காட்டப்பட்டன.

மனமும் வாழ்வும்

ஒன்றும் பலவும்

மனத்தின் தன்மைகளையும், அதன் பல்வேறு நிலைகளையும், அந்தந்த நிலைகளுக்கேற்ப அது பெறும் பெயர்களையும் இலக்கியச் சான்றுகளோடு கண்டோம். ஒவ்வொரு நிலையினையும் உணர்த்தத் தனிச்சொல்லிருப்பினும் சில தன்மைகள் பல நிலைகளுக்கும் பொதுவாக விருப்பதனையும் காண்கிறோம். உதாரணமாக, மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற பல நிலைகளையுமே இறைவன் எழுந்தருளும் கோயிலாகப் பலரும் கண்டுள்ளனர். இதற்குக் காரணம், நிலைகள் தன்மைகளுக்கேற்ப வேறுபட்டிருப்பினும் அனைத்திற்கும் மூலமாகவும் முதலாகவுமிருப்பது மனமே. எனவே அதன் தன்மைகள் பல நிலைகளிலும் கலந்திருக்கத் செய்யும்!

ஒருவரே அண்ணனாகவும், தம்பியாசவும், கணவனாகவும், நண்பனாகவும், மகனாகவும், தந்தையாகவும் புரியும் தொழிலுக்கேற்ப அலுவலராகவும் இருப்பதைப் போலத்தான் மனத்தின் பல்வேறு நிலைகளும். அண்ணன், தம்பி என்ற நிலைகள் பலவற்றை அவர் பெறுவதனால் மட்டுமே ஒருவர் பலராகி விட முடியாது. அதுபோலத்தான் மனத்தின் நிலைகளும். நிலைகளுக்கேற்ப அவரது தன்மைகள் மாறிடினும் சில பொதுப்பண்புகளை எல்லா நிலையிலும் அவரிடம் காண முடியும். மனத்தின் தன்மைகளுக்குள் மாறுபாடுகள் தெரிந்திடினும், சில பொதுத் தன்மைகள் அனைத்து நிலைக்குமே பொருந்தும். இருப்பினும், நுட்பமான வேறுபாடுகள் ஒவ்வொரு நிலைகளுக்கிடையிலும்

உண்டு என்பதும், அந்த வேறுபாடுகளுக் கேற்பவே அவைகள் பெயர்களைப் பெற்றுள்ளன என்பதும் உணரத்தக்கது.

மனமே காரணம்

பல்வேறு நிலைகளையும் மனம் பெற்றிருப்பது போலவே, நமது வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் மனம்பெற்றுள்ள இன்றியமையாமையும் எண்ணப்பட வேண்டிய தொன்றாகும். மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மனமே முதன்மைச் சக்தியாக இருந்து இயக்கி வருகிறது. நம்முடைய பெருமைக்கும் சிறுமைக்கும், வெற்றிக்கும் தோல்விக்கும் அனைத்திற்குமே காரணமாக விருப்பது நமது மனமே! சிலரது வாழ்வு புயலாய், பூகம்பமாய் மாறி இடையிலேயே முடிவதைக் காண்கிறோம்; ஒரு சிலர் தென்றலாய் மெல்லிசையாய் இனிமையான வாழ்வு வாழ்ந்து எண்ணியதை எண்ணியபடி எய்திப் பின் இயற்கை எய்துவதையும் காண்கிறோம். எப்போதும் பதட்டமான நிலையிலே சிலர்; எந்த நிலையிலும் பதராமல் எண்ணித் துணிபவர் சிலர்; நரகென்று வாழ்வை வெறுப்பவர் சிலர்; இதுவே சொர்க்கமென்று எண்ணி மகிழ்பவர் வேறு சிலர்; எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாதவர் போல அலைபவர் ஒருசிலர்; வறுமையிலும் செம்மையோடு மன அமைதி காண்பவர்கள் வேறு சிலர்! இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கெல்லாம் என்ன காரணம்? பொருளாதார அமைப்பிலுள்ள குறைபாடுகள் என்று சிலர் கூறலாம். அது ஓரளவு சரியே தவிர முழுவதும் சரியென்று ஏற்க முடியாது. ஏனெனில் பொருளாதார அமைப்பில் முரண்பாடுகள் அதிகம் இல்லாத நாடுகளிலும் கூட மேற்கண்ட மாறுபாடுகளைக் காண முடிகிறதே! பொருள்வளம் மிக்கிருக்கும் நாடுகளில் தானே கொலை, கொள்ளை போன்ற தீய செயல்கள் அன்றாடப் பொழுது போக்காகச் செய்யப்படுவதைக் காண்கிறோம். சமுதாயத்திலுள்ள வேறு முரண்பாடுகள் தான் அம்மாறுபாடுகளுக்கெல்லாம் காரணம் என்றும் கூறுபவர்கள் உண்டு. ஆனால் அந்த முரண்பாடுகளை அகற்றிவரும் நாடுகளிலும்கூட இந்தக் குறைபாடுகளை அகற்றமுடியவில்லையே! வேறு என்ன காரணமாக இருக்கமுடியும் என்று நாம் எண்ணத் தொடங்கும்போது தான் நம் மனத்தின் மாண்பு நமக்குப் புலப்படுகிறது. ஆம்! மேலே காட்டப்பட்ட வேறுபாடுகள் அனைத்திற்குமே காரண கர்த்தாவாகவிருப்பது நம்முடைய மனமே. அம்மனம் ஒழுங்கான

நிலையில் செயல்படும்போது நன்மை பயக்கிறது; மாறாகச் செயல்படும்போது அமைதியில்லா நிலை உருவாகிறது.

இவ்வகையில் தமிழர்களாகிய நாம் பெருமைப்பட வாய்ப் புண்டு. நமது நாட்டில் மண்வளம் குறைவாக இருக்கலாம்; ஆனால் மனவளம் மிகுதி உண்டு. அம்மன வளத்தைப்பற்றியே தமிழ் இலக்கியங்களெல்லாம் எடுத்து இயம்புகின்றன. அவ் வளத்தை நம் முன்னோர் முயன்று சேர்த்துள்ளனர்; அதனால் தான் அதன் உயரிய பயனை இன்றும் நாம் அனுபவித்துக் கொண் டிருக்கிறோம். ஆட்சிப்பொறுப்பிலுள்ள தலைவர்களையெல்லாம் குருவிகளைப் போலச் சுட்டு வீழ்த்தும் கொடுமைகள் உலகின் ஒரு பகுதியில் நடந்ததைக் கண்டோம். அங்கே அரம்போலும் கூர்மையான அறிவு இருந்தது; ஆனால் மக்கட் பண்புக்கேற்ற மனநிலையில்லை. இங்கோ, 'இன்னா செய்தார்க்கும் இனிய செய்வதுதான்' பண்பாடென்று சொல்லும் நிலையில் நம் மனம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவேதான் அத்துமீறிய செயல்களில் ஈடுபட நாம் விரும்புவதில்லை; அப்படிச் செய்பவர்களையும் நம் மனம் வெறுக்கிறது. இதுவே தமிழர் கண்ட மனத்தின் தனித் தன்மையாகும். இத்தன்மையை நாம் பெற்றிருப்பதால்தான் உலகமே வியந்து போற்றும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் நாம் பெறமுடிந்தது; இத்தன்மையின் கூறுபாடுகளைக் கொண் டிருப்பதால்தான் தமிழிலக்கியங்கள் தன்னிகரற்ற இலக்கியங் களாகக் கருதப்படுகின்றன. இத்தூய தன்மை இம்மண்ணில் வேரூன்றச் செய்த பெருமை, பக்திப் பாசுரங்களைப் பாடிய அருளாளர்களுக்கு அதிகம் உண்டு. எனவே தான் தமிழர் கண்ட மனத்தின் தன்மைகளை அறிந்துகொள்ள அப்பாசுரங்களை ஆய்ந்து காணவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மனம்பற்றிய சொல்வழக்குகள்

மனத்தின் தன்மைகளையும் அது தொழிற்படும் நிலைகளை யும் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு குறிப்பிடுகின்றன என்பதைக் கண்டோம். அவைகளேயன்றி, நாட்டு வழக்கிலும் சில சொற்றொடர்கள், பழமொழிகள் ஆகியவை அத்தன்மைகளை நமக்கு நன்கு உணர்த்தும் வகையில் வழங்கிவருவதையும், அவை கள் பேச்சுவழக்கில் மட்டுமன்றி இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டு வருவதையும் காண்கிறோம். அச்சொற்களில் சிலவற்றைத் தனித் தனியே ஆய்வதும் தமிழர் மனத்தைப் பற்றி

என்ன கருதினர் என்பதை அறியத் துணைபுரியும் மாதலால் அவைகளும் இங்கு ஆராயப்படுகின்றன.

மனப் போராட்டம்

உரிமைகளைப் பெறுவதற்காகவும், தவறுகளைத் தட்டிக் கேட்பதற்காகவும் ஆங்காங்குப் போராட்டங்கள் நடப்பதைப் பார்க்கிறோம்; அத்தகைய புறப்போராட்டங்கள் நடப்பதற்கு முன்பு அகப்போராட்டம், அதாவது மனப்போராட்டம் ஒவ்வொருவர் மனத்திலும் நடைபெறுகிறது. மனத்தளவில் விடை காணமுடியாதபோதுதான் அது வெடித்து வெளிப் போராட்டமாக உருப்பெறுகிறது. மனப்போராட்டம் மனித வாழ்வில் பல நிலைகளிலும் ஏற்படுகிறது. ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன்பும் போராட்டம்; செய்த பின்னும் போராட்டம்; அவசரப்பட்டு இச்செயலைச் செய்துவிட்டோமே என்று வருந்தும் நிலை பலர் வாழ்விலும் வருவதுண்டு;நன்று தீது புரியாமல் நடந்துவிட்டு நாளெல்லாம் அதை எண்ணி நைபவர்கள் உண்டு; தீய செயல்களைப் பிறருக்குச் செய்து அதில் ஒருவர் வெற்றி பெறலாம். இது புற உலகில் அவர் பெறும் தற்காலிக வெற்றியே ஆனால் மனத்தளவில் அவருக்கு அதற்குரிய தண்டனை கிடைத்தே தீரும்; மனத்தின் வலிய சக்தியோடு போரிடும்போது எத்தகைய பெரிய மனிதனும் தோற்றே போகிறான்; அங்கு மனமே வெற்றி பெறுகிறது. எனவே மனப் போராட்டம் சிலருக்கு நீதியளிக்கும் நிலையிலும் அமைந்து விடுகிறது. எதையும் எண்ணித் துணியும் நிலை ஏற்படுமென்றால் மனப்போராட்டங்கள் ஏற்படாதிருக்க முடியும்.

மனச்சான்று

உலகில் என்றுமே மாறாத,நிலையான சான்றுகள் இரண்டே. ஒன்று இறைவனது சான்று; மற்றொன்று நமது மனச் சான்று. இந்த இரு சான்றுகளையும் எவரும் இல்லாது செய்துவிட முடியாது. தமக்கு ஏற்றாற்போல் மாற்றவும் முடியாது; காரணம், இவ்விரண்டுமே நம் கண்களுக்குத் தெரியாத நிலையில் உள்ளன. ஆனால் நிச்சயம் தம் கடமைகளைச் சரியாகச் செய்யும் ஆற்றல் உள்ளன. அதனால்தான் தமது செல்வத்தாலும், செல்வாக்காலும் நீதியைக்கூட விலைக்குப் பெற்று வந்த பல பெரிய மனிதர்கள் இறக்கும் தருவாயில் அணு அணுவாகச்

சித்திரவதைப் பட்டுத் துடித்து மடிவதைப் பார்க்கிறோம். காரணம் அவரது மனச் சான்றே அவரை வாட்டிவதைக்கத் தொடங்குகிறது. அவர் வாழ்வில் பிறருக்குப் புரிந்த தீங்குகள் எல்லாம் வெள்ளித் திரையில் படம் ஓடுவதைப்போன்று மனத் திரையில் ஓடத்தொடங்குகிறது. மனச்சான்று அப்போது அவரை மருட்டுகிறது. தாம் செய்வது தவறுயென்று தெரிந்தும் தைரியமாக அதைச் செய்தவர்கள் எல்லாம் அந்நிலையில் அதற்குக் கழுவாய் காணாது அரற்றுகின்றனர். சிலருக்கு வாழ்வு முடிவதற்கு முன்பாகவே மனச்சான்று தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிடும். அதனால்தான் முதுமைப் பருவம் அடைந்ததை யுணர்ந்த நிலையில், பாவங்கள் செய்வதை மாற்றி, அதற்குத் தீர்திறனைத் தேடுமுகத்தான் புண்ணிய இடங்களையும், ஆறு களையும் சிலர் தேடிச் செல்வதைக் காண்கிறோம். தொடக்கத்தி லிருந்தே தூயவாழ்வு வாழக்கற்றிருந்தால் முதுமையில் வருந்தும் நிலை ஏற்பட்டிருக்கமாட்டாதே! 'மனச்சான்று இல்லாதவன்' என்று தவறு செய்பவர்களைக் குறிப்பிடுகிறோம். எல்லோருக்குமே அச்சான்று உண்டு. ஆனால் சிலர் அதை ஒளித்து நடக்கமுயன்று முடிவில் அது வெளிப்படும்போது தமக்குத் தாமே தீங்கு செய்ததை உணர்ந்து வருந்துகின்றனர். மனச் சான்றின் வழியில் என்றும் நாம் நடக்கமுயன்றால் நல்லவர் களாக வாழமுடியும். இறுதிக் காலத்தில் கூற்றுவனைப்பற்றியோ, கொடுநரகைப் பற்றியோ அஞ்சவேண்டிய அவசியமில்லை.

மனமுடைதல்

அளவறிந்து, நிலையுணர்ந்து வாழமுற்பட்டால், வேண்டாத ஆசைகளுக்கோ, விபரீதமான முடிவுகளுக்கோ அவசியமிருக்காது. அப்படியில்லாத நிலை ஏற்படும்போதுதான் தோல்விகளைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகிறது; உருக்குப்போன்றிருக்க வேண்டிய மனம் உடைகிறது; அதன் விளைவுதான் தற்கொலை கள்போன்ற திடீர் முடிவுகள். நல்ல உணர்வுகளாகிய உரங்களை யிட்டு மனப்பயிரைப் பாதுகாத்து வளர்ப்போமென்றால் மனமுடைதல், மனமுறிவு, மனக்கலக்கம், மனக் குழப்பம் போன்ற நிலைகளெல்லாம் ஏற்படமாட்டாது. தெளிந்த சிந்தனைகளை நம் மனம் பெற்றிருக்குமென்றால் எடுக்கும் முடிபு களும், செய்யும் செயல்களும் சிறந்தனவாகவே அமையும். வாயளவோடில்லாமல் மனத்தளவிலும் அன்பு கனிந்த உறவு

நிலை உருவாகுமென்றால் மனத்தாபம் என்ற மனவேறுபாடுகள் உலகில் தோன்றவேமாட்டாது. கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடு; நண்பர்களிடையே கருத்து முரண்பாடு பெற்றோர் பிள்ளைகளிடையே மனவேறுபாடு இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் மனத்தெளிவு இல்லாத நிலையில் ஏற்படுவனவே. ஒருவரை ஒருவர் மனத்தளவிலும் புரிந்து விரும்பும் நிலை ஏற்பட்டால் மனமுறிவு ஏற்பட்டுப்பின் மணமுறிவு ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளெல்லாம் ஏன் தோன்றப் போகிறது? அப்படிப்பட்ட போலிமன உறவுகளைக் கண்டுதான்.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்"

என்று வள்ளலார் இறைவனை வேண்டினார் உள்ளும் புறமும் ஒன்றாக அமையுமென்றால் மனம் தீய வழிகளில் எப்படிச் செல்லமுடியும்? பின்பு அது உடையும் நிலை எப்படி உருவாகும்? உணர்ந்து நடத்தல் நலம்பயக்கும்.

மனக்கோட்டை

ஒவ்வொருவருக்கென்றும் வாழ்வில் சில இலட்சியங்கள் இருக்கத்தான் செய்யும்; இருத்தலே அவசியம். அப்படியில்லாதவர் வாழும் வாழ்வு பயனற்றது; திசை தெரியாமல் செல்லும் கப்பலைப் போன்றது அப்படிப்பட்டவர்கள் வாழ்வு என்ற பெயரில் கெட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

"குறிக்கோ ளிலாது கெட்டேன்"

என்று மனம்வருந்திக் கூறுகிறார் அப்பர் பெருமான். குறிக்கோள் இல்லாமையினால் கெடுதல் ஒருநிலை; தீய எண்ணங்களையும் தீய குறிக்கோள்களையும் கொண்டு கெட்டழிபவர்களும் உண்டு. அப்படிப்பட்ட குறிக்கோள்கள் ஆராத்துயரில் நம்மை ஆழ்த்திவிடும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதுவே குறள் கூறும் நெறி. உயர்விற்கு மாறாகத் தாழ்வை உள்ளி, அதை அடைவதற்காக மனக்கோட்டைகளைக் கற்பனைக் கற்களால் கட்டத்தொடங்குகிறோம். அம்மனக்கோட்டைகள், நிலைத்து நிற்கும் தன்மையின்மையால் விரைவிலேயே இடிந்து வீழ்கின்றன. ஆம்! மனக்கோட்டை மண்கோட்டையாகிவிடுகிறது. அப்போது

ஏற்பட்ட ஏமாற்றத்தால் மனமுடைந்து வாழ்வே முடியும் நிலையும் உருவாகிறது.

''எண்ணிய முடிதல்வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்'' என்ற பாரதி வழியை உணர்ந்து நடந்தால் தேவையற்ற மனக் கோட்டைகளைக் கட்டி வருந்தும் நிலை ஏற்படாது.

மனக் கோட்டம்

நன்று எது? தீது எது? என்பதனை நாம் நன்கு அறிவோம்; அதனை நமக்கு அறிவிப்பதற்கென்றே எண்ணற்ற இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கியங்களுக்குள்ள தனிச் சிறப்பே அது தாங்கி நிற்கும் உயர்ந்த கருத்துகளே! அப்படிப் பட்ட இலக்கியங்களைக் கசடறக் கற்றும்கூட 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற குறள் நெறியை மறந்து வாழ்பவர்களைக் காண்கிறோம். மனக்கோட்டத்தைத் தீர்ப்பதே நூலின் நோக்கம் என்று கூறுகிறார் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர்.

'மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு'

என்பது அவர் தம் வாக்கு. ஆனால் நூல்களைப் படித்துணர்ந்த பின்பும் பலர் மனக்கோட்டமுடையவர்களாகவே காணப்படு கின்றனரே! நேர்மைக்கு மாறாகவே நடக்கின்றனரே! பிறரை வருத்துவதில் மனநிறைவு காண்கின்றனரே! பிறரது ஆக்கங் கண்டு பொறாது தீச்செயல்களில் முனைகின்றனரேயென்றால் கற்ற கல்வியால் பெற்ற அறிவு உணவு, செரித்து இரத்தமாக உருப்பெற்று உடலை வலுவூட்டுவதற்கு மாறாகச் செரிக்காம லேயே கழிவாகச் சென்றுவிட்டது என்பதையே உணர்த்துகிறது. அத்தகையோர் கற்றும் கல்லாதவர்களேயாவர். எனவே, மனம் தீய வழிகளில் செல்லாது நல்வழியில் செல்ல ஊக்குவிக்கும் வகையில் நமது அறிவு அமையவேண்டும். அந்நிலையில்தான் மனக் கோட்டம் மாற்றப்படும். இல்லையேல் அக்கோட்டம் மேலும் வளர்ந்துகொண்டுதான் செல்லும்.

மனக்கவலையும் மகிழ்ச்சியும்

பொருள் இல்லாதவர் வறுமையை எண்ணிக் கவலைடைய வது இயல்பு; ஆனால் எல்லாம் இருந்தும் இல்லாதவர் போலத் தம்மை எண்ணிக் கவலையடைபவர் உண்டே! துன்பம் வந்துற்ற போது அதைப் போக்கும் வழியறியாது கவலையடைபவர்

உண்டு. ஆனால் துன்பம் வருவதற்கு முன்பாகவே வந்ததுபோல எண்ணிக் கவல்பவர் உண்டே! இதிலிருந்து நாம் உணரவேண்டிய ஓர் உண்மையும் உண்டு. கவலையும் மகிழ்ச்சியும் நமக்கு நாமே ஆக்கிக் கொள்வது தான். நம்மை வருத்துவதற்கென்று நாமே பின்னிக் கொள்ளும் கற்பனை வலைகள் தான் அவைகள். நாம் நினைத்தால் கவலையையும் மகிழ்ச்சியாக மாற்றமுடியும்.

'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்' என்பதல்லவா தமிழ் மறை! 'துன்பம் வருவது இயல்பான ஒன்று; மன உறுதியோடு வாழமுற்பட்டால் வந்த துன்பம் தானாகவே விலகிச் சென்றுவிடும்' என்ற தெளிவு இருக்குமென்றால் கவலை என்ற சொல்லுக்கே பொருள் இல்லாமற் போய்விடுமே! அத்தகைய தெளிவையும் உறுதியையும் நாமே இயல்பாகப் பெற முடியாத நிலை ஏற்படும்போது இறைவன் திருவடி அதை நமக்கு அளிக்கும் என்பதையே சமயச் சான்றோர்கள் உணர்த்துகின்றனர்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்பது தமிழ் மறை. இறைவன் திருவடியே மனக்கவலை மாற்றும் என்பது தமிழர் கண்ட முடிபு.

மனக்குறையும் நிறையும்

சிலருக்கு எவ்வளவு பொருளைத் தந்தாலும் மனநிறைவு ஏற்படுவதில்லை; சிலருக்கு எவ்வளவு அரிய உதவிகளைச் செய்தாலும் குறை கூறிக் கொண்டே இருக்கின்றனர். அவர்களைத் திருப்திப்படுத்துவதென்பது இயலாத காரியம். வாழ்வின் பல நிலைகளிலும் 'வேண்டும் வேண்டும்' என்ற குரலின் எதிரொலியே பலருக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறது. 'வேண்டாமையை' விழுச் செல்வமாகக் குறிப்பிட்டார் திருவள்ளுவர். அச்செல்வத்தைப் பெற்றவர்கள் உலகில் சிலராகத்தானே இருக்கின்றார்கள்! ஆசைக் காற்றில் சிக்கிய இலவம் பஞ்சாகவே பலரது வாழ்வு அலை மோதிக்கொண்டிருக்கிறது. தேவைகளை நிறைவு செய்வதால்மட்டுமே மனக்குறைகள் தீர்ந்துவிடுவதில்லை; அடுத்த தேவைகள்; பின்பு அதை நிறைவேற்றுவதில் குறைகள்; இப்படி வாழ்வு முழுவதும் தொடர்கதையாகவே அது ஆகிக்கொண்டிருக்கும். அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு ஒரே வழிதான்

உண்டு. 'போதுமென்ற மனத்தைப்' பெறுவதுவே அது! இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாக எண்ணிப் பழக வேண்டும்; செல்வம் மிக்கிருந்தபோதும், வறுமை வாட்டும் போதும் ஒரே நிலையில் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். அப்போது நம்மை வருத்தும் குறைகளே இருக்கமுடியாது.

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து"

என்ற பழமொழியும் இவ்வுண்மையினையே உறுதிப்படுத்தும்.

மனம்போல வாழ்வு

ஒவ்வொருவரின் வாழ்வும் அவரவர் மனத்திற்கு ஏற்பவே அமைகிறது. தூயமனமுடையவராய் இருந்தால் அவர் வாழ்வு அமைதியும், மகிழ்ச்சியும் நிரம்பியதாக அமைகிறது, அத்தகையோர் பிறர்க்கென முயலும் பெருநோக்குடையோராய் வாழ்கின்றனர்; அவர்களது அருமையும் பெருமையும் கருதிச் சான்றோர் என்று போற்றிப் பரவுகிறோம். மாறான மனத்தைப் பெற்றவர்கள் தீய செயல்களைச் செய்து அமைதியற்ற நிலையில் 'ஏதோ பிறந்தோம், எதற்கோ வாழ்கிறோம்' என்று வாழ்ந்து மடிகின்றனர். அத்தகையோரை 'வாழ்ந்தனர்' என்ற சொல்லால் குறிப்பதுகூடத் தவறு என்பார் பாரதி. "நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்று சொல்வதன் மூலம், நாயைப் போலவே அத்தகையோரும் பிழைப்பு நடத்தினர் என்று குறிப்பதே சரியென்பது அவர் கருத்து.உயர்ந்த குறிக்கோளுடைய வாழ்வை மட்டுமே வாழ்வு என்று குறிப்பிடவேண்டும் என்பது அவர் உணர்த்தும் உண்மையாகும்.

தமிழர்கள் பிழைப்பு நடத்துபவர் அல்லர்; "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள்! சிலர் பிழைப்பு நடத்தும் நிலையிலும் இருக்கலாம்.அவர்கள் உருவத்தால்மட்டும் தமிழர்களேயன்றி மனத்தாலும் தமிழர்கள் அல்லர். தமிழ் மனம் நம் அனைவர்க்கும் இருக்குமென்றால் இம்மண்ணுலகே பொன்னுலகாய் மாறிவிடுமே! கடல்போன்று ஆழமும், மலைபோன்று உறுதிமிக்க உயர்வும், வான்போன்று விரிந்து பரந்த தன்மையும் கொண்டதல்லவா தமிழர் கண்ட மனம்!

பின்னிணைப்பு

நெஞ்சம்-சொற்பட்டியல்

நற்றிணையில் நெஞ்சம்

ஒழிக மாளநின் நெஞ்சத் தானே
நேர்புடை நெஞ்சந் தாங்கத் தாங்கி
உரியை வாழியஎன் நெஞ்சே
பருவரல் நெஞ்சமொடு பல்பட ரகல
நெஞ்ச நடுக்குறூஉந் துஞ்சா மறவர்
பெரும்புலம் புற்ற நெஞ்சமொடு பல நினைந்து
நினக்கோ அறியுநன் நெஞ்சே
அன்பிலை வாழியெம் நெஞ்சே
நொதுமல் நெஞ்சங் கொள்ளாது
சென்ற நெஞ்சஞ் செய்வினைக் குசாவாய்
அவல நெஞ்சினம் பெயர உயர் திரை
நம்வயிற் பிரிந்த கொள்கையொடு நெஞ்சத்து
சொல் வெளிப் படாமை மெல்லவென் நெஞ்சிற்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்
அஞ்சுவல் தோழிஎன் நெஞ்சத் தானே
பைதல் நெஞ்சம் உய்யு மாறே
உய்த்தன்று மன்னே நெஞ்சே
விடுத்தற் காகாது பிணித்தவென் நெஞ்சே
எவ்வ நெஞ்சத்து எஃகெறிந் தாங்கு
கண்ணொடு வாராஎன் நாரில் நெஞ்சே
ஒன்று தெரிந்து உரைத்திசின் நெஞ்சே
பட்டனை வாழிய நெஞ்சே
நெஞ்சே நல்வினைப் பாற்றே
நொது மலாட்டிக்கு நோமென் நெஞ்சே

வல்லே நெஞ்சம் வாய்க்க நின் வினையே
அஃதே நினைந்த நெஞ்சமொடு
நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும்
உள்ளல் ஆகா உயவு நெஞ்சமொடு
நோய்மலி நெஞ்சிற்கு ஏமமாம் சிறிதே
எய்தினை வாழிய நெஞ்சே
பின்னிலை முனியல் மா நெஞ்சே
பேதை நெஞ்சம் கவலை கவற்ற
மையல் நெஞ்சம் என்மொழிக் கொளினே
நெஞ்சம் கொண்டமை விடுமோ
நெஞ்சம் அவர்வயின் சென்றென
பேரஞர் பொருத புகர்படு நெஞ்சம்
நிலம் பரந்து ஒழுகும் என் நிறையில் நெஞ்சம்
நம்வயின் நினையும் நெஞ்ச மொடு
இன்றென் நெஞ்சம் போல
சேரியம் பெண்டிர் நெஞ்சத்து
விளிந்தன்று மாதவத் தெளிந்த என் நெஞ்சே
ஈரநெஞ்சின் தன்வயின் விளிப்ப
பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு
நோவினி வாழிய நெஞ்சே
போதல் ஒல்லாளென் நெஞ்சத் தானே
இன்சொல் மேவலைப் பட்டவென் நெஞ்சுண
எஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி
நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி
நிறைய நெஞ்சத் தன்னைக்குய்த் தாண்டு
கனியா நெஞ்சத் தானும்
காமர் நெஞ்ச மொடு அகலா
காமர் நெஞ்சத் துரப்ப யாந்தனி
வலியா நெஞ்சம் வலிப்பச் சூழ்ந்த
பிரிவின் நெஞ்சென்னும் ஆயின்
நெஞ்சுநடுக் குறூஉ மவன் பண்புதரு படரே
நெஞ்சு நெகிழ் செய்ததன் பயனோ
உள்ளம் பிணிக் கொண்டோன் வயின் நெஞ்சம் செல்லல்
அருகா தாகிய வன்கண் நெஞ்சம்
பற்றாய் வாழிஎம் நெஞ்சே
காமர் நெஞ்சமொடு பலபா ராட்டி

நெடுநீர்ச் சேர்ப்பன் தன் நெஞ்சத் தானே
பொருண்மலி நெஞ்சம் புணர்ந்துவந் தன்றே
நோகோ யானே நோம் என் நெஞ்சே
ஆடுகொள் நெஞ்சமொடு அதர் பார்த்து ஒல்கும்
செம்மல் நெஞ்சமொடு தாம் வந்து பெயர்ந்த
உண்மலி நெஞ்சமொடு வண்மை வேண்டி
புலரா நெஞ்சமொடு புதுவ கூறி
தேறா நெஞ்சங் கையுறுபு வாட
உலகமொடு பெருங்கொல் என் அவலமுறு நெஞ்சே
புணர்ந்தாம் போல உணர்ந்த நெஞ்சமொடு
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி
நெஞ்சின் இன்புறாய் ஆயினும்
நெஞ்சுவடுப் படுத்துக் கெடஅறி யாதே
வறிதுகு நெஞ்சினள் பிறிதொன்று சுட்டி
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு
காணினி வாழியெம் நெஞ்சே
சிறிய நெஞ்சத்து அகல்வு அறியேனே
கெடுவறி யாய்என் நெஞ்சத் தானே!

புறநானூற்றில் நெஞ்சம்

நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்
பெறல் கூடும் இவன் நெஞ்சுறப் பெறின் எனவும்
நெஞ்சு நடுங் கவலம் பாய
மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க் கோருதலை
நெஞ்சுடைய புகன் மறவரும்
காதல் நெஞ்சினும் மிடைபுகற் கலமரும்
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ள
அருந்தே மாந்த நெஞ்சம்
இருவர் நெஞ்சமும் உவப்ப
கவலை நெஞ்சத் தவலம் தீர
நெஞ்சத் திறப்போர் நிற்காண் குவரே
வழிநாட் கிரங்கு மென் னெஞ்சம்
காமர் நெஞ்சம் ஏமாந் துவப்ப
எழுவினி நெஞ்சஞ் செல்கம்
அவல நெஞ்ச மொடு செல்வனிற் கறுத்தோர்

நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு
எழுமதி நெஞ்சே துணியுமுந்து றுத்தே
ஆரஞ ருற்ற நெஞ்சமோ டொராங்கு
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்து
நெஞ்சர வீழ்ந்த புரைஸம யோனே
உலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே
மறங்கெழு நெஞ்சங் கொண்டொளித் தோளே
நெஞ்சமர் காதலரமுத கண்ணீர்
அறநெஞ்சத் தோன் வாழ நாளென்
அறவை நெஞ்சத் தாயர் வளரும்
மறவை நெஞ்சத் தாயி லாளர்
நெஞ்சமர் கா ந னின்வெய் யோளே
வெந்திற லெஃகம் நெஞ்சுவடு விளைப்ப

திருநாவுக்கரசர் தேவாரத்தில் நெஞ்சம்

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்	4-1:2
நினைப்பவர் நெஞ்சத்துளானும்	4-4:3
கரவாடும் வன்னெஞ்சர்க் கரியாரை	4-7:1
நெஞ்சே நீ நினையாய்	4-9:6
தன்றொண்டர் நெஞ்சிருள் கூரும் பொழுது	4-19-8
நெஞ்சினைத் தூய்மை செய்து	4-23:9
பணிபவர் நெஞ்சத்துள்ளார்	4-25:5
வல்லவா ரடைந்து நெஞ்சே	4-25:6
நீதியால் நினைசெய் நெஞ்சே	4-25:7
பக்தர் நெஞ்சுள் தேனுமின்ன முதுமானார்	4-29:1
நெஞ்சத்துள் விளக்கு மாகி	4-39:2
பள்ளியர் நெஞ்சத்துள்ளார்	4-29:3
வாமனை நினைந்த நெஞ்சம்	4-37:2
தேனோடாலியா வெழுந்த நெஞ்சம்	4-29:2
அடுத்துநின் றுன்னு நெஞ்சே	4-39:5

வந்தெனது நெஞ்சங் கொண்டார்	6-249-1
எப்போது மென் னெஞ்சத் துள்ளார் தாமே	6-250:3
நெஞ்சுணர வுள்புக்கிருந்த போது	6-251:3
தகவுடையார் நெஞ்சிருக்கை கொண்டார்	6-253:6
நின்ற நெய்த் தானா வென்னெஞ்சுளாயே	6-255:10
தளர்ந்துமிக நெஞ்சமே யஞ்சவேண்டாம்	6-256:4
ஆங்காரந் தவிர் நெஞ்சே	6-256:10
நினையா வென்னெஞ்சை நினைவித்தானை	6 257:1, 2, 3, 4
வஞ்ச நெஞ்சினை ஏற்றேன்	6–261:2
விரும் பாதார் நெஞ்சத் தென்றும்	6-262:4
நிறையுடைய நெஞ்சினிடையாய்	6-270:1
தொழு மடியார் நெஞ்சினுள்ளே	6-275:10
கலந்துருகி நைவார்தந் நெஞ்சினுள்ளே	6-283:9
நெஞ்சுண்டென் னினைவாகி	6-278:2
என்னெஞ்சத் துள்ளே நின்ற எம்மானை	6-294:9
பரிவோர் நெஞ்சில் உற்றானை	6-294:9
என்னெஞ்சத் துண் ணீங்கா எம்மான்	6-295:7
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே	6-300:10
கள்ளாத அடியார் நெஞ்சில் சேர்ந்தானை	6-302:8
நினைப் பார்த நெஞ்சானை	6-304:9
நிலையிலா நெஞ்சந் தன்னுள்	6-309:4

திருவாசகத்தில் நெஞ்சம்

இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்	சிவ
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட	சிவ
பதைத்துருகும் பாழ் நெஞ்சே	திருச்சதகம்
வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே	திருச்சதகம்
வேட்ட நெஞ்சாய்	திருச்சதகம்
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய் உருகாதால்	திருச்சதகம்
நெஞ்சங் கல்லாம்	திருச்சதகம்
துணையிலி பிணநெஞ்சே	திருச்சதகம்
மாறாடுதி பிணநெஞ்சே	திருச்சதகம்
மதியிலி மடநெஞ்சே	திருச்சதகம்

நினைந்துளம் பெருங்களன் செய்ததுமிலை நெஞ்சே	திருச்சதகம்
நெஞ்சுரு காதேன்	திருச்சதகம்
இரும்பு நெஞ்ச வஞ்சனேன்	திருச்சதகம்
யானே பொய் என் நெஞ்சம் பொய்	திருச்சதகம்
சீறிலாத நெஞ்சுடைய நாயினேன்	திருச்சதகம்
வன்னெஞ்சப் பேதையர் போல்	திருவெம்
நெஞ்சுருக்குந் தன்மையினான்	திருவெம்
வன்னெஞ்சம்	திரு.கோ.து
கன்னெஞ்சு	திரு.கோ.து
நயந்து நெஞ்சம்	திருத்தெள்
கற்போலும் நெஞ்சம் கசிந்துருக	திருத்தெள்
நெஞ்சினுள்ளே புகுந்தருளி	திருத்தெள்
நெஞ்சுளே நின்று அமுதமூறி	திருப்பொன்
மன்னுவதென் னெஞ்சில்	அன்னை
நெஞ்சத் திருளகல	குயில்
அழுக்கடையா நெஞ்சுருக	திருச்சதா
நிச்சம்என நெஞ்சின் மன்னி	உயிருண்ணி
நீ்ன்ப வெள்ளத்துள் நீந்திக்குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்	திருப்பாண்டி
நெஞ்சம் உருகி நிற்போமே	யாத்திரைப்
இருந்துறையும் என்நெஞ்சத் தின்று	திருவெண்பா
சிந்தித்து, இருந்திரந்துகொள் நெஞ்சே	திருவெண்பா
நெஞ்சமே, உண்டாமோ கைம்மா றுரை	பண்டாய
மருளுங்கெட நெஞ்சே வாழ்த்து	பண்டாய
பெரியானை நெஞ்சே	பண்டாய
நெஞ்சாய துயர்கூர	அச்சோப் பதிகம்

திருமந்திரத்தில் நெஞ்சம்

பேர் நந்தி தன்னை	கடவுள் வாழ்த்து
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்	கடவுள் வாழ்த்து
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின்றாரே	கடவுள் வாழ்த்து
புனஞ்செய்த நெஞ்சிடை போற்ற வல்லார்	கடவுள் வாழ்த்து
சூடுவன் நெஞ்சிடை வைப்பன்	கடவுள் வாழ்த்து
என் செய்வீர் ஏழை நெஞ்சீரே	அறஞ் செய்வான் திறம்

நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி னீரே	அறஞ் செய்வான் திறம்
மறப்பிலர் நெஞ்சினுள்	தன் வரலாறு
விலகுறு நெஞ்சினை	மகளிர் இழிவு
... நாதன்	
இடமுடையார் நெஞ்சத் தில்லிருந்தானே	கல்வி
... நெஞ்சத்து	
நில்லாக் குரம்பை நிலையென்றுணர் வீர்கள்	கல்லாமை
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதே	கல்லாமை
விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே	அழிப்பு
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டு	மறைப்பு
பற்றிநின்றார் நெஞ்சில்	பொறையுடைமை
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே	பெரியாரை
இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே	594
ஓசையிறந்தவர் நெஞ்சினுள்	751
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது	810
பாலிக்கும் நெஞ்சம்	847
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்	957
தனிநாயகன்றனோ டேன் னெஞ்சம் நாடி	1228
தணிபவர் நெஞ்சினுள் தன்னருளாகி	1352
கனமவை யற்றுக் கருதிய நெஞ்சம்	1354
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே	1418
கசியாத நெஞ்சம் கசியக்கசிவித்து	1459
அதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே	1476
இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே	1616
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே	1706
நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவசம் கண்ணாம்	1713
நின்று தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே	1717
கோயிலென் நெஞ்சம்	1718
வேண்டிக் கிடந்து விளக்கொளி யானெஞ்சம்	1762
நெஞ்சினும் ஈசன் நிலைபெறு காரணம் அஞ்சமுதாம்	1795
என் நெஞ்சிடங்கொள்ள வருந்தன்மை	1812
கொல்லை செய்நெஞ்சம் குறிப்பறியாதே	1978
தரிக்கின்ற நெஞ்சச் சகளத்தினுள்ளே	2004
குலைவாய் நெஞ்சத்து மூழ்கும் உளத்து	
நகைக்கின்ற நெஞ்சுள்	2174
நெஞ்சம் தாய நிமலன்	2230

அறிவுடையார் நெஞ்சகலிட மாலது 2323
தரித்து நின்றான்டி தன்னிட நெஞ்சில் 2392
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற்றுயக்கற
நிறையறிவோ மென்பர் நெஞ்சிலர் தாமே 2472
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே 2473
புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில் 2518
வேட்கைவிட்டார் நெஞ்சில்... 2569
நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று 2657
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே 2670
துளிக்கும் அருட்கண்ணீர் சோர் நெஞ்சுருக்கும் 2732
நீலிக் கிறையுமே நெஞ்சின் நிலை தளர்ந்து 2874
நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம் 2929
என்னெஞ்சம் ஈசன் இணையடி தாஞ்சேர்ந்து 2932
அடியார் தங்கள் நெஞ்சம் புகுந்து நின்றானையே 2943
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சி 2971

தாயுமானவர் பாடல்களில் நெஞ்சம்

நெஞ்சந் துடித்தயருவேன்
காயகற்பந் தேடி நெஞ்சு புண்ணாவர்
பொய்வளரும் நெஞ்சினர்கள்
நெஞ்சது பகீரெனும்
காதலித்திடு நெஞ்சமும்
தீநெஞ்சம் அளவளாவ
படபடென நெஞ்சம் பதைத்து
கல் நெஞ்சனுக் கெளியையோ
அகங்கார மென்னும் கல்லைப் பிளந்து நெஞ்சகமான
பூமிவெளி காணத்திருத்தி
என் கல்நெஞ்சம் உருக விலையே
இரும்பு நேர் நெஞ்சகக் கள்வன்
ஏங்குதே நெஞ்சம் ஐயோ
ஆடி நெஞ்சுருகி நெக்காடவே
சன்மார்க்க நெஞ்சமுள எனக்கும்
புண்ணளர் போல் நெஞ்சம் புலம்பி

நினைப்போர் நெஞ்சம் மன்றாக இன்பக்கூத்தாட
மடம்பெறு பாழ் நெஞ்சாலே அஞ்சாதே
இரும்போ கல்லோ மரமோ என்னும் நெஞ்சை
நினைக்கவோ அறியா தென்றன் நெஞ்சமே
நெஞ்சுகந் துன்னை நேசித்த
முக்கணெங் கோவைப் பணிநெஞ்சே
பாதமே கதி மற்றிலை பாழ் நெஞ்சே
மற்றுனக்கு மயக்கமென் வன்னெஞ்சே
என்றுணராய் நெஞ்சே
சுற்றமோ நமைக்காக்குஞ் சொலாய் நெஞ்சே
களம் பெறு வஞ்ச நெஞ்சினர்
நின்னை இரந்து நெஞ்சுடைந்து
வஞ்சனை அழுக்காறாதி வைத்திடும் பாண்டமான நெஞ்சனை
அன்பர் நெஞ்சந் தித்தித் துருக
மரப்பான்மை நெஞ்சினன்
அறிந்து நெஞ்சமே
தன்னெஞ்ச நினைப்பொழியாது
வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ
இரும்பு நெஞ்சோ வைரமான கன்னெஞ்சோ
அலது மண்ணாங்கட்டி நெஞ்சோ எனது நெஞ்சம்
பலகாலும் நெஞ்சே நான் மொழிந்தேன்
சிந்தை செய் மடநெஞ்சே
நன்னர் நெஞ்சந் தன்னலமும்
வாட்டமில் நெஞ்சங் கிண்ணமாச் சேர்த்து
நெஞ்சகமாங் கற்பரந்தாங்கு
என்நெஞ்சம், மனமற்ற பூரணத் தொட்டிக்குளே முடக்குவன்
என்நெஞ்சம் ஐயா தீயுண்டிருந்த மெழுகலவோ
முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே
சுழல் நெஞ்சமாகிய பாதரசம்
அழுக்கார்ந்த நெஞ்சுடையேனுக்கு
என்கொல் கல்நெஞ்சமே
கள்ளம் பொருந்தும் மடநெஞ்ஞ்சம்
தெளிந்த நெஞ்சமே
பொல்லாத மயக்கத்தி லாழ்ந்தாவதென்ன புகல் நெஞ்சே
வாராய் நெஞ்சே உன் துன்மார்க்கம் யாவையும்
வெறும் புன்மை நெஞ்சே
நெஞ்சம் புண்ணாகத் தளரவைத்தாய்

சுத்த மூட நெஞ்சே
திருவருளில் நெஞ்சேயாம் நிற்பதல்லால்
பாராயோ நெஞ்சே பகர்
அல்லேறு நெஞ்சினேன்
மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சே
நித்தம் அன்பு பூணக்கருது நெஞ்சே
கல்லும் உருகாதோ கல்நெஞ்சே
நெஞ்சேஉன் ஆள் தானான் ஐயமில்லை
இழுக்கடித்தாய் நெஞ்சேநீ
நெஞ்சே தங்குஞ் சுகநீ சலியாதே
மெய்யைப் பொய் என்றிடவும் மெய்யணையாய்
பொய்ந் நெஞ்சே
நெஞ்சே, உன்னால் இல்லைபிறப்ப தெனக்கே
நெஞ்சே உனையோர் காசாமதியேன் நான்
நெஞ்சப் பிறப்புமது
நெஞ்சே பெரும்பிறவி சாராமல் கற்றோமே மோனக் கரு
பாசத்துட் செல்லாதே பல்கா லும் பாழ்நெஞ்சே
நெஞ்சே எனைப்போல் வாழா து வாழ்ந்தழியா
வண்ண மிருப்பாயே
மருட்பேயர் போலிருக்க வாகண்டாய் வஞ்சநெஞ்சே
ஆனந்த மாக்கடற்கீழ் நெஞ்சமே என்போல நீயமுந்த வாராயோ
ஓராயோ நெஞ்சே
ஓயாமல் உன்னிஉருகு நெஞ்சே
சந்தத நெஞ்சே பரத்திற் சாரின் இன்பம் உண்டாமே
